Vol. 7. No 40 8th November 1936. Price 2 As Regd. No 2514

ஸ்ரீ சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY

ஆகாயத்தில் !

வருட சந்தா ரூபா 6. சிலோனுக்குத் தனிப்பிரதி 14 சதம். மலாய நாடுகளுக்கு தனிப்பிரதி 15 காசு. வெளிநாடுகளுக்கு ரூ. 10.

அடைவதற்கு இயற்கையான
விருப்பம்

வுட்வர்ட்ஸ்
கிரைப் வாடர்

குழந்தைக்கு
ஆரோக்கியத்தை தரும்

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON, ENGLAND

ஜம்புகேஸ்வரம் (திருச்சி) கோவிலும் குளமும்.

கலாசாலைப் பிரதிக்ஞை

—:[o]:—

"ஆளரி"

கள்ளிக்கோட்டை மனோரமா ரசாயன மருந்தக் கடையின் சொந்தக்காரராகிய ராமசாமி ஒரு நாள் காலை தன் காரியாலயத்தில் உட்கார்ந்து தமது கடைக் கணக்குகளைக் கவனித்துக்கொண்டிருந்தார். கடை வேலைக்காரன் சங்குண்ணி மருந்துகளை விற்றுக்கொண்டிருந்தான். நாகரிக உடைதரித்து மருந்து வாங்க வந்த ஒருவரைப் பார்த்ததும் ராமசாமி ஆச்சரியமடைந்தவராய் "சுப்புசாமியா அது, எங்கிருக்கிறாய் அப்பா, சௌக்கியமா? பார்த்து வெகு நாளாயிற்றே" என்ற பல கேள்விகளை ஒருங்கேகேட்டார். வந்தவரும் ஆச்சரியத்தில் மூழ்கியவராய்எதுவும் பேச முடியாத நிலையில் பிரமைகொண்டு நின்றார்.

ராமசாமியும் சுப்புசாமியும் பாலிய நண்பர்கள்; ஒன்றாகப் படித்தவர்கள். ஆரம்பப் படிப்பை தங்கள் கிராமமாகிய கிரனூரில் முடித்துக்கொண்டு உயர்தரப் படிப்புக்காக சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலையில் சேர்ந்தனர். இவ்விருவர் பெற்றோர்களும் தனவந்தர்களல்லர். சுமார் நாலைந்து ஏக்கர் பூமியும் சொந்த வீடுகளுமுடைய சாதாரண குடும்பத்தினர். பிள்ளைகளின் படிப்புக்காக இந்த சொற்ப ஜீவனத்தையும் விற்றுவிட வேண்டியவர்களாயினர்.

காலேஜில் பேச்சுவன்மையை விருத்தி செய்ய ஓர் சங்கம் ஏற்படுத்தல் வேண்டுமென சுப்புசாமி யோசனை கூறினான். ராமசாமியும் ஆமோதிக்கவே, எதைப்பற்றிய சங்கம் ஆரம்பிப்பதென்று பலவித யோசனைகள் செய்து கடைசியில் "கலியாண எதிர்ப்புச் சங்கம்" என்று ஒன்றை ஸ்தாபிக்க வேண்டுமென்று தீர்மானித்தனர். அவ்வாறே ஓர் சங்கம் மறு சனிக்கிழமை நிறுவப்பெற்றது. ராமசாமி தலைவனாகவும் சுப்புசாமி காரியதரிசியாகவும் நியமனம் பெற்றனர். பாடசாலைப் பிள்ளைகளில் பலர் அங்கத்தினராயினர். உள்ளூர் பிரமச்சாரி சங்கத்தைச் சேர்ந்தவர்களும் ஆதரவளிக்கவே சங்கம் பலத்துவிட்டது. வாரமொரு முறை சங்க அங்கத்தினரும் மாதமொருமுறை வெளியூர்ப் பிரமுகர்களும் உபன்னியாசம் புரிதல் வழக்கமாயிற்று. வருடக் கொண்டாட்டங்கள் தேசத் தலைவர்களைக் கொண்டு நடத்தப்பெற்றது. சங்கத்தின் முக்கிய நோக்கம், மனிதப் பிறவியின் லக்ஷியம் பொதுஜன உழைப்பே யாதலால் அங்கத்தினர் விவாகம் செய்துகொள்ளல் கூடாதென்பதும், கலியாணம் நடக்குமிடங்களிலெல்லாம் சாத்தியமான வரையில் அவற்றை நடைபெறாதபடி தடைசெய்ய வேண்டுமென்பதுமாம். அங்கத்தினர் எக்காரணத்தை முன்னிட்டும் விவாகம் செய்துகொள்வதில்லை என்று தெய்வ சன்னிதியில் பிரதிக்ஞா பத்திரம் எழுதித்தரல் வேண்டும். அங்கத்தினரின் வாரப் பிரசங்கங்களில் கலியாணக் கடன், மனைவி தொல்லை, குழந்தைகள் தொந்திரவு, காதல் மோசம் முதலியவற்றைப்பற்றிப் பல உருக்கமான விஷயங்கள் வற்புறுத்தப் பெறும். குடும்பத்தில் சதாகாலமும் உழல்வோருங்கூட இத்துணை நுட்பமான விஷயங்களை அறிந்திருக்கமாட்டார்கள்.

இராமசாமியும் சுப்புசாமியும் இத்தகைய சங்கத்தை நடத்தும் விஷயம் அவர்கள் பெற்றோருக்கு எட்டியதும் அவர்களடைந்த துக்கத்திற்கு அளவில்லை. பிள்ளைகள் படிக்க வைத்த செலவை ஒன்றுக்கு இரண்டாக வரதக்ஷிணை மூலம் வசூலித்து விடலாமென்று அவர்கள் நினைத்திருந்தனர். அதற்கிணங்க இவ்விரு பிள்ளைகளின் படிப்புத் திறமையைக் கண்ட பலர் பெண் கொடுப்பதாக முன்வந்தனர்; நல்ல தொகைகளை வரதக்ஷிணையாகக் கொடுக்கவும் இசைந்தனர். எனினும், இராமசாமியையும் சுப்புசாமியையும் எவராலும் திருப்ப முடியவில்லை. பெற்றோர்கள் நல்ல வார்த்தைகள் சொல்லியும், அழுதும், அதிகாரிகளைக் கொண்டு பயமுறுத்திப் பார்த்தும், தங்கள் முயற்சி வீணானதைக் கண்டு மனம் ஒடிந்து கிராமத்திற்குச் சென்றனர். இதன் பின்னர் பெற்றோர்கள் இவர்களுக்குப் பணமனுப்புவதையும் நிறுத்திவிட்டனர். கடைசி ஒரு வருஷத்தில் கலாசாலைச் சம்பளத்திற்காகவும் ஹாஸ்டல் பீஸுக்காகவும் இவர்கள் பட்ட பாடு கொஞ்சமல்ல. எனினும் சங்கம் ஒழுங்காகவே நடந்து வந்தது. இவர்களிருவரும் பி. ஏ. பாஸ் செய்த பின்னர் கலாசாலையை விடவேண்டிய காலம் வந்ததும் சங்கத்தினர் இவர்களை உபசரித்து இவர்களின் சலியா உழைப்பிற்கு அறிகுறிகளாகத் தங்கப் பதக்கங்கள் பரிசளித்தனர். சங்கம் சரிவர நடைபெறுதற்குத் தகுந்த பேர்வழிகளை நியமித்துவிட்டு இவர்களிருவரும் வெளியேறினர். பெற்றோர்கள் மனம் ஒடியச் செயல்புரிந்த இவர்கள் தங்கள் கிராமத்திற்குச் செல்ல முகமில்லாமல் வேறு எங்கேயாவது செல்வதென்று தீர்மானித்தனர். ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிய மனமில்லாமலிருந்தும் ஒருவர் அதிர்ஷ்டத்தில் இன்னொருவர் குறுக்கிட வேண்டாம் என்ற யோசனையுடன் பிரிந்து தனித்தனியே சென்றனர். இவை நிகழ்ந்து வருடங்கள் பத்து ஆயின. பத்து வருடங்களுக்கப்புறந்தான் ராமசாமி சுப்புசாமியைக் கள்ளிக் கோட்டையில் சந்தித்தார். அப்போது தான் தலைப்பிற்கண்ட கேள்விகள் எழுந்தன.

> ராமசாமி கலாசாலையில் படிக்கையில் 'கல்யாண எதிர்ப்புச் சங்க'த் தலைவனாகவிருந்தான். 'கல்யாணம் செய்துகொள்வதில்லை' என்று பிரதிக்ஞை செய்துகொண்டான்.
>
> பிற்காலத்தில் இந்திராணியை மணந்துகொள்ள ஆசைகொண்டான். ஆனால் பிரதிக்ஞை குறுக்கிட்டது.........
>
> இந்திராணி:—என்னை மணந்துகொள்வதற்குப் பிரியமிருந்தால் பிரதிக்ஞைக்கு ஓர் வழி இருக்கிறது. "சங்கப் பிரதிக்ஞை சங்க அங்கத்தினராகவிருக்கும் வரையில்தானே?"

* * * *

சுப்புசாமி:— ராமசாமி தானே நீ? நான் இப்போது ஜோதிபுரியில் இருக்கின்றேன். நீ எங்கிருக்கின்றாய், இவ்விடத்தில்தானோ?

ராமசாமி:—நான் இங்கு தான் 10 வருஷங்களாக இருக்கின்றேன். ஜோதிபுரியில் நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்?

சுப்புசாமி:—ஜோதிபுரி கண்ணாடித் தொழிற்சாலையில் ரசாயன நிபுணராக இருக்கின்றேன். இடக்கர் நாட்டு ராஜாவிடம் இப்போது நான் செல்கின்றேன். அவருடைய சமஸ்தானத்தில் கண்ணாடி செய்வதற்கான மணல்கள் நிரம்ப இருக்கிறதாம். அவற்றை ஆராய்வதற்காக எங்கள் கம்பெனி சார்பாக நான் இப்போது அங்கு செல்கின்றேன். நான் கொண்டுவந்த ரசாயன மருந்துகளில் சில ரயில் பிரயாணத்தில் கை தவறிவிட்டன. அவைகளை வாங்க இந்தக் கடைக்கு வந்தேன். என் மனைவியும் வேலையாளும் பக்கத்துஹோட்டலில் தங்கியிருக்கின்றனர்.

ராமசாமி:—மனைவியா? வெகு சந்தோஷம். நாமிருவரும் கலாசாலையில் வாசித்தோமென்பது ஞாபகமிருக்கிறதா?

சுப்புசாமி:—ஆம்; வாசித்தோம். 'கலியாண எதிர்ப்புச் சங்கம்' என்று ஒன்றை ஸ்தாபித்துத் திறம்பெற நடத்தி நல்ல பெயர் எடுத்தோம். பெற்றோர்களுக்கும் விரோதிகளானோம்.

இராமசாமி:—கலியாண எதிர்ப்புச் சங்கத்தில் காரியதரிசியாக இருந்து காரியங்களை நடத்திய நீ, "கலியாணம் செய்துகொள்வதில்லை" என்று பிரதிக்ஞை செய்தனையே! இப்போது கலியாணம் எப்படிச் செய்துகொண்டனை? தெய்வத்தின் முன் செய்துகொண்ட ஆணையை இது மீறியதாகாதா?

"இதோ பதில் சொல்கிறேன்" என்று சுப்புசாமி ஆரம்பித்துத் தன் கதையைப் பின்வருமாறு சொன்னார்:—

நண்பா, நானும் நீயும் விழுப்புறம் ஸ்டேஷனில் பிரிந்தபிறகு நான் நேரே சென்னைக்குச் சென்று சமூகத்தொண்டு புரியும் ஸ்தாபனங்களில் வேலை செய்யப் பிரயத்தனப்பட்டேன். அவைகள் இயற்றும் செயல்கள் என் மனதிற்கு வெறுப்பை யுண்டாக்கின. சுயநலமும் வேற்றுமை யுணர்ச்சியுமே நான் அங்கு கண்டவை. எனவே, ஹைதராபாத்துக்குப் புறப்பட்டுப் போய்விடுவதெனத் தீர்மானித்தேன். என்

இப்படித் தோற்றியதென எனக்கே புலப்படவில்லை என் வசமிருந்த தங்கப்பதக்கத்தை விற்று ரயில்செலவு பார்த்துக் கொண்டு ஹைதராபாத்துக்குச் சென்றேன். என் தூரபந்து ராவ்பஹதூர் அருணாசல ஐயர் அங்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருப்பது நான் அங்கு சென்ற பிறகு ஞாபகத்திற்குவந்தது. அவரை அணுகி உதவி கோரியபோது ஒன்றுமே தெரியாதவர்போல் என்னை விரட்ட ஆரம்பித்தார். பின்னர் அவ்வூர் ரசாயனத் தொழிற்சாலை சொந்தக்காரர் ஸ்ரீமான் தாமோதர தாக்கர்ஸேயைக் கண்டு என்னை நானே அறிமுகப்படுத்திக் கொண்டு நான் ராவ் பகதூரின் பந்து என்றும் பட்டதாரி என்றும் சாஸ்திர வேலைக்காக வந்திருப்பதாகவும் தெரிவித்தேன் சொந்தக்காரர் எனது கல்வித்திறனைச் சோதித்து ரூபா 100-ல் ஓர் கெமிஸ்ட் வேலை கொடுத்தார். ஆறுமாதங்களுக்குப்பின்னர் ராவ் பகதூர் ஓர் நாள் சர்க்கார் வேலையாக தொழிற்சாலைக்கு வந்தபோது தாக்கர்ஸே எனக்கு வேலை கொடுத்ததைப்பற்றி பிரஸ்தாபித்ததன் மேல் ராவ் பகதூர் என்னை நேரில் பார்த்து மிக அன்பாகப் பேசி தமது வீட்டிற்கு வருமாறு சொல்லிப் போயினர். பந்து என்று சொல்லி வேலை சம்பாதித்துக் கொண்டதைப் பற்றி கோபமோ என்று எண்ணி அவர் வீட்டிற்குத் தயக்கத்துடன் சென்றேனாயினும் நான் மிகக் கவுரவமாகவே நடத்தப்பட்டேன். பின்னர் அடிக்கடி அவர் வீடுபோக ஆரம்பித்தேன்.

தங்கள் சொந்த ஜில்லாவாகிய தஞ்சை ஜில்லா வாசிகளைப் பலவருடங்களாகக் காணாதிருந்த அக்குடும்பத்தினருக்கு என்னைப் பார்ப்பதும் பேசுவதும் பிரும்மானந்தமாயிருந்தது. முக்கியமாக இந்திராணிக்கு இந்த உணர்ச்சி பலமாக இருந்தது இந்திராணி ராவ் பகதூரின் ஏகபுத்திரி, ஸ்கூல் பைனல் பரீக்ஷையில் தேறியவள், கலியாணத்தை எதிர்பார்த்திருப்பவள். பதினேழு வயது நிரம்பிய கட்டழகி. அவளுடைய அழகிய வடிவமும், இனிய மொழியும், மருண்டபார்வையும், இருண்ட கூந்தலும் என் மனதைக் கொள்ளை கொண்டன. பெண்களை வெறுப்புடன் நோக்கப் பழகிய நான் இவளை விருப்புடன் பார்க்க வேண்டியவனானேன். எங்ஙனமாவது இவளை மணந்து கொள்ளல் வேண்டும் என எண்ணினேன். பாடசாலைப் பிரதிக்ஞை என்னைத் துன்புறுத்தியது. செய்வது தெரியாமல் திகைத்தேன். ஒரு நாள் தற்செயலாக நாங்களிருவர் மாத்திரம் தனித்திருந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தவள்போல் இந்திராணி தன் கலியாண விஷயத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தாள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சிதம்பரம்கலாசாலை மாணவர் ஒருவருக்கு தன்னை மணமுடிக்க தன் பிதா ஏற்பாடு செய்ததாகவும் அது எக்காரணத்தாலோ தடைபட்டுப் போனதாகவும் இந்திராணி மொழிந்தாள். இது எனக்கு சுறுக்கெனத் தைத்தது. முன்பின் யோசியாமல் அந்தப்பேர்வழி நான்தான் என நான் உரைத்தேன். அவள் ஆச்சரியத்தால் துள்ளி எழுந்து மறுபடியும் ஆசனத்தில் உட்கார்ந்தாள். நான் நித்திய பிரமசாரியாயிருக்க சபதம் செய்து கொண்டிருக்கிறேன் என எனது கலாசாலைக் கதையை விரித்தேன்.

"என்னை மணந்து கொள்வதற்குத் தங்களுக்குப் பிரியமிருந்தால் பிரதிக்ஞைக்கு ஓர் வழி இருக்கிற"தெனப் புகன்றாள்.

அது என்ன என்று கேட்கவும், சங்கப்பிரதிக்ஞை சங்க அங்கத்தினராக இருக்கும் வரையில்தானே. சங்கத்தைவிட்டால் பிரதிக்ஞையும் போயிற்று. வித்தியார்த்திகள் பாடசாலை மாணவர்களாக இருக்கும்போது மண முடித்தல் கூடாதென்பது தான் பிரதிக்ஞையின் கருத்து. தாங்கள் பாடசாலை வாழ்க்கையை விட்டு உலகவாழ்க்கையில் புகுந்திருப்பதால் மணமுடித்துக் கொள்ளத்தடை எதுவும் இல்லை எனக் கூறினாள்.

இந்தச் சொற்களால்எனக்கு ஏற்பட்ட சந்தோஷமிகுதியால் அவளை அப்படியே தழுவிக் கொண்டேன். அவளைப்பார்த்த நாளாக என் மனத்தைத் தொந்திரவு செய்து வந்த பிரச்னையை ஒரு நொடிப்பொழுதில் தீர்த்துவிட்ட அவள் புத்தி கூர்மையை மிக வியந்தேன். பின்னர் அவள் தன் தகப்பனுருடன் என் வரலாற்றை எல்லாம் சொல்ல அவரும் அதற்கிணங்க, என் பெற்றோர்களையும் வரவழைத்து ஹைதராபாத்தில் ஓர் ஆனி மாதத்தில் விவாகம் சம்பிரமமாக நடைபெற்றது. இப்போது வருஷம் எட்டு ஆகின்றது. ஆறு வயதுப் பையன் வாசிக்கின்றான். மூன்று வயதுப் பெண் குழந்தை விளையாடுகிறது. நான் கம்பெனியின் ஜோட்பூர் கிளைத் தொழிற்சாலையில் ரூ. 250 சம்பளத்தில் ரசாயன நிபுணர் வேலை பார்க்கின்றேன். இடக்கர்நாட்டு ராஜாவின் வேண்டுகோளுக்கிணங்கி ஆராய்ச்சி வேலைக்காக நான் இப்போது இங்கு வந்திருக்கின்றேன் என்று தன் கதையை முடித்தார் சுப்புசாமி ஐயர்.

உடம்புக்கு எப்போதும் சுகம் வேண்டும்.

குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் சாதாரணமான தூள் அல்ல. அது உல்லாசமும், ஆரோக்கியமும் ஆசரிக்கச்செய்யும், ஏனென்றால் அது ஒரு விசேடமான முறையாக மருந்தூட்டிச் செய்யப்பட்டது. குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் அதிக சுத்தமும் நேர்த்தியுமானது; அதற்கு ஈடானதூள் ஒன்றும் கிடையாது. அது பக்கு வந்த இடங்களைத் தேற்றி உடனே சுகமுண்டாக்கிறது. வேர்வை விடுவதை இந்தத்தூள் தணிக்கிறது. தேக முழுதற்கும் அது உல்லாச சுகத்தைக் கொடுக்கிறது. வைத்தியர்கள் குழந்தைகளுக்கு உபயோகப் படுத்தும்படியாக சிபார்சு செய்திருக்கிறார்கள்; நோயாளிகளுக்கும், சமுசாரத்திலிருக்கும் ஒவ்வொருவருக்கும் உபயோகப்படுத்தும் படியாக சொல்லியிருக்கிறார்கள்; ஏனென்றால் இந்த தூள், அதிக சுத்தமானது மல்லாமல் மகா சவுக்கியத்தைக் கொடுக்கும்.

குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூளின் வாசனை ஒப்பில்லாதது. அது இனிப்பான பரிமள வாசனையோ டிருப்பதுமல்லாமல், தோலை அதிக அழகாக்கி சந்தோஷத்தை உண்டுபண்ணும். அது உடம்புக்கு வாசனையும் கொடுக்கும்.

எல்லா மருந்து கடைகளிலும், பஜார்களிலும் வாங்க அகப்படும்.

குடிகூரா டால்கம்
CUTICURA TALCUM

இன்றைக்கு ஒரு டப்பி குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் வாங்கு.

Tele:—"SIMPLICURE" Box 643 CAL

வெளிவந்து விட்டன!

ஹோமியோ புத்தகங்கள்

ஹோமியோ வைத்திய முறை

தத்துவம்

தேவங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.

M. BHATTACHARYYA & Co.

Economic Pharmacy, 84, Clive Street, CALCUTTA.

ஸ்தாபிதம் 1913

சவரன் மாத்து தங்கத்துக்கும், அசல் வெள்ளி சாமான்களுக்கும், மேன்மையான வேலைப்பாட்டுக்கும் உத்திரவாதமுள்ள இடம்

கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்

நகை வியாபாரிகள்

175, சைனபஜார் ரோட் — மதராஸ்.

காட்லாக்குக்கு எழுதவும்.

தென்னிந்தியப் பிரமுகர்கள்

ராவ்பஹதூர்

கே. பி. ராமநாத அய்யர்

கல்வியுலகில் மகா சிரேஷ்டர்

கல்வியுலகில் மகா சிரேஷ்டராகத் திகழ்ந்தவர் காலஞ் சென்ற ராவ் பஹதூர் கே. பி. ராமநாத அய்யரவர்கள். தாம் வாழ்ந்திருந்த காலம் முழுமையும் தமது அறிவை மட்டுமே பெருக்கிக்கொண்டு இராமல் அநேகம் இளைஞர்களுடைய அறிவையும் வளர்ப்பதில் ஆர்வம் கொண்டு உழைத்து வந்தவராவர். இவர் தமது வாழ்க்கையானது பிறருக்கு வழி காட்டியாகும் விதத்தில் நடந்து வந்தார். கலா வல்லவராகச் சிறப்புறுவதிலேயே நோக்கம் கொண்டு வந்த இவர் அதிகாரிகளை ப்ரீதி செய்விக்க வேண்டும் என்ற எண்ணத்தையாவது அல்லது பொது மக்களுடைய புகழைக் கவர வேண்டுமென்ற அபீஷ்டத்தையாவது எப்போதும் மேற்கொண்டதில்லை. புத்தகங்களைப் பற்றி ஒரு ஆங்கிலக் கவி, அவை தமது இணைபிரியா நண்பர்கள் என்றும், அவை தம்மை ஒருசமயத்திலும் கை விட்டது கிடையாது என்றும் எழுதியிருக்கிறார். அதேமாதிரி ராமநாதய்யரவர்கள் சதா புத்தகங்களின் நன்மையையே பிரதானமாக நாடிவந்தார். இதனால் அவர் எப்போதும் பிறருடன் சம்பாஷிக்காமல் புத்தகங்களையே படித்து வந்தார் எனக் கருதுவது தவறாகும். இவர் தமது காலத்தை வீணாக்கியதில்லை என்பதே இதன் தாத்பர்யம். அறிஞருக்குரிய அம்சங்கள் யாவும் இவரிடம் அமைந்திருந்தும், இவர் சிறந்த நண்பராகவும் இருந்தார். இவருடன் நெருங்கிப் பழகியவர்களுக்கு இவருடைய அருமைக் குணங்கள் தெரியும். எல்லாவற்றிற்கும் மேலாக இவரிடம் மேன்மையான லக்ஷியங்கள் காணப்பட்டன. இவர் பல துறைகளிலும் ஈடுபட்டவர். கல்வி, அரசியல், சமூக சீர்திருத்தம், கூட்டுறவு ஆகிய பல துறைகளிலும் இவர் பெருமையுடன் சம்பந்தப்பட்டு வந்தார்; ஆயினும் ஒரு சமயத்திலும் இவர் சுயலாபத்தைக் கருதியதில்லை. தமது உழைப்பு பிறருக்குப் புலப்படாவண்ணம் இவர் வேலை செய்து வந்தார். இக்காலமெல்லாம், தமது சொந்த அபிப்பிராயங்களை வெளியிடுவதில் இவருக்கிருந்த தைரியத்தையும், பலரிடமும் விசுவாசத்துடனும் ப்ரீதியுடனும் கலந்து வந்த ஸ்வபாவத்தையும் கண்டோர் அனைவரும் ஏகமனதாகப் புகழ்ந்து வந்துள்ளனர். பிறருக்கு நன்மை



உபாத்தியாயர்கள் பொது வாழ்வில் தீவிரமாக ஈடுபட்டுத் தங்களைப்பற்றிப் பிறர் அடிக்கடி உணருமாறு செய்ய வேண்டும் என்பதை வற்புறுத்தியவர் கல்வியுலகில் மகா சிரேஷ்டராக விளங்கிய ராவ்பகதூர் கே. பி. ராமநாதய்யர். மதராஸ் டீச்சர்ஸ் கில்ட், திருவல்லிக்கேணி அர்பன் கோஆபரேடிவ் சொஸைடி ஆகியவற்றை ஸ்தாபித்தவரான இவர் கல்வியபிவிருத்தியின் நிமித்தம் எடுத்துக்கொண்ட பிரயாசைகள் அநந்தம். ஆசிரியர்கள் சிஷ்யர்களால் போற்றப்படுவது அரிது. ஆனால் இவர் விஷயத்தில் அது பரிபூர்ணமாக விருந்தது.

....

(1864—1927)

(கே. எஸ். ஆர்.)

என்ற குணம் இவாது உள்ளத்தில் உத்ஸாஹத்துடன் உறைந்திருந்தது என்று நாம் தைரியமாகக் கூறலாம்.

படிப்பு

ராவ்பஹதூர் கே. பி ராமநாதய்யர் 1864-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் தஞ்சை ஜில்லாவில் கூத்தூர் என்ற கிராமத்தில் எளியதும் ஆயினும் கண்ணியம் மிகுந்ததுமான ஒரு பிராம்மணக் குடும்பத்தில் பிறந்தார். ஆகையால் பல விஷயங்களையும் நாம் சீர்தூக்கிச் சிந்திப்போமாயின் சுய முயற்சிகளாலேயே உயர்வை அடைந்தவர் இவர் என்று நாம் தயங்காமல் சொல்லி விடலாம். ஆரம்ப வருஷங்களில் ப்ராசீன சம்பிரதாயப்படி இவர் வேதாத்யயனத்தை நடத்தினர். பின்பு ஆங்கிலப் படிப்பை மேற்கொண்டு இவர் திருவையாற்றுப் பள்ளிக் கூடத்தில் மாணவராக விருந்தார். 1884-ம் வருஷத்தில் கும்பகோணம் [illegible] கலாசாலையிலிருந்து இவர் "பி ஏ" பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். கலாசாலையில் படித்துவருகையிலேயே இவாது புத்தி கூர்மையும், சலியா ஊக்கமும், உழைப்புத்திறனும் வெளியாயின. இவர் தமக்கு ஓய்வு கிடைக்கும் நேரங்களில் எல்லாம் கலாசாலை லைப்ரரியில் உட்கார்ந்து படித்து வருவது வழக்கம். இது தவிர அந்நாளில் அக்கலாசாலைக்குப் பிரபலமான பெயர் இருந்து வந்தது. ஆசிரியர் என். வைத்திநாதய்யர் எம். ஏ. இவாது ஆசிரியர்களுள் ஒருவராக அப்போது இருந்து வந்தார். இவருக்குத் தமது ஆசிரியரிடம் அளவு கடந்த மரியாதையும் அபிமானமும் உண்டு. இவ்வாசிரியர் மானிட கோஷ்டிக்கு ஒரு லக்ஷியமாக விளங்கியவர் என இவர் கருதிவந்தார். வைத்திநாதய்யர் மரண முற்றபோது இவர் அதற்காகப் பெரிதும் விசனப்பட்டார்.

பச்சையப்பன் கலாசாலையில் உத்தியோகம்

இதன் பின்னர் உத்யோகம் தேடவேண்டிய அவசியம் இவருக்கு ஏற்படவே, இவர் கும்பகோணம் டவுன் ஹைஸ்கூலில் ஒரு உபாத்யாயராக அமர்ந்தார். இவ்வாறு சில காலம் சில பள்ளிக் கூடங்களில் இவர் போதித்து வருவாராயினர். இதற்கிடையில் இவர் 1890-ல் "எம். ஏ." பரீக்ஷைக்கும் தனிமையாக ஆஜராகி தேறினர். இப்பரீக்ஷைக்காக இவர் சென்னைக்கு வந்தார். பின்பு ஹிந்து ஹைஸ்கூலில் இவர் ஒரு உபாத்யாயராகச் சேர்ந்துகொண்டார். சில காலத்திற்குப் பின்பு இப்பள்ளிக் கூடத்தின் தலைமை உபாத்யாயராகவும் இவர் உத்யோகம் வஹித்தார். 1894-ல் இவர் பாலக்காடு விக்டோரியா கலாசாலை உப அத்யக்ஷகராகச் சென்றார். இங்கு இவர் வெகு காலம் தங்கவில்லை. வெகு சீக்கிரத்திலேயே திவான் பஹதூர் வி. கிருஷ்ணமாச்சாரியாரின் சிரத்தையினால் இவர் சென்னை பச்சையப்பன் கலாசாலைக்கு ஆசிரியர்களுள் ஒருவராக ஆகர்ஷிக்கப்பட்டார். 1895-ல் இவர் பச்சையப்பன் கலாசாலையில் ஆங்கில போதகாசிரியராக பதவி ஸ்வீகரித்துக்கொண்டார். இதன் பின்னர் சுமார் 23 வருஷகாலம் இவர் இக்கலாசாலையுடன் சம்பந்தப்பட்டிருந்தார். சுமார் 1918-ல் இவர் கலாசாலையை விட்டு வயது முதிர்ச்சி பற்றி விலகியபோதும் இவர் இன்னும் சில வருஷங்கள் உத்யோகத்தில் இருக்கலாம் என்று அன்பர்கள் விரும்பினர். இவருக்கு மட்டும் அங்கு இருப்பதற்கு இஷ்டமில்லை. இது ஏனெனில் கலாசாலைத் தலைவர் பதவி காலியானபோதெல்லாம், தர்ம நிர்வாகிகள் அந்தஸ்தானத்திற்கு எல்லாவிதங்களிலும் அருகரான இவரை நியமிக்காமல் வேறு புதிய ஆட்களை நியமித்துவந்தனர். இந்த சம்பவங்கள் இவாது மனதை மிகப் புண்படுத்தின. இந்த உத்தியோகத்தை விட்டு நீங்கிக் கொண்டபோது, தர்ம நிர்வாகிகளுக்கு தாம் எழுதிய கடிதத்தில் தாம் இத்தகைய நடவடிக்கையை மேற்கொள்வதற்குத் தூண்டிய காரணங்கள் எல்லாவற்றையும் மறைக்காமல் வெளியிட்டார்.

சர்வ கலாசாலைக் கமிஷன்

சென்னைக்கு வந்த பின்பு இவருடைய பெருமை பலரிடமும் நன்கு பரவியது. கர்ஸன் பிரபுவின் கல்வி சீர்திருத்தங்களை நன்கு ஆமோதித்தவர்களுள் இவர் ஒருவர். 1905-ல் கலாசாலைகளைப் பார்வையிடுவதற்கு ஒரு கமிஷனை நியமித்தனர். கமிஷன் மெம்பர்களுள் ஒருவராக நியமிக்கப்பட்ட ஸர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் அப்பதவியை ஏற்றுக்கொள்ள இயலவில்லையாதலால், இவர் அவருக்குப் பதிலாக நியமிக்கப்பட்டார். இக்கமிஷனின் தலைவராகவிருந்தவர் ஸர் ஆல்பிரெட் போன். இக்கமிஷனைப் பற்றிப்பலர் தப்பிப்பிராயம் கொண்டிருந்தனர்; இவர் அந்த அபிப்பிராயங்கள் மறைந்து விடுமாறு செய்தார். இக்காலம் முதற்கொண்டே சர்வகலாசாலை விஷயங்களில் இவர் ஒரு நிபுணராக மதிக்கப்பட்டார். புதிதாக நிர்மாணிக்கப்பட்ட செனெட் சபைக்கு முதன் முதலில் இவர் சர்வகலாசாலை பட்டதாரிகளால் தேர்ந்தெடுக்கப் பட்டார். இது முதற்கொண்டு கடைசி காலம் வரையில் இவர் பிறருடைய தாக்ஷண்யங்களைப் பற்றிச் சிறிதும் சிந்தியாமல், நடந்து வரும் அநீதிகளையெல்லாம் வெளிப்படுத்தினர்; சமமான நியாயம் எங்கும் எல்லாருக்கும் வழங்கப்படவேண்டும் என இவர் வற்புறுத்தி வரவே இவரிடம் அதிகாரிகள் பீதி கொண்டனர்.

திருவனந்தபுரம் மஹாராஜா கலாசாலையில் பதவி

1920-ல் காலஞ் சென்ற திருவாங்கூர் மஹாராஜா ஸ்ரீமூலம் திருநாள், திருவனந்தபுரம் மஹாராஜா கலாசாலையில் ஆங்கில ஆசிரியராகப் பதவி ஏற்றுக் கொள்ளுமாறு இவரைக் கேட்டுக்கொண்டார். இவரும் அதற்கொப்பினர். ஆங்கில இலக்கியத்தை, இவருக்கு முன்பு வரையில், அக்கலாசாலையில் அங்கிலேயர்களே போதி

த்து வந்தனர். இவர்தான் அந்த ஸ்தானத்திற்கு நியமிக்கப்பட்ட முதலாவது இந்தியர். இதனால் மஹாராஜாவிற்கு இவரிடம் இருந்த நம்பிக்கை தெரியவரும். இது தவிர இக்கலாசாலையில் இவர் "எம். ஏ" "பி. ஏ" (ஹானர்ஸ்) வகுப்புகளுக்கும் பாடம் போதித்து வந்தார். இவ்வுத்தியோகம் மாணவர்களுக்குப் பாடம் போதிக்கவேண்டும் என இவருக்கிருந்த தாகத்தைத் தணிப்பதாயிற்று. சுமார் நான்கு வருஷகாலம் இப்பதவியை வஹித்துவிட்டு, இவர் விலகிக்கொண்டார். இவரை விட்டுப் பிரிய மாணவர்கள் விரும்பவில்லை எனக் கூறுவது மிகையாகாது.

ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம்

இவர் ஐரோப்பிய தேசங்களிலும் சுற்றுப்பிரயாணம் செய்தவர். இவருக்கு பிரெஞ்சு, ஜர்மானிய பாஷைகளும் நன்கு தெரியும். ஆகையால் இவர் தமது சுற்றுப்பிரயாண காலத்தில் மேனாட்டு இலக்கியங்களில் பிரபலஸ்தர்களாக விளங்குபவர்களுடன் சம்பந்தப்பட்ட இடங்களையெல்லாம் புனிதஸ்தலங்கள்போல் தரிசித்து வந்தார். இவ்வாறு ஆறுமாத காலம் இவர் பிரயாணம் செய்தது இவருக்கு மிகவும் உதவியது.

இவர் சமூகச் சீர்திருத்தத்திலும் மிக ஈடுபட்டிருந்தார். ஜாதி மதங்களைப்பற்றிய வித்யாஸங்களை இவர் வெறுத்தவர். அநேகம் சீர்திருத்த மஹாநாடுகளில் இவர் பெரிதும் சிரத்தை கொண்டிருந்தார். ஆனால் இவர் தமது மதானுஷ்டானங்களிலிருந்து வழுவியவரல்லர். நமது ஆசாரங்கள் எங்கெங்கு பொருத்தமாக வில்லையோ, அங்கெல்லாம் இவர் அவற்றைப் பின்பற்றியவரல்லர். இதனால் இவருக்குக் குருட்டு நம்பிக்கை கிடையாது என்பது ஸ்பஷ்டமாகும்.

சென்னை உபாத்தியாயர்கள் சங்கம்

உபாத்தியாயர் சமூகத்திற்கு இவர் மூலம் தனிச்சிறப்பு ஏற்பட்டது. "சென்னை உபாத்தியாயர்கள் சங்கம்" (மதராஸ் டீசர்ஸ் கில்ட்) இவரால் ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கம் இம்மாகாணம் முழுமையும் பரவி உபயோககரமாகவிருப்பதற்காக உழைத்தவர்களுள் இவர் பிரதான புருஷராவார். இத்தொழிலில் இவர் வஹித்த மேன்மை எங்கும் ஒப்புக்கொள்ளப்பட்டது. தமது மரண காலத்திலும் இவர் இச்சங்கத்தின் தலைவராகவிருந்தார்.

1919-ல் இவருக்கு "ராவ் பஹதூர்" பட்டம் வழங்கப்பட்டது. இவர் இப்பட்டத்தை அங்கீகரிக்க இசையவில்லை. சென்னை கவர்னர் பெண்ட்லண்டு பிரபு விருப்பத்திற் கிணங்கிதான் இவர் அப்பட்டத்தை மறுக்கவில்லை. ராவ்பஹதூர் ராமநாதய்யர் பல காரணங்கள் பற்றிச் சிறந்த போதகாசிரியராகத் திகழ்ந்தார். தமது நடத்தைப்பற்றியும், குணாதிசயங்கள் பற்றியும், நைபுண்யம்பற்றியும் இவர் பெருமையுடன் சோபித்தார். இவரது உபந்யாஸங்கள் எல்லாம் மாணவர்களுக்கு மிக உபயோகமாகவிருந்தன. அவைகளிலிருந்து விஷயங்களைத் தெளிவாகத் தெரிந்துகொள்வது எளிது. தாம் கற்றறிந்த நுட்பமான விஷயங்களையும் இவர் மாணவர்களுக்குப் போதித்து வந்தார். இதனுடன் இவரது பிரசங்கவன்மையும் மிகப் பாராட்டப்பட்டதாகும்; இதனால் இவரிடம் விருப்பமே அதிகமாகியது. இவர் பெரிய புத்தகாலயத்தைச் சேகரித்து வைத்திருந்தார். சம்ஸ்கிருதபாஷையில் பயிற்சியிராவிட்டால் உபயோகமில்லை என்பது இவரது துணிபு. ஆககயால் இவர் தமது அந்திய வருஷங்களில் அப்பாஷையையும் கற்று வந்தார்.

உபாத்தியாயர்கள் பொதுவாழ்வில் ஈடுபட வேண்டும்

ராவ்பஹதூர் ராமநாதய்யர் அநேகம் கல்வி மஹாநாடுகளில் கலந்துகொண்டிருந்தவர். மஹாநாடுகள் இடையூறின்றித் திருப்தியாக நடைபெறுவதற்கு இவர் பெரிதும் உதவியுள்ளார். உபாத்தியாயர்கள் பொது வாழ்வில் தீவிரமாக ஈடுபட்டுத் தங்களைப்பற்றிப் பிறர் அடிக்கடி உணருமாறு செய்யவேண்டுமென்பது இவரது அபிப்பிராயம். இதற்கேற்ப இவ . நடந்துகொண்டுவந்தார். சென்னை மஹாஜனசபை அங்கத்தினராக இவர் வெகுகாலம் இருந்து அரசியல் சம்பந்தமாக உழைத்து வந்தார்.

கூட்டுறவு இயக்கத்தில் சிரத்தை

திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேடிவ் சொஸைடியின் ஸ்தாபகர்களுள் ஒருவராக இவர் இருந்தார். அந்த ஸ்தாபனத்தின் நிர்வாஹகராக பலகாலமும், அக்கிராஸனராக சில காலமும் இவர் இருந்ததுண்டு. கூட்டுறவுச் சங்கங்களை இவர் மிகவும் ஆதரித்தார். சென்னை மாகாண கூட்டுறவு மகாநாடுகளை ஆரம்பித்து நடத்துவதற்கு இவரது முயற்சிகள்தான் உதவின. சில மஹாநாடுகளின் வரவேற்புத் தலைவராக விருந்து இவர் அருமையான பிரசங்கங்கள் புரிந்தார்.

பத்திரிகாசிரியர்

"இந்தியன் ரெவியூ" பத்திரிகையை ஆரம்பிப்பதில் இவர் ஸ்ரீமான் நடேசனுக்கு மிக உதவினார். பின்னர் இப்பத்திரிகைக்கு இவர் அடிக்கடி நல்ல விஷயதானங்கள் செய்து வந்தார். இதே மாதிரி "எஜுகேஷனல் ரெவியூ" விற்கும் அதன் பத்திரிகாசிரியராக சில காலம் இருந்து இவர் உதவியுள்ளார். இத்தகைய விதமாக இவர் இத்தேசத்தில் கலைகளில் அபிருசியும் ஆசையும் வளருவதற்கான வழிகளை மிகுந்த உத்ஸாஹத்துடன் தொடர்ந்து வந்தார். இறுதியில் இவர் தமிழ் அகராதி (லெக்ஸிகன்) கமிட்டியில் ஒருவராகவும் இருந்து மிக உழைத்தார். தமிழ் அகராதியைத் தயார் செய்வதற்காக இவர் அளித்த ஆலோசனைகள் பெரிதும் பஹுமானிக்கப்பட்டன. ஆனால்இவர் எத்தகைய காரியத்தைத்தாம் மேற்கொண்டபோதிலும் அதை வீண் பஹிரங்க ஆடம்பரமின்றி முடித்து வைக்கும் திறமை வாய்ந்தவர். 1895-ம் ஆண்டில் "பி. எல்." பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். பின்பு இவர் "எல். டி." பட்டமும் ஸ்வீகரித்துக்கொண்டார்.

துக்ககரமான மரணம்

ராவ் பஹதூர் ராமநாதையரின் மரணம் விசனகரமானது. 1927-ம் வருஷம் மார்ச்சு மாதம் 4-ம் தேதியன்று சென்னை ஹிந்து தியாலாஜிகல் பள்ளிக்கூடத்தில் உபாத்யாயர் சங்கம் நடத்தி வந்த வார்ஷிக கல்வி மஹாநாடு கூடியது. அன்று சென்னை பிரதம மந்திரியாகவிருந்த டாக்டர் சுப்பராயன் தலைமை வஹித்தார். சங்கத்தின் தலைவரான ராவ்பஹதூர் கே. பி. ராமநாதன் அவரை வரவேற்பதற்காக எழுந்து இரண்டு வாக்கியங்கள் பேசினார். இவரது பிரசங்கம் முடிவு பெறவில்லை. உடனே இவர் அந்த பிரக்ஞை தவறிக் கீழேவிழுந்துவிட்டார். இத்துக்க சம்பவம் எங்கும் பரபரப்பை உண்டுபண்ணியது. டாக்டர் வருவதற்குள் ராவ் பஹதூர் அய்யரவர்கள் தமது 63-வது பிராயத்தில் காலமாகிவிட்டார். இவரது எதிர்பாராத தேக வியோகத்தினால் இத்தேசம் சிறந்த அறிவாளியையும் கல்விமானையும் இழந்துவிட்டது. இவரிடம் கீழ்நாட்டு லக்ஷியங்களும் மேனாட்டு சாமர்த்தியமும் ஒருங்கே அமைந்து இருந்தன என்று ராவ் பஹதூர் கே. வி. ரங்கஸ்வாமி அய்யங்கார் ஒரு சமயம் எழுதினார். முக்கியமாக இவரை இன்றும் இவரது மாணவர்கள் ஞாபகத்தில் நிறுத்தி வருகின்றனர். இதற்கு இவரது போதனா சக்தியே போதுமான காரணமாகும். பொதுவாகக் கவனிப்போமாகில், எல்லா ஆசிரியர்களும் தங்களது சிஷ்யர்களால் பாராட்டப்படுவதில்லை. திறமையும் அதிசய குணமும் வாய்ந்த வெகு சிலர்தான் தங்களது மாணாக்கர்களால் பாராட்டப்படுகின்றனர். ராவ் பஹதூர் கே. பி. ராமநாதய்யர் தமது மாணவர்களின் ப்ரீதியையும் விசுவாசத்தையும் தாராளமாகக் கவர்ந்தார் என்பதுமட்டுமே அவரது பெருமையை என்நாளும் நிலைத்திருக்கச் செய்வதாகும். இவ்வாறு கல்வியுலகில் பல உயர்ந்த லக்ஷியங்களுடன் இவர் வாழ்ந்து வந்தார்; இத்தேசத்திற்கு இவர் போன்றவர்களால்தான் பெருமை ஏற்படக் கூடும்.

வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3. வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணா. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும் போதுள்ள நேரம், சுமார் வயது, பெயர் தேவை.

ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம்,
திருத்தணி, S. இந்தியா

செவிடு

"டெப்கில்லர்" செவிட்டுத் தன்மையை சாசுவதமாகப் போக்கிவிடும். இன்னும் காதில் ஏற்படும் இதர கோளாறுகளையும் அகற்றிவிடும். எவ்வளவு காள்பட்ட செவிடாக விருந்தாலும் சரி, சிறிதும் சந்தேகமின்றி நிரந்தரமாக நிவர்த்திக்கப்படும்; செவிடர் செவ்வையாகச் செவியுறுகிறார். கால்செவிடு, அரைச்செவிடு அல்லது முழுச்செவிடு எதுவாகவிருந்தாலும் அக்கரையில்லை; நீண்டகால ஜலதோஷம், இருமல், ஜுரம், தொண்டைக் கோளாறு, மூக்குக் கோளாறு முதலிய எக்காரணங்களால் ஏற்பட்ட செவிடாயினும் சரி குணமாகிவிடும். சீழ்வடிதலும் நின்றுவிடும். ஆயிரக்கணக்கானவர்கள் குணம் பெற்றிருக்கின்றனர். விலை ரூ. 5; தபால் செலவு 7-அணா சென்னையில் எல்லா பிரபல மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும். அல்லது,

MAHAMBS TRADING COMPANY OF ASIA, Indian Depot, P. O. Box 2186 Bombay.

த்யாகராஜ கீர்த்தனம்.

[காபிரைட்.]

ஸங்கீதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீனிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது

I

பல்லவி

ஜநக ஜா ஸமேத! துர்ஜனக புருஹூத! (ஜனக)

அனுபல்லவி

ஸநகாதி ஸுமுனி கீத! ஸஜ்ஜன கணபாரிஜாத! (ஜனக)

சரணங்கள்

1. தேவதேவ! ஸகலஜீவன! புவனேச!
பாவஜரிபு பாவஸூதன! பவ்யகுண மணிகோச (ஜனக)

2. ஜலஜாப்தகுலாம் போநிதி ஜலஜ! ஹரி! பிரேச!
ஜலஜாருண சரண! (அ)ஸுரஜலதாசுக! ஸ்ரீச (ஜனக)

3. ச்யாமஸுந்தராங்க! ரங்கசயன! விகதமாய!
தாமஸ ஜனஹ்ருதயதூர! த்யாகராஜகேய! (ஜனக)

II

ஜநக ஜா ஸமேத	—ஸீதாதேவியின் கொழுனரே!
துர்ஜன அக புருஹூத	—துஷ்ட ஸ்வபாவமுள்ளவர்களுடைய பாவங்களாகிய விரோதிகளை முறியடிப்பதில் வஜ்ராயுத தாரியான தேவேந்திரனை யொத்தவரே!
ஸநகாதி ஸுமுனிகீத	—ஸநகர்முதலிய சிறந்தமுனிவர்களால் கொண்டாடப்பட்டவரே!
ஸஜ்ஜன கணபாரிஜாத	—ஸாது ஜனக் கூட்டங்களின் அபீஷ்டங்களை நிறைவேற்றுவதில் (தெய்வலோக தருவான) பாரிஜாதத்தை யொத்தவரே!
தேவதேவ	—தேவாதி தேவரே!
ஸகல ஜீவன	—ஸகல ஜீவராசிகளுக்கும் உயிரானவரே!
புவனேச	—(ஸகல) லோகங்களுக்கும் ஈச்வரரே!
பாவஜரிபு பாவஸூதன	—மன்மதனுக்குச் சத்துருவான ஸதாசிவனுருடைய உள்ளத்தைக் கோவிலாகக் கொண்டவரே!
பவ்யகுணமணி கோச	—அநந்த கல்டாண குணங்களான ரத்னங்களாலாகிய ஹாரம் போன்றவரே!
ஜலஜ ஆப்தகுல அம்போநிதி ஜலஜ	—தாமரையின் நேயனான ஸூர்யனுடைய குலமாகிய சமுத்திரத்தில் உற்பத்தியான தாமரை போன்றவரே!
ஹரி	—ஹரியே!
பிரேச	—ஸர்வேச்வரரே!
ஜலஜ அருண சரண	—தாமரைபோன்று சிவந்து பிரகாசிக்கும் திருவடிகளை யுடையவரே!
அஸுர ஜலத ஆசுக	—அசுரர்களாகிய மேகங்களைச் சிதறவடிக்கும் புயற்காற்று போன்றவரே!
ஸ்ரீச	—லக்ஷ்மிப் பிராட்டியின் நாயகரே!
சயாமஸுந்தராங்க	—நீலநிறம் பொருந்திய திவ்விய ரூபமுடையவரே!
ரங்கசயன	—ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் பள்ளிகொண்டு இருப்பவரே!
விகதமாய	—மாயையிற் பற்றற்றவரே!
தாமஸ ஜன ஹ்ருதயதூர	—தாமஸகுணம் பொருந்தியவர்களுடைய மனத்திற் கெட்டாத தூரத்தி லிருப்பவரே!
த்யாகராஜகேய	—த்யாகராஜனுல் கொண்டாடிப் பாடப் பெற்றவரே!

III

இக்கீர்த்தனை முற்றிலும் ஸம்போதனமாகவே (விளியாகவே) அமைந்துள்ளது. ஸம்ஸ்க்ருத ஸமாஸங்கள் மிக அழகாக அமைந்திருக்கின்றன.

Printed and Published by . . .

(8-ம் பக்கம் பார்க்க)

வெளியீட்டை எதிர்பாருங்கள்

Broadcast

இரண்டாவது முறை ரிகார்டுகள்

வித்வான்
செம்பை வைத்யநாத
பாகவதர்

வித்வான்
ராமச்சந்திர பாகவதர்

மிஸ் எம். எஸ்
சுப்புலட்சுமி

இத்துடன்
நூதன டிராமா
ஸெட்டுகளையும்
எதிர்பாருங்கள்.

வித்வான் செம்மங்குடி
ஸ்ரீனிவாஸ அய்யர்

வித்வான்
ராஜமாணிக்கம் பிள்ளை.

தி மியூஸிகல் பிராடக்ட்ஸ் லிமிடெட்,
313, எஸ்பிளனேட், மதராஸ்.

ஏஜன்ட் இல்லாத இடங்களுக்கு ஏஜன்டுகள் தேவை. ஏஜன்ஸி நிபந்தனைகளுக்கு மேற்குறிப்பிட்ட விலாசத்துக்கு எழுதவும்.

F. M. S. & S. S-க்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—
தி இண்டியன் பிலிம் ஏஜன்சி, பிணங், சிங்கப்பூர்.

இங்கு ரிகார்டுகள் கிடைக்குமிடம்:—
ஜம்ஸ் ஸ்டோர்ஸ், 167, மவுண்ட்ரோட், மதராஸ்

திருச்சி ஏஜன்ட்:—

டாக்கர்ஸ் மியூஸிகல் பிராடக்ட்ஸ், பெரிய பஜார்.

பரத நாட்டியம்

—

परतनாட்டியமென்பது இந்தியாவின் புராதனக் கலைகளில் உயர்தரமான வொன்று. இக்காலில் அதனை பயப்பியலிப்போர் தொகை அருகிவிட்டது. போஷகரின்மை இதற்குப் பெரும்பாலும் காரணம். கொஞ்சகாலமாக இக்கலை நவஜீவன் பெற்று வருகிறது. அதனை ஆர்வத்துடன் பயின்று வரும் சில நாரீமணிகள் தங்கள் திறமையால் கலைக்கு சோபையைக் கொடுத்து வருகின்றனர். பயிலுவோர், பயிற்றுவோர், போஷகர் இம் மூவகுப்பாரின் ஒத்துழைப்பு மிருந்தாலன்றி கலை செழித்து வளராது.

மற்றோரிடத்தில் பிரசுரமாகியுள்ள படங்களில் காணப்படுவது ஹம்ஸ தமயந்தி என்னும் சிறுமி பாட்டிலும் மிருதங்கத்திலும் வல்லவள். ஸ்ரீமான் சின்னையா நாயுடுவிடம் கலையை அப்பியஸித்தவள். ஸ்ரீமான் நாயுடு பெரிய வித்வான். ஸாஹித்யக்காரரும்கூட, 'தேவதேவரும் தேனிபாருள' என்றாரம்பிக்கும் இனிய பதம் இவரியற்றியது. ஸ்ரீமதி ஹம்ஸ தமயந்தி நவரஸங்களையும் அபிநயித்துக் காண்பித்திருக்கிறார்கள் அபிநயத்தின் சிறப்பு பிரத்யக்ஷம். இதை வாசகர்களே கண்டுகொள்ளலாம்.

शृङ्गारं क्षितिनन्दिनी विहरणे वीरं धनुर्भञ्जने ।
कारुण्यं बलि भोजने अद्भुतरसं सिन्धौ गिरिस्थापने ॥
हास्यं शूर्पणखा मुखे भयमखे भीभत्समन्या मुखे ।
रौद्रं रावणमर्धने मुनिजने शान्तं वपुः पातुनः ॥

ச்ருங்காரம், வீரம், காருண்யம், அத்புதம், ஹாஸ்யம், பயம், பீபத்ஸம், ரௌத்ரம், சாந்தம் என்பனவைகளில் ஸ்ரீமத் ராமாயணக் கதையில் இந் நவரஸங்களு மிருப்பதாக ஒருசுலோகம் கூறுகிறது. அந்த ச்லோகத்தையும் மேலே காணலாம். சுலோகத்தின் தாத்பரியம் முழுவதும் படம் பிடிக்கப்படவில்லை. ஒவ்வொரு ரஸத்திற்கும் எத்தனையோ பாவங்கள். குறிப்பாகச் சிலவற்றையே ஸ்ரீமதி ஹம்ஸ தமயந்தி அபிநயித்திருக்கிறார். இக்கலையின் அபிநேவதை கலைஞரைக்காக்குமாக.

—

பாரிஜாத:—ஸந்தானம், கல்பகம், ஹரிசந்தனம், மந்தாரம், பாரிஜாதம் என்ற விருக்ஷங்கள் தேவேந்திரனுடைய நந்தனமென்னும் உத்யான வனத்தில் உள்ளவை. இவைகளும், காமதேனு முதலியவைகளும் அண்டினோர் நினைத்தவற்றை அப்போதே கொடுத்துதவும் சக்தி வாய்ந்தவையென நூல்களில் கூறப்பட்டிருக்கிறது பக்தர்கள் வேண்டியவற்றையெல்லாம் அளிக்கும் பரமகருணாநிதியை ஸ்வாமிகள் 'ஸஜ்ஜனகண பாரிஜாத' என்று ஸம்போதனம் செய்கிறார்.

பாவஜரிபு பாவஸதன:—ஸ்வாமிகளுக்கு சைவ வைஷ்ணவ பேதபுத்தி கிடையாது. 'சங்கரமித்ரம்' என்று 'பஜரே என்ற கீர்த்தனத்திலும் வேறுவிதமாக இதர கீர்த்தனங்களிலும் ப்ரயோகித்திருப்பதே இதற்கு அத்தாக்ஷியாகும்.

தாமஸ ஜனஹ்ருதய தூர:—'நிரவதிஸுகத' என்ற கீர்த்தனத்தில் ஸ்வாமிகள் 'தாமஸ ராஜஸமானவதூர' என்று ஸம்போதனம் செய்திருப்பதைக்கவனிக்கவும்.

IV

அஸாவேரி. சதுரச்ர ரூபகம்

இந்த ராகம் 72 மேளகர்த்தா முறைப்படி 8-வது கர்த்தாராகமான (ஹநும) தோடியில் ஜன்யம். ஔடவஸம்பூர்ணம் ஸரிமபதஸ்-ஸ்நிதபமகரிஸ என்று க்ரமம். பாஷாங்கராகம். ஆரோஹணத்தில் (ரிமரிமபதஸா என்று பிடிக்கும்போது) சதுச்ருதி ரிஷபம் பேசுகிறது. இந்த ராகத்தில் காந்தாரத்தைச் சிறிது அளவிற் குறைவாகவும் கமகமாகவும் பிடிக்கவேண்டும். அவரோஹணத்தில் "ஸநிதப மகரிஸ" என்ற ஸம்பூர்ணப் பிரயோகம் காணப்படினும் "ஸ்நிஸ்பத மப ரிகாரிஸ" என்றும், "ஸ்ரிதஸ் பதமப ரிகாரிஸ' என்றும் வழங்குகின்ற ஸஞ்சாரங்களே ராகக்களையை நன்கு புலப்படுத்துகின்றன. இந்த ராகத்தின் பூரண லக்ஷணங்களும் ஶ்ரீ தீக்ஷிதர் கீர்த்தனங்களால் மட்டுமே நன்றாயறியத்தக்கவை.

பல்லவி

ரிமரீ	மா பா ; பா	தபமா	கா ; ரீஸா	ரிமரீ	மா பா ; பா	மபதப	பமகா ரீஸா
ஜ வ	க ஜா ; ஸ	மே	; த	ஜ க	க ஜா ; ஸ	மே...	...... த
ரிமரீ	மா பா ; பா	மபதப	பமகரி ஸரிமா	; பா	தா ஸ்ா ; ஸ்ா	ஸ்நிதப	பமகா ரீஸா
ஜ க	க ஜா ; ஸ	மே	த	; தூர்	ஜ நா ; க	பு ரு	ஷோ... த
ரிமரீ	மா பா ; பா	மபதப	பமகரி ஸரிமா	; பா	தா ஸ்ா ; ஸ்ா	ஸ்நிஸ் ப	த மப ரிகாரிஸ
ஜ க	க ஜா ; ஸ	மே	த	; தூர்	ஜ நா ; க	பு... ரு	ஷோ... த

(ஜக்கஜாஸமேத)

அனுபல்லவி

;* பா	மா பா ; தா	தாபா	தா ; ஸ்ா ; ஸ்ா	; நித	பம பா ; தா	தாபா	தாஸ்ா ; ஸ்ா
;* ஸ	ந கா ; தி	ஸாமு	தி தி ; த	; ஸ	ந கா ; தி	ஸாமு	தி தி ; த
;* நித	பம பா ; தா	தாபா	தா ஸ்ாரிக்ாரி	ஸ்ா ரீ	தாஸ்ா பாதா	மபதப	பமகா ரீஸா
;* ஸ	ந கா ; தி	ஸாமு	னி தி த	ஸ	ஜ் ஜ ன கண	பா...	ரி ஜா த

(ஜகஜாஸமேத)

சரணம்

பா ;	பா பா ; பா	பமகா	ரீஸா தாஸா	ரி மரீ	மா பா பா பா	மபமா	காகா ரீஸா
ச்யா ;	ம ஸாக் ; த	ரா ங்	க ர ங் க	ச ய	ன வி க த	மா...	...... ய
பா ;	பா பா ; பா	பமகா	ரீஸா தாஸா	ரிமரீ	மா பா பா பா	மபதப	பமகா ரீஸா
ச்யா ;	ம ஸாக் ; த	ரா ங்	க ர ங் க	ச ய	ன வி க த	மா...	...... ய
;* பம	பாதாஸ்ாஸ்ா	தாபா	தா ஸ்ா ; ஸ்ா	நிதபா	மா பா ; தா	மபதப	பமகா ரீஸா
;* தா	மஸ ஜன	ஸ்ருத	ய தா ; ர	த்யா	க ரா ; ஜ	கே...	...... ய
;* பம	பாதாஸ்ாஸ்ா	தாபா	தா ஸ்ா ; ஸ்ா	ஸ்ா ரீ	தாஸ்ா பாதா	மபதப	பமகா ரீஸா
;* தா	மஸ ஜன	ஸ்ருத	ய தா ; ர	த்யா	க ரா ஜ	சோ...	...... ய

விநோதக்கொத்து

ராமு:—நேற்று நீ ஏற்பாடு செய்த விருந்திற்கு வந்திருந்தவர்கள் நாட்டியமாடினர்களாமே?

சங்கரன்:—ஒரு விருந்தாளி தவறிப்போய் ஒரு தேளீக் கூண்டைக் கலைத்துவிட்டார்.

* * * *

புதிதாக விவாகம் செய்து கொண்ட இருவர் குடித்தனம் நடத்தி வந்தனர். திடீரென்று கணவன் டாக்டரை அழைத்தான். டாக்டரும் அவர்கள் வீட்டுக்குச் சென்றார். அப்பொழுது கணவன் வாசலில் கடியாரத்துடன் நின்றுகொண்டிருந்தான்.

டாக்டர்:—என்ன விசேஷம்?

கணவன்:—ஒன்றுமில்லே. திடீரென என் மனைவிக்கு உடம்பு அசௌக்கியம் ஏற்பட்டால் நீங்கள் சீக்கிரமாக வர முடியுமாவென்று பார்க்க வேண்டியிருந்தது. அதனால் தான் கூப்பிட்டேன். பரவா யில்லை. நீங்கள் ஐந்து நிமிஷத்தில் வந்துவிட்டீர்கள்.

* * * *

வகுப்பில் முன் பெஞ்சியில் உட்கார்ந்திருந்த ஒரு மாணவன் தூங்கிக்கொண்டிருந்தான் உபாத்தியாயர் இதைக் கவனித்து விடவே, பக்கத்திலிருந்த மாணவன் அவனை எழுப்ப முயன்றான். இதையுங் கவனித்த உபாத்தியாயர் எழுப்ப முயன்ற மாணவனை மிரட்டினர்.

மாணவன்:— நீங்கள் தானே அவனைத் தூங்க வைத்தீர்கள்? வேண்டுமானல் நீங்களே எழுப்பிக்கொள்ளுங்கள்.

* * * *

எஜமானி:—நீ உடைக்கிற சாமான்களின் விலை உன் சம்பளத்தைக் காட்டிலும் அதிகமாகிறதே? என்ன செய்வது இதற்கு?

வேலைக்காரி:—சம்பளத்தை உயர்த்திவிடுங்களேன்.

* * * *

1605ம் வருஷம் நவம்பர் மாதம் 5-ந் தேதி கய் பாக்ஸ் என்பவர் லண்டன் பார்லிமெண்ட் கட்டிடங்களை வெடி மருந்து வைத்து நாசமாக்கிவிட முயற்சித்தாராம் அது நிறைவேறவில்லை. பிறகு அது முதற்கொண்டு ஒவ்வொரு வருஷமும் நவம்பர் மாதம் 5ந் தேதி இங்கிலாந்தில் ஜனங்கள் 'கய் பாக்ஸ்' தினத்தைக் கொண்டாடுகின்றனர். அன்று 'கய் பாக்ஸ்' உருவத்தைப் 'போல் பட்டாஸ் முதலிய' வாணங்களால் செய்து கொளுத்துகின்றனர். இரவு முழுதும் இக் கேளிக்கைகள் நடைபெறுகின்றன.

வெற்றி கிட்டியது

என மிஸ்டர்...........22-6-36உ. பம்பாயிலிருந்து எழுதுகிறார்

"தங்கள் "திபேத் மூலிகை' யால் தான் நான் மெட்ரிக் பரீக்ஷையில் தேறினேன்."

"திபேத் மூலிகை"யால் கீழ்க்கண்டவை சித்தியாகின்றன. ஸ்வாமி யோகியின் வரப்பிரசாதம்

1. வசீகரம் ஆண் பெண் இருபாலருக்கும் இடையில் துணையமான தா... உடனே விளைவிக்கும். இதை அணிபவர் அதன் ஆச்சரிய சக்தியை விரைவில் அறிவர் விலை ரூபா 3-8-0

2. வியாபாரமும், தொழிலும்:—நிச்சயமான தொழில் விருத்தியும், இலாபமும் சித்திக்கும். விலை ரூ 3-8-0

3. வியாஜ்யங்கள்:— இதன் சக்தியால் நம்பமுடியாத எவ்வித வியாஜ்யங்களும் ஜெயமாகும். விலை ரூ. 3-8-0

4. வியாதிகள்:— முடியாதெனக் கைவிடப்பட்ட சகலவித கொடிய ரோகங்களும் அடியோடு நீங்கும் விலை ரூபா 3-8-0 5. உத்தியோகம்:—வேலையில்லாத திண்டாட்டத்தில் அவதிப்படும் இளைஞருக்கு அவரவர் ஸ்திதிக்குத் தகுந்தபடி உத்தியோகம் கிடைக்கும். சம்பள உயர்வும் உத்தியோக மேன்மையும் நிச்சயம் விலை ரூ. 3-8-0 6 பரீக்ஷைகள்:- எவ்விதப் பரீக்ஷைகளிலும் நிச்சயமாய்த் தேறலாம். விலை ரூபா 3-8-0 7 சத்ருக்களை ஜெயித்தல்:—எவ்வளவு அபாயகரமான விரோதிகளும் இதை அணிபவர் முன், முழந்தாளிட்டுப் பணிவர். விலை ரூபா 3-8-0 8 க்ரஹ தோஷம்:-எல்லாவிதமான க்ரஹ தோஷங்களும் சாந்தியாகும். விலை ரூபா 3-8-0 9. ஆரோக்யமும், செல்வமும்:—எளிதில் சித்திக்கும். விலை ரூ. 3-8-0

அறிவிப்பு:—இந்த சாஸ்திரங்களில் நம்பிக்கை உள்ளவர்கள் மாத்திரம் தங்கள் நோக்கம் இன்னதென்பதைக் குறித்து எழுதவும். ஒவ்வொரு நோக்கத்துக்கும் தனிப்பட்ட மூலிகை அவசியம். ஒரு மூலிகையின் விலை ரூபா 3-8-0. தபால் சார்ஜு வேறு ஒரே தடவையில் 3 மூலிகைகள் வாங்கினல் தபால் சார்ஜ் உள்பட ரூ. 9-6-0

BIJOYA LODGE, (S.M.W.)
P.O SALKIA HOWRAH.

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசுபெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. 1 வருஷ மாதவாரிப் பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

உயர்ந்த
வைரங்கள்
T. R.
ஜோஷி & சன்ஸ்,
Diamond Merchants
38, ஏகாம்பரேசுவரர் அக்ரஹாரம்
பி டி. மதராஸ்

HAVE A SOUND SLEEP

By using our Indian-made Mosquito curtains, highly approved by persons of every rank for their strong netting, durability and beautiful finishing.

PRICES.

		Ordinary.	Superior.	Best	
6' x 3½' x 3½'	Re.	1- 0	1- 4	1- 8	each
6' x 4' x 4'	"	1- 4	1- 8	1-12	"
6½' x 4½' x 4½'	"	1- 8	1-12	2- 0	"
7' x 5' x 5'	"	1-12	2- 0	2- 4	"
7½' x 6' x 6'	"	2- 0	2- 4	2- 8	"

Purchaser of three will get one curtain 6' x 4' x 4' free. Packing Free.
POSTAGE EXTRA.

PRABHAT TRADING CO.,
12, Sikderpara Lane, Barabazaar,
CALCUTTA.

மியூச்சுவல்
அஷ்யூரன்ஸ் கம்பெனி,
லிமிடெட்.

தலைமை ஆபீஸ் :
187, மவுண்ட் ரோட், மதராஸ்.

நவீன, சாஸ்திர பூர்வமான தாராளத் தன்மை கொண்ட பாலிஸி ஒப்பந்தங்கள் எம்மிடம் கிடைக்கும். எல்லோரையும் திருப்தி செய்விப்பவை. குறைந்த பிரீமிய விகிதங்கள்

டி. வி. ராமமூர்த்தி,
செக்ரிடரி

"குப்த மந்திரம்"
ரூபா 100 இனம்.

லக்ஷம் லக்ஷமாகப் பணத்தைச் செலவழித்துச் சாதிக்க முடியாத காரியங்களை இந்த மந்திரத்தை ஏழு தடவை ஜபித்துச் சாதிக்கலாம். கஷ்டமெதுவுமில்லை. முன் தயாரிப்பு அவசியமில்லை. யாவரும் உங்களை நேசிப்பார்கள். இது ஓர் 'வசீகரண மந்திரம்' உங்களுக்கு அதிர்ஷ்டமுண்டாகும்; வியாஜ்யத்தில் வெற்றியும், வியாபாரத்தில் லாபமும் அளிக்கும். பலனில்லையென நிரூபிப்பவர்க்கு ரூ 100 இனம். தபால் செலவு உள்பட ரூ 2-7.

SIDDHA MANTRA ASHRAM
No 33/6, P.O. Katrisarai (Gaya)

ரூ. 100 இனும்

(மாந்திரீக மோதிரம்)

காதல் விஷயங்களில் வெற்றியைத் தரும். பரீக்ஷையில் தேர்ச்சி உண்டாகும், உத்தியோகம், புத்திர பாக்கியம், செல்வம் முதலியவைகளைத் தரும். வியாஜ்ஜியங்களில் வெற்றி, வியாதிகள் நீங்கும். அதிர்ஷ்டம் உண்டாகும். இதை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். விலை ரூ. 2.

BENGAL MESMERISM HOUSE,
(S. M.) Panchpota, BENGAL

நரை மயிரை அகற்றுங்கள்

உங்களது தலைமயிர் வெகுகாலமாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் விவலேன் ஹேர் ஆயிலை உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே விவலேன் எண்ணெயை உபயோகியுங்கள். அதிக நரையில்லாவிடில் சிறிய பாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனும்.

சயண்டிபிக் பப்ளிஷிங்கம்பெனி,
(மெடிகல் டிபார்ட்மெண்டு, S. 15)
பவானிப்பூர், — கல்கத்தா.

மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—
ஜெ. ஹஸாரிமால் & கம்பெனி, 260, சைனாபஜார் ரோட்,
ஸப் ஸ்டாக்கிஸ்டு:—
தாதா & கம்பெனி, மருந்து வியாபாரிகள், 52, லைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்.
செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்டு:—
பரேக் பிரதர்ஸ், ஜம்மா மஸ்ஜித்

சேலத்தில் முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்ட நர்சரி தோட்டம்

3 வருஷத்தில் காய்க்கக்கூடிய ஒட்டுமாஞ்செடிகள், ஒட்டு பழ வர்க்கச்செடிகளும் இன்னும் இதர செடிகளும் கிடைக்கும். இங்கிலீஷ் அல்லது நாட்டுக் காய்கறி, இங்கிலீஷ் புஷ்ப விதைகள், 20 சாம்பெல் பாக்கெட் விலை ரூ. 2-10. சாம்பல் பாக்கெட் விலை ரூ 1-4 கேட்லாக் இனும்.

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஜெட் நர்சரி தோட்டம், சேலம்.

தமிழ்நாட்டில்
குறைந்த சந்தா மாதப்பத்திரிகை
"சித்தன்"

ஒன்றே கட்டுரைகள், கதைகள், ஹாஸ்யம், உலக விநோதம், வைத்தியக்குறிப்பு, சினிமா விமர்சனம், முதலியனகொண்டது மாதிரிப்பிரதி இனும். 3000 பிரதிகள் வெளியாகின்றன. விளம்பர விகிதம் குறைவு.

சந்தாஉள்நாடுஅணு8. வெளிநாடு ரூ.1.

மானேஜர், சித்தன், பழனி.



கெற்ப சஞ்சீவி எண்ணை.

ஸ்திரீகளுக்கு மாதாந்தரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்று வலியை அந்த க்ஷணமே நிறுத்தும். சூதக க்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதக கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திரக்ஷி, சூதகக் கட்டினால் உண்டாகும் தலைவலி, உடம்புவலி, கைகால் பொருத்துகள் உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்தூலித்துப் போதல், வயிர் பெருத்தல், காந்தல், எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூர்ச்சை, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒருசெம்பு ஜலங்கூட தூக்கமுடியாத பலஹீனம், சூதக ஜன்னி முதலிய வியாதிகளையெல்லாம் தீர்த்து கெற்பப்பை சுத்திகரிக்கப்பட்டு, கெற்ப உற்பத்தியை உண்டுபண்ணும். 6-வித மலடு தீரும். கெற்பம் தரிக்கவிடாது பண்ணும் கிருமிகளைக் கூட்டுடன் வெளியிலகற்றிவிடும். திடகாத்திரமும், பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

1 நபருக்கு 3 புட்டி வேண்டும்.

1 புட்டி ரூ. 2. 3-புட்டி ரூ. 5. செலவு வேற

குணம் இல்லாவிடில் ரூபா 5 வாபீஸ்

பழனி வைத்திய ஆசிரியர்

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,

சித்த வைத்திய சாலை,
146, புரசவாக்கம் ஹைரோட், சென்னை
தலைமை ஆபீஸ், பழனி

குமார சஞ்சீவினி
ரிஜிஸ்டர்ட்
குழந்தைகளின்
ஈரல்-குலை-ஜுரக்கட்டி
வியாதிகளுக்கு
நிகரற்ற குணமுடையது
வைத்தியர், அண்ணாமலை முதலியார்
வைத்தியர் அண்ணாமலை தெரு, மயிலாப்பூர், சென்னை

ஜோதிஷ மகுடவர்த்தனர்

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர்-பீமகவி-சுகர்-புஜண்டா சாஸ்திர நிபுணர் இப்பூமண்டலப் புகழுரையில் எதிர்கால பலன் கூறுவதில் "உலக சிரேஷ்டர்" என வெற்றி பாமாலையும் தங்க சன்னதங்களும் பெற்றவர்.

ஜாதகம் லக்கின நக்ஷத்திர ஸ்புடஞ் செய்து பொதுப் பலன் எழுத ரூ. 1 ஒரு தெசைக்கு புக்தி பலன் ரூ. 2. அஷ்ட வர்க்கம் ஆயுள்வரை புக்தி பலன் ரூபா 7. ஜாதக குறிப்பு முன் பணம் ரூபா 4. தேவை.) 1 வருட மாதா மாதப் பலன் ரூ. 1-8. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரோபஸர் N. சுப்பிரமணியம்,
நெ. 2 (ஜோதிஷ ஆசிரமம்)
வாலாஜாபாத், S. I. R. சென்னை

வெண்குஷ்டம் பெருவியாதி

எவ்வளவு கடுமையானதாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும் நாலே வாரத்தில் குணம். நிவர்த்திக்கு உத்தாவாதம்.

விவரங்களுக்கெழுதுக,
KAMALA WORKS (S. M.)
Panchpota—Bengal, India.

ரூ. 500 இனும்!

திமிர்குஷ்டமும், வெண்குஷ்டமும்.

உலகக் கியாதி வாய்ந்த எனது மருந்துகளை 15 தினங்களுக்கு உபயோகித்தால் எல்லாவிதமான திமிர்குஷ்டமும், வெண்குஷ்டமும் நிரந்தரமாக நிவர்த்தியாகிவிடும். பற்பல டாக்டர்கள், கவிராஜர்கள், ஹக்கீம்களும் கைவிட்டதானுலும்கூட பாவாயில்லை. எனது அற்புத மருந்துகளை உபயோகியுங்கள். பலனில்லை என நிரூபிப்பவருக்கு ரூ. 500 இனும். 7 நாள் மருந்து ரூ. 2—8; 15 நாள் மருந்து ரூ. 4. தபால் செலவு தனி

SRI SWAMI & Co,
(34) Panchpota, Bengal.

நமது புதிய தொடர் கதை.

ராதா

(குருமலை ஸ்ரீமான் சுந்தரம் பிள்ளை.)

[இத் தொடர்கதையின் ஆசிரியர் நமது காரியாலயத்தில் பல வருஷங்கள் உதவி ஆசிரியராக விருந்தவர். "போற்றேடி" என்றதோரு நாவலை எழுதிப் பேரும் புகழும் பெற்றவர். பொது ஜனங்களால் பெரிதும் பஹுமானிக்கப்பட்டவர். இவர் எழுதிய இந்தக் கதையை நாம் மிகுந்த சந்தோஷத்துடன் பிரசுரம் செய்கிறோம்.]

I. பெண் பாடசாலை

மகேந்திரம் என்பது ஒரு ராஜதானி நகரம். அதை ஆளும் அரசன் பெயர் பசுபதி மகாராஜா. அவ்வரசனும் அந்த ராஜ்யத்திலுள்ள ஜனங்களும் பேசும் பாஷை தெலுங்கு. தமிழர்களும் அங்கே குடியேறி வசிக்கின்றார்கள் இவ்வூரிலுள்ள தெலுங்கர்களுக்குத் தமிழ்ப் பேசத் தெரியாவிட்டாலும், பிறர் தமிழில் பேசுவது அர்த்தமாகும். இவ்வூரிலுள்ள பெரிய தெருவொன்றைக் கிழ ராஜவீதி யென்றும் திவான் கச்சேரித் தெருவென்றும் ஜனங்கள் சொல்வார்கள். இவ்வீதியின் மேற்கு வரிசையில் கிறிஸ்தவப் பாதிரிமார்களால் நடத்தப்பட்டு வரும் பெண் பாடசாலையொன்றுண்டு. அதில் பாலர் வகுப்பு முதல் நான்காம் வகுப்பு வரை ஐந்து வகுப்புகள் உண்டு. அதற்கு ஹெட்மாஸ்டர் அதாவது தலைமை உபாத்தியாயர் மரியதாஸ் கோனர் என்னும் சுமார் இருபது வயதுள்ள ஒரு பால்ய கிறிஸ்தவர்.

ஒரு நாள் காலை 7 மணிக்குப் பள்ளிக்கூடத்துப் பெண்களெல்லாரும் வந்து பலகையிலுட்கார்ந்து பாடங்களைப்படித்துக் கொண்டிருந்தார்கள். ஹெட்மாஸ்டர் மரியதாஸரும் உபாத்தியாயினிகளும் வந்து தங்கள் ஆஸனங்களில் உட்கார்ந்தார்கள். மரியதாஸர் வழக்கப்பிரகாரம் காலை ஜபத்தை முடித்துவிட்டு நான்காம் வகுப்புப் பெண்களுக்குக் கணக்குப் போட்டுவிட்டு நாற்காலியிற் சாய்ந்துகொண்டிருந்தார். சிறுமிகள் வரிசையாய் நின்று கற்பலகைகளில் கணக்குத் தீர்ந்து கொண்டிருந்தார்கள். இந்தச் சமயத்தில் சுமார் 17 அல்லது 18 வயதுள்ள ஒரு சுந்தரமான மாணாக்கன், மேலே ஒரு அரைக்கைக் குடுத்துணியும் அதற்குமேல் ஒரு யோக வேஷ்டியும் தரித்தவனாய், கையில் ஒரு பெரிய புஸ்தகத்தை வைத்துக்கொண்டு பெண் பாடசாலைக்குள் நுழைந்து மரியதாஸரைப் பார்த்து, "குட்மார்னிங் ஸார்" என்று சலாம் செய்துகொண்டு அவர் முன்பு கிடந்த பெரிய மேஜையின் மேல் உட்கார்ந்தான்.

மாணாக்கனைக் கண்ட மரியதாஸர் "குட்மார்னிங் மிஸ்டர் அமரேசன், உம்மைக்காண்பது மிகவும் அபூர்வமாய்விட்டதே! அதென்ன புஸ்தகம்? வித்யாஸாகரர் பிரசங்கமா?" என்று கேட்கவும், அமரேசன் "அல்ல இது ரானடே பிரசங்கம்" என்று பதில் சொன்னான். இருவரும் பாதி இங்கிலீஷிலும் பாதி தமிழிலுமாய்ப் பேசிக்கொண்டும் புஸ்தகத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டுமிருந்தார்கள். இதற்குள் பெண்கள் கணக்குத் தீர்ந்த கற்பலகைகளைக் கீழே கவிழ்த்துவிட்டு உட்கார்ந்தார்கள். உடனே மரியதாஸர் அமரேசனைப் பார்த்து, "நீர் சிலவற்றைப் பாரும்" என்று சொல்லிவிட்டு, ஒருபுறமிருந்து வரிசையாய்க் கணக்குகளைச் சரி பார்த்துக்கொண்டு வந்தார். அமரேசன் மற்றொரு புறமிருந்து பார்க்கத் தொடங்கினான். ஒரு பெண்ணாவது கணக்குகளைச் சரியாய்த் தீராதிருந்ததைக் கண்டு, அமரேசன் "ஸார், இந்தக் கணக்குகளை ஆறுவது வகுப்பு மாணாக்கரும் தீரமாட்டார்களே? நான்காம் வகுப்புப் பெண்களுக்குப் போடலாமோ?" என்று சொல்லிக் கொண்டு கற்பலகைகளைப் பார்த்தான். பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே, ஒரு பலகையிலுட்கார்ந்து தன்னையே இமைகொட்டாமல் நோக்கிக்கொண்டிருந்த சுமார் பத்து பதினொரு வயதுள்ள ஒரு தமிழ்ப் பெண்ணைக் கண்டான். அவள் புதிதாய்ப் பாடசாலையிற் சேர்ந்திருப்பவளெனவும் தமிழ் நாட்டைச் சேர்ந்தவளெனவும் அவள் முகக்களையினால் ஊகித்துக்கொண்டு, அவளுடைய சிலேட்டைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலுடன் மற்றவைகளை விரைவாய் முடித்துவிட்டு, அந்தப் பெண்ணைப் பார்த்து, "சிலேட்டைக் கொண்டு வா" என்றான். அந்தப் பெண் தன்னையறியாது தோன்றும் நாணம் கலந்த அச்சத்துடன் தன் சிலேட்டை இரண்டு கைகளினாலும் அமரேசனிடம் நீட்டினாள். இந்தப் பெண் கற்பலகையுடன் அமரேசனை நெருங்கி வரவர, அவனுடைய கவனமெல்லாம் பெண்ணின் மேலும், அவள் யார் என்றறிய வேண்டுமென்ற ஆவலிலும் சென்றபடியால், அவள் நீட்டிய சிலேட்டைக் கையினால் நன்றாய்ப்பிடியாமல் அமரேசன் கீழே நழுவவிட்டு விட்டான். நழுவிய சிலேட்டை அந்தச் சிறுமி மறுபடியும் எடுத்து அமரேசன் மடியில் வைத்தாள். அப்பொழுது அமரேசன் பெண்ணை நோக்கி, "தாயே, நீ யார்; உனக்கு எந்த ஊர்?" என மிகவும் அன்பாய்க் கேட்டான். அதற்குச் சிறுமி நாணத்துடன் சிறிது திகைத்து மறுமொழி கூறுவதற்குமுன் பக்கத்தில் நின்ற மற்றொரு தெலுங்கப் பெண், "இவளுக்கு நெல்லூர். நேற்று முதல் இங்கே படிக்கிறாள். இவள் ஐயாவுக்கு மலை வேலையாம்" என்று தெலுங்கிற் சொன்னாள். ஆனால், இந்த மறுமொழியைச் செவிகொடுத்துக் கேளாமல் அமரேசன் தமிழ்ப் பெண்ணின் மறுமொழியை யெதிர்பார்த்து அவள் முகத்தையே நோக்கினான்.

பெண்ணும் கவிழ்ந்த தலையுடன், "எங்களுக்குப் பாற்கடல்; என் அப்பா நெல்லூரில் பாரெஸ்டு ரேஞ்சராயிருந்தார்கள்; இப்பொழுது இங்கே மாற்றியிருக்கிறது" என்று இனிய குரலில் மறுமொழி கூறினாள். அமரேசன், "உன் பெயரென்ன" என்றான். அதற்கு அவள், "என் பெயர் ராதா" என்றாள். உடனே அமரேசன் அவள் சிலேட்டிலுள்ள கணக்குகளைப் பார்த்தான். ஐந்து கணக்குகளும் சரியாய்த் தீர்ப்பட்டிருந்தன. இதைக்கண்ட அமரேசன் மிகுந்த சந்தோஷமடைந்து சிலேட்டை ராதாவின் கையிற் கொடுத்து, அவள் திறமைக்காகத் தான் திருப்தியடைந்த குறிப்பை ஒரு புன்னகையினாற் காட்டி, மற்றப் பெண்களின் கணக்குகளைப் பார்த்தான். அப்படிப் பார்க்கும்பொழுதெல்லாம், அவன் மனம் ராதாவைப் பின்பற்றிச் சென்றபடியால், ஒன்றிரண்டு சிலேட்டுகளை மட்டுமேதான் அவனாற் பார்க்க முடிந்தது. இதற்குள் மரியதாஸர் எல்லாச் சிலேட்டுகளையும் பார்த்து முடித்துப் பெண்களை நோக்கி, "எழுந்து நில்லுங்கள்" என்று சொன்னார். பெண்கள் எழுந்து நின்றார்கள். அப்பொழுது,

மரியதாஸர்:—சுன்னம் எடுத்தவர்கள் அதாவது ஒரு கணக்குக்கூடத் தீராத பெண்கள் உண்டா?

சில பெண்கள்:—நாங்கள். (என்று வெட்கத்துடன் வந்தார்கள்).

மரிய:—நீங்கள் கடைசிக்குப் போய் நில்லுங்கள். ஒரு கணக்குத் தீர்ந்தவர்கள் யார்?

சில பெண்கள்:—நாங்கள்.

மரிய:—நீங்களும் அவர்களோடு நில்லுங்கள். இனி, இரண்டு கணக்குத் தீர்ந்த பெண்கள் யாரார்?

நான்கு பெண்கள்:—நாங்கள்.

மரிய:—சரி. நீங்கள் உட்காரலாம். இனிமேல், மூன்று கணக்குத் தீர்ந்தவர்கள் வாருங்கள்

இரண்டு பெண்கள்:—(சிறிது பெருமையுடன்) நாங்கள்.

மரிய:—இரண்டு பேர்தானா? ரொம்ப சந்தோஷம் உட்காருங்கள். நான்கு கணக்குத் தீர்ந்தவர்கள் உண்டா? (ஒருவருமில்லை. ராதா மட்டும் தனியாய் நின்றாள்)

மரிய:—ஒருவருமில்லையா? ராதா நீ தீர்ந்துவிட்டாயா? நல்லது கெட்டிக்காரி. முதலில் உட்காரு (மற்றப் பெண்கள் பொறாமையுடன் ராதாவைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.)

அமரேசன்:—ஸார், இந்தப்

மனோரஞ்சனி
இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை. இராஜலக்ஷ்மி என்னும் நாவல் தொடர்ச்சியாய் வெளிவந்துகொண்டிருக்கிறது. இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இல்லை!
எம். எஸ். ராமுலு கம்பெனி,
286, எஸ்பிளனேட், மதராஸ்.

ராதா கவிழ்ந்த தலையுடன், "எங்களுக்குப் பாற்கடல்; என் அப்பா நெல்லூரில் பாரெஸ்டு ரேஞ்சராயிருந்தார்கள். இப்பொழுது இங்கே மாற்றியிருக்கிறது" என்று இனிய குரலில் மறுமொழி கூறினள்.

பெண் யார்? மிகவும் புத்திசாலியாயிருக்கிறளே? இவளுக்குப் பாற்கடலாமே? பாற்கடல் கோயமுத்தூர் ஜில்லாதானே?

மரிய:—பாற்கடல் சேலம் ஜில்லா ஈரோட்டிற்குச் சமீபம். இந்தப் பெண்ணின் பிதா நந்தகோப முதலியார் சுமார் முப்பத்தைந்து வயதுதானிருக்கும்; இதுவரையும் நெல்லூரில் ரேஞ்சராயிருந்தாராம். இப்பொழுது இவ்விடத்தில் ஜில்லாப் பாரெஸ்டாபீஸராய் வந்திருக்கிறார். சம்பளம் ரூபாய் இருநூறுவரையிருக்கலாம்.

அமரே:—சைவ முதலியாரா? பட்டணம் முதலியா?

மரிய:—சைவ முதலியார் போலத் தெரிகின்றது.

அம:—அவருக்குக் குழந்தைகளெத்தனை?

மரிய:—நான் விசாரிக்கவில்லை. இந்தக் குழந்தையைக் கேட்டால் தெரியும். ராதா, இங்கே வா. உன் அப்பாவுக்கு எத்தனை குழந்தைகள்?

ராதா:—நானொருத்திதான்; வேறே குழந்தைகளில்லை.

அம:—நீ இதற்கு முன் எங்கே படித்தாய்?

ராதா:—நெல்லூரில்.

அம:—அங்கே தெலுங்கு படித்தாயா, தமிழ் படித்தாயா?

ராதா:— பள்ளிக்கூடத்தில் தெலுங்குதான் படித்தேன். வீட்டில் என் அம்மை தமிழ் படிப்பித்தாள்.

அம:—தமிழ் நன்றாய் எழுதப் படிக்கத் தெரியுமா?

ராதா:—வாசிக்கத்தெரியும்; கொஞ்சம் கொஞ்சம் எழுதுவேன்.

மரிய:—தமிழ் நாட்டுக் குழந்தைகளே புத்திசாலிகள்தான்.

அம:—(இங்கிலீஷில்) இவள் மிகவும் புத்திசாலி; பெரியவளானல் நல்ல உத்தமியாயிருப்பாள்.

மரிய:—குழந்தையின் முகத்தைப் பார்த்தவுடன், உமக்கு அவ்வளவு குறிப்புத் தோன்றிவிட்டதா?

அம:—ஏன் தோன்றாது? முகத்தில் எல்லாம் தோன்றும்.

மரிய:-(பரிகாஸமாய்) உமக்குத் தோன்றாத காரியம்தான் எது?

அம:—ஸார், நேரமாய்விட்டது. நான் போகிறேன்.

என்று மேஜையினின்று குதித்து, ராதாவின் முகத்தையே பார்த்துக்கொண்டு வெளியே போய்விட்டான்.

இவ்வாறு அமரேசனும் மரியதாஸரும் பேசிக் கொண்டிருக்கும்பொழுது, ராதா தனக்குள், "இவர் யார்? ஹெட்மாஸ்டர் நாற்காலியிலிருக்கும்பொழுது இவர் மேஜைமேலேறி உட்கார்ந்தாரே! ஹெட்மாஸ்டருடைய சிநேகிதரோ அல்லது இவரும் ஒரு உபாத்தியாயரோ? நன்றாய்த் தமிழ் பேசுகிறாரே? நம்முடைய ஜாதியோ? மிகவும் நல்ல குணமுடையவராயிருக்கின்றாரே?" என்று பலவிதமாய் யோசித்து, ஒன்றும் நிச்சயிக்க முடியாதவளாய், பக்கத்திலுட்கார்ந்திருந்த காந்தியென்னும் கிறிஸ்தவப் பெண்ணை நோக்கி,

ராதா:—(தெலுங்கில்) இவர் யார்? இப்போது வந்துவிட்டுப் போனவர்?

காந்தி:-(தமிழ் நடையுடையோடிருப்பவரெல்லாரும் ஒரே ஊரிலுள்ளவர்களென்ற பிழையான எண்ணத்துடன்) இவருக்கு உங்கள் ஊர்தானே?

ராதா:—எங்களூரா? இவருக்குப் பாற்கடலா? உனக்கெப்படித் தெரியும்?

காந்தி:— இவர் தமிழர்தானே? பின்னை உங்களூர் அல்லாமல் எந்தவூர்?

ராதா:—அதெப்படி? தமிழர் பாற்கடலில் மட்டும்தானு உண்டு? சாவிவாடி, ஆலவாய், தஞ்சை, குடந்தை இந்த இடங்களிலெல்லாம் தமிழர்கள்தானே உண்டு?

காந்தி:—அப்படியா? உங்களுக்கு அத்தனை ஊர்களுண்டா? அது எனக்குத் தெரியாது. இவர் தமிழர்தான். இவர் பெயர் அமரேசன். மாம்ஸம் சாப்பிடமாட்டார். சைவம்தான். மகாராஜா காலேஜில் பத்தாவது வகுப்பில் வாசிக்கிறார். நிரம்பக் கெட்டிக்காரராம். வகுப்பில் இவர்தான் முதற் பையனும். வருஷம்தோறும் பிரைஸ் புஸ்தகம் வாங்கியிருக்கிறார். நம்முடைய ஹெட்மாஸ்டர் ஊரிலில்லாத வேளையிலெல்லாம் இவர்தான் நமக்குப் படிப்பிப்பார். நல்ல மனிதர்.

(29-ம் பக்கம் பார்க்க)

25உ வாரப் பதிப்பைப்பற்றிய
முக்கிய அறிவிப்பு.

அக்டோபர் மாதம் 18-ந் தேதி மித்திரன் வாரப்பதிப்பிலேயே, 25-ந் தேதி வாரப்பதிப்பு காரியாலயத்திற்கு விஜயதசமியை முன்னிட்டு விடுமுறை நாளென்றும், ஆகையால் அவ்வாரத்திய வாரப் பதிப்பு வெளிவராதென்றும் அறிவித்திருந்தோம். ஆயினும், 25-ந் தேதி வாரப்பதிப்பு வரவில்லை என்று பலர் புகார் செய்வதால் இப்பொழுது அதை மறுபடியும் தெரிவிக்கிறோம்.

இதுவரையில் வாசகர்களால் அனுப்பப்பட்டு நமக்குக் கிடைத்துள்ள மூன்றணு ஸ்டாம்புகளுக்குப் பதிலாக விஜயதசமி மலர் அனுப்பிவிட்டோம். இது சம்பந்தமாக இனிமேல் யாதொரு கடிதப் போக்குவரத்தும் கவனிக்கப்படமாட்டாது. விஜயதசமி மலர் எல்லாம் விற்பனையாகிவிட்டபடியால் இனிமேல் ஒருவருக்கும் அனுப்ப இயலாது.

பத்மராஜா
இனிய துப்பறியும்
தமிழ் நாவல்.
ஸ்ரீமதி பத்மாஸனி எழுதியது

இதில் புத்தி சாதுர்யமாய், அதிகக் கேட்டை விளைக்கும் கொடிய சூழ்ச்சிகளும், அதனல் நிரபராதிகள் படுந்துயரமும், துப்பறிவோர் அதிசாமர்த்தியமும், திடுக்கிடும் சம்பவங்களும் பொதிந்து விளங்குகின்றன. பொறுமையால் வருங்கேடு இறுதியில் வெளியாகின்றது. டிம்மி 286 பக்கங்கள்.

விலை ரூ. 1—8.

'மித்திரன்' ரயில்வே புத்தகசாலைகளிலெல்லாம் கிடைக்கும்.

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை.

துலா ஸ்நானம்

(கே. வெங்கட்ராமன்)

ஐப்பசி மாசம், துலாஸ்நானத்திற்குப் பேர்போனது. அதற்கு மாயவரம் பேர்போன இடம். ஆயிரக்கணக்கான ஜனங்கள், அருகாமையிலிருப்பவர்கள், தூர ஊர்களில் இருப்பவர்கள் எல்லோரும் இத்துலாஸ்நானத்திற்காக மாயவரம் செல்வார்கள். அப்படிச் செய்தால் உடனே மோக்ஷம் அருகில் வந்துவிடுமாம். எது எப்படி இருந்தாலும் ரயில்வே கம்பனிக்கு வரவு குறைவில்லை.

எல்லாப்பாட்டிகளைப்போல, என் பாட்டியும் தானும் துலாஸ்நானத்திற்கு மாயவரம் செல்லவேண்டும் என்று மிகவும் தொந்திரவு செய்ததால், என் பாட்டியை அழைத்துக்கொண்டு, நான் மாயவரம் சென்றேன்.

ரயிலில் கூட்டமோ மிக அதிகமாயிருந்தது. இந்தக் கூட்டத்தில் நடந்தகளேபரத்தைச் சொல்லி முடியாது. சாதாரணமாகக்கூடும் ஒரு சிறிய கூட்டத்திலேயே, ஏகக் கூச்சல், குழப்பம் நடப்பதை நாம் கண்டிருக்கும்பொழுது, இப்பேர்ப்பட்ட பெரிய கூட்டங்களில் நடக்கும் கூச்சலையும், குழப்பத்தையும், சொல்லாமலே ஒருவாறு யூகித்துக்கொள்ளலாம். ஒரு பக்கம், கும்பலில் நசுக்கப்பட்டு அதனால் வீரிட்டுக் கத்தும் குழந்தைகளின் சப்தம்; ஸ்திரீகள், புருடர்கள் ஒருவரை ஒருவர் கும்பலில் பிரிந்துவிட்டு, பிறகு அவர்களைக் கூவி அழைக்கும் சப்தம் ஒருபுறம்; போர்டர்கள் போடும் சப்தம் ஒரு பக்கம்; மூட்டை மாறிகள் இடித்துத் தள்ளிக்கொண்டு செல்லும் குழப்பம் ஒருபுறம். இப்படியாக ஸ்டேஷன் அல்லோகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது ... ; ... கவிய ... பட்டு, ஒன்றையும் பறிகொடுக்காமல், என் பாட்டியை ஸ்டேஷனுக்கு வெளியே அழைத்துக்கொண்டு வந்தது தெய்வம் அறிந்துபோச்சு. வெளியில் வந்தும் தொந்திரவு நிற்கவில்லை. என் மூட்டையை ஒருபக்கமும் என் கையை ஒரு புறமும், என் பாட்டி தான் மடியாக வைத்துக்கொண்டிருந்த மடிசஞ்சியை ஒரு பக்கமுமாகப் பல திக்குகளில் பல வண்டிக்காரர் இழுக்க ஆரம்பித்தார்கள். இவர்களிடம், ஒருவாறுகதப்பி ஒரு வண்டியில் ஏறி, நாங்கள் முன்பே ஏற்பாடு செய்து வைத்திருந்த வீடு அடைய சுமார் மூன்று மணி சாவகாசமாயிற்று. நாங்கள் இறங்கின வீடு ஆற்றங்கரையில் இருந்தது.

எங்கள் வீட்டிற்கு அடுத்த வீடு, மெழுகப்பட்டு, மிகவும் அழகாக வைக்கப்பட்டிருந்தது. வீடோ காலி. பிறகு என் பாட்டி சென்று விசாரிக்க ஆரம்பித்தாள். விசாரித்ததில் அவ்வீட்டிற்கு, ஒரு பெரிய உத்தியோகஸ்தரின் மனைவி, துலாஸ்நானத்திற்காக வந்து இறங்கப்போவதாகத் தெரிந்தது.

நான் விசாரித்துத் திரும்பி வருவதற்குள் என் பாட்டி, அவளுடைய சிநேகிதர்கள் எல்லாருக்கும் ஊறுகாய்களும் அப்பளாமும் தாராளமாக வழங்கிய மாதும், காரில் வந்தவரும் தங்கள் சாமான்களுடன் மோட்டாரில் ஏறிச் சென்றனர்.

மறு நாள் மிகவும் அழகு பொருந்திய, சுமார் முப்பது வயது மதிக்கக்கூடிய ஒரு மாது மட்டும் அவ்வீட்டிற்கு ஒரு மோட்டாரில் வந்து இறங்கினாள். இதற்குள் என் பாட்டிக்கு பல ஸ்நேகிதர்கள் உண்டாகிவிட்டார்கள். பாட்டிகளைப் பற்றி கேட்பானேன்? உடனே என் பாட்டியும், அவளுடைய சிநேகிதர்களும் இம்மாதின் ஸ்நேகத்தை அடைய முயற்சி செய்ய ஆரம்பித்தார்கள்.

மறுநாள், என் பாட்டி, அவளுடைய சிநேகிதர்கள், நான் எல்லோரும் காவேரியில் ஸ்நானம் செய்யச் சென்றோம். இம்மாது அங்கு வந்திருந்தாள். "பிருந்தாவன துறை" என்று ஓர் துறை அங்கு இருக்கிறது. அத்துறையில், மிகவும் தெய்வ பக்தி யுள்ளவர்களும், மிகவும் மடியாக உள்ளவர்களும் தான் ஸ்நானம் செய்வது வழக்கம். நாங்களும் அத்துறையில் சென்று ஸ்நானம் செய்தோம். இம்மாதும் அங்கு வந்தே ஸ்நானம் செய்தாள். கொஞ்சம் கொஞ்சமாக என் பாட்டி அம்மாதின் ஸ்நேகிதத்தைப் பெற்றாள். உடனே என் பாட்டியின் ஸ்நேகிதர்களும் அம்மாதின் ஸ்நேகிதத்தை அடைந்தார்கள்.

தினம் இவர்களெல்லாம், அம்மாதின் வீட்டிற்குச் சென்று வம்பளப்பதும், அவளுடன் தினம் ஆற்றுக்குசெல்லுவதுமாக காலத்தைப் போக்கினார்கள். வரவர இவர்களுடைய ஸ்நேகிதம் முதிர்ந்து வரலாயிற்று. பணக்காரி என்றால் கேட்பானேன்? அதுவும் மோட்டார்காரில் வந்து இறங்கியவளாயிற்றே!

நாளாக,நாளாகக் கொஞ்சம் கொஞ்சமாக அம்மாதிடம் சாமான்கள் கடன் வாங்க ஆரம்பித்தார்கள். அம்மாதிடம் முதல்தரமான ஊறுகாய்களும், வடாங்களும், அப்பளாமும், மிக அதிகமாக இருந்தன.

அசல் புனா ஜாகர்
வைரங்கள்
இயற்கை முறையில்
உற்பத்தி செய்யப்பட்ட
(CULTURE)
நல்முத்துக்கள்
கிடைக்குமிடம்:
சிமன்லால் பிரதாப் சந்த்
175, சைனாபஜார் மதராஸ்.

ஜலதோஷம்-அலட்சியத்தால்
கடுமையான நோய்கள் ஏற்படலாம்!

ஜலதோஷத்தை அலட்சியமாக விட்டால், அது பிறகு இன்புளுவென்ஸாவாகவோ அல்லது ந்யுமோனியாவாகவோ மாறலாம். எனவே ஆரம்பத்திலேயே மிஸ்டல் உபயோகியுங்கள். மிஸ்டல் சிறந்த முறையைக்கொண்டு தயாரிக்கப்படுவது. இலவச டிராப்பருடன் கூடிய ஒரு புட்டி மிஸ்டலை இன்றே வாங்குக.

Mistol
REG. TRADE MARK

ஜலதோஷத்தை முளையிலேயே கிள்ளி எறிகிறது.

M11

என்பாட்டியும் கொஞ்சம் ஊறுகாயும், வடாமும், அவளிடமிருந்து வாங்கிவந்து தானும் தின்ருள்; எனக்கும் போட்டாள். ஆகா, அவ்வூறுகாயின் ருசியைச் சொல்ல ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனுலும், சொல்ல முடியாதென்ருல் ஒரே நாக்கை உடைய என்னல் எப்படிச் சொல்லமுடியும்? அதை நினைக்க நினைக்க இப்பொழுதும் என் நாக்கில் ஜலம் சொட்டுகிறது. தினம் என்பாட்டி அவளிடம் இருந்து ஊறுகாய் வாங்கிவர ஆரம்பித்தாள். இப்படியாக நாங்கள் காலங் கழித்தோம்.

துலாஸ்நான வைபவமும் முடிந்தது. நாங்களெல்லாம், எங்கள் மூட்டைகளைக் கட்ட ஆரம்பித்தோம். இதற்குள்ளாக என் பாட்டியும், அவளுடைய சிநேகிதர்களும், பக்கத்து வீட்டு மாது எப்பொழுது ஊருக்குப் போகிருள் என்பதை விசாரிக்கச் சென்ருர்கள். இதற்குள்ளாக, நான் மூட்டை முடிச்சுகளையெல்லாம்கட்டி வைத்துவிட்டு, அன்றைக்கு ஊருக்குக் கிளம்பத் தயாராக இருந்தேன்.

கொஞ்ச நேரம் பொறுத்து என் பாட்டியும் வந்தாள்.

"என்டா! அவள் நாளைக் கார்த்தாலே ஊருக்குப் போருளாம். அவளை ஊருக்கு அனுப்பிச்சுட்டு, நாளைக்கு மத்தியானம் நாம்ப போகலாம்" என்று சொன்னுள். என் பாட்டிமட்டும், ஒரு காரியம் செய்ய வேண்டுமென்ருல், அதைச் செய்தே தீருவாள். ஆகையால் அவளைத் திருப்புவது முடியாத காரியமென்று அறிந்து, நான் பேசாமல் ஒத்துக்கொண்டேன்.

மறு நாள் காலை வந்தது. பக்கத்து வீட்டு வாசலில் ஒரு கார் வந்து நின்றது உடனே என் பாட்டியும், அவளுடைய சிநேகிதர்களும் அம்மாதின் வீட்டிற்குச் செல்லத் தயாராக வாசலிற்கு வந்தார்கள். ஆனல் அவர்களில் ஒருவரும் அதற்கு மேல் செல்லவில்லை. ஏன்? அக் காரிலிருந்து இறங்கி உள்ளே சென்ற ஒருவர்தான் அதற்குக் காரணம். அவர் யார்? ஆங்கிலேயர் மாதிரி இருந்தார். என் பாட்டிக்கும், காரில் .. அவளுடைய சிநேகிதர்களுக்கும் ஒன்றுமே புரியவில்லை அதற்குள் என் பாட்டி, என்னை மோட்டார் டிரைவரிடம் சென்று அவர் யாரென்று விசாரிக்கச் சொன்னுள். நானும் அப்படியே சென்று அவனைவிசாரித்தேன். நான் விசாரித்து திரும்பி வருவதற்குள், காரில் வந்தவரும் என் பாட்டி, அவளுடைய ஸ்நேகிதர்கள் எல்லாருக்கும், ஊறுகாய்களும் அப்பளாமும் தாராளமாக வழங்கிய மாதும், தங்கள் சாமான்களுடன் அக் காரில் ஏறிச் சென்றுவிட்டார்கள்.

'என்டா? இதென்னடா ஆச்சரியமாயிருக்கு பட்டப் பகலிலே, இந்தமாதிரி, ஒரு வெள்ளைக்காரனேடே அவ போபிட்டாளே? டிரைவரை விசாரிச்சையே அவன் என்ன சொன்னுன்? இவ எந்தசாதிடா? என்று" சரமாரியாக கேட்க ஆரம்பித்தாள். எனக்கோ அந்த டிரைவர் சொன்னதைச் சொல்ல இஷ்டமில்லை.

"என்னடா? திருதிருன்னு முழிக்கிறே அவன் சொன்னத்தைச் சொல்லித் தொலையடா?" என்று கர்ச்சித்தாள் என் பாட்டி.

இனிமேல் நான் என்ன செய்வது?

"அவன் சொன்னத்தை சொல்ரேன். பின்பு நீங்கதான் மிகவும் வருத்தப்படப் போகிரீர்கள்" என்று எச்சரித்தேன்.

ஆனல் என் பாட்டியும், அவளுடைய சிநேகிதர்களும் ஒரே மூச்சில் "பரவா இல்லே" என்று சொன்னுர்கள்.

"சரி. ஆங்கிலேயன் மாதிரி இருந்தானே, அவன் தான், நீங்கள் ஊறுகாய் வாங்கிச் சாப்பிட்ட மாதின் கணவன்" என்று சொன்னேன். உடனே என் பாட்டியும், மற்றவர்களும்,

"ஐயையோ இவளிடமிருந்து ஊறுகாய் எல்லாம் வாங்கித் தின்னுட்டமே! காசிக்குப் போனுக்கூட இந்த பாவம் போகாதே! நம்ம உடம்பை பொசுக்கினு கூட இந்த கர்மம் போகாதே! துலாஸ்நானப் பலன் இப்படியா ஆகனும்?" அடுக்க ஆரம்பித்தார்கள்.

பிறகு இவர்களெல்லாம் ஒன்றுகூடி, இப்பாவத்தை, காசிக்குச் சென்று கங்கையில் கரைப்பதாக முடிவு செய்துகொண்டார்கள். என்னையும் கூப்பிட்டார்கள். நானே, இப்பாவத்தை நானே வைத்துக்கொள்ள சித்தமென்றும். காசியில் இருக்கும் கங்கா நதியில் கரைக்க இஷ்டமில்லையென்றும், சொல்லி, வர மறுந்துவிட்டேன்.

நரையை ஒழியுங்கள்!

இந்த ஆயிலால் தலைநரை ஒழிந்துவிடும். வேரிலிருந்தே கூந்தல் கருமை பெறும்; 60-வயது வரை அப்படியே இருக்கும். பலனில்லையேல் 2 மடங்கு கிரயம் வாபீஸ். சொற்ப நரைக்கு ரூபா 3-க்கும், கால்பங்கு நரைக்கு ரூபா 5-க்கும் பாதிக்கு மேலோ அல்லது பூராவுமோ விழுந்தால் ரூபா 9-க்கும் ஆயில் வாங்குக

கடிதங்கள் ஆங்கிலத்திலேயே எழுதப்படவேண்டும்

BALA KALA STORES,
P. O. Kansi Simri (Darbhanga

அதி அற்புத அழகு

சுகாதாரம் மிகுந்த

டில்பஹார் ஸோப்பு

(ரிஜிஸ்டர்ட்)

மூன்று கட்டிகளின் விலை

ஒரு ரூபாய் தான்

(தபால் செலவு தனி)

டில்பஹார் ஸோப்பு சிறந்தசுத்தி கரிப்பைத் தரும் கிருமி நாசினி. சரும எரிச்சல் அல்லது அரிப்பை அகற்றிச் சருமத்தைப் பாது காக்கும் அழகை விருத்திசெய்யும்.

உங்கள் சருமத்தைப் பாதுகாருங்கள்!

ஆட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களும், இதர பெண்களும் காமினியா ஸ்னோ வின் சருமப் பாதுகாப்பையும், போஷாக்கையும் பெரிதும் பாராட்டுகிருர்கள். சருமத்திற்குப் புத்துயிரும், உல்லாசமுமளிப்பது. சருமச் சுருக்கங்கள் முதலியவற்றை நீக்குவதில் சிறந்ததென சிபார்சு பெற்றது. விலை புட்டி 1-க்கு 10 அணு. தபால்செலவு தனி. தபால் செலவுக்காக 1 அணு ஸ்டாம்பனுப்புவோருக்கு சாம்பிள் இலவசம்.

சோல் ஏஜண்ட் :—

The Anglo Indian Drug & Chemical Co

285, Jumma Musjid, BOMBAY 2.

ஸ்டாக்கிஸ்டுகள் : ஜே. எஸ். சேட் & கம்பெனி,
68, பைக்ராப்ட்ஸ் ரோட், — திருவல்லிக்கேணி.

கொனேலா - கொனேலாக்ஸ் - கொனேசெல்ப்

கொனேசான்

வெள்ளை, வெட்டைக்கு

பாட்டில், ரூ. 1-8-0. யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதருஸ்
201, மோகல் வீதி. ரங்கூன். (மதுரை, பம்பாய், கல்கத்தா.)

10 வருஷம் உத்திரவாதமுள்ள புது மாதிரியான பஞ்சவர்ண கல்செயின்கள்

(செயின் 1-க்கு

ரூபாய் 5 மட்டும்.

எங்கள் ரோல்டு கோல்டு செயின்கள் ஐந்துவித நிறமான செயற்கைக் கற்கள் வைத்துக் கட்டிய இந்த புது மோஸ்தர் செயின்களை குழந்தைகளும், பெரியவர்களும் அணிந்து ஆனந்த மடையலாம்.

(கேட்லாக இலவசம்)

R. S. பிரகாசம் & Co,

அலாட கோல்டு ஜுவல்லர்ஸ்,
187, சைனு பஜார் ரோட், ஜி. டி
மதறாஸ்

அலுமினியம்

ஏழையின் வெள்ளி

ஒரு ராத்தல் 8,000 ரூபாய்க்கு விற்ற காலம்

(ஸ்ரீமான் பி. ஆர். சுந்தராஜன்)

சார்லஸ் மாடின் ஹால்

1883-ஆம் ஆண்டு வசந்த காலம், வட அமெரிக்காவில் ஒஹியோ மாகாணத்தில், ஆபர்லின் நகரத்தில் உள்ள ஆபர்லின் காலேஜில் விஞ்ஞான வகுப்பு அறையில் மாணவர்கள் கூடியிருந்தனர். புரொபசர் பிராங்கு எப். ஜூவட் அன்றைய விஞ்ஞான உபந்நியாச முடிவில், "என் அன்பிற்குரிய மாணவர்களே! உங்களில் எவராகிலும் மலிவான முறையில் சுலபமாக, அதன் கலப்புப் பொருட்களிலிருந்து அலுமினியத்தைப் பிரித்து ஏராளமாக உற்பத்தி செய்யும் வழியைக் கண்டு பிடித்தால், அவன் விரைவில் கோடீச்வரன் ஆவான்" என்றார். அதைக் கேட்ட ஒல்லியான ஒரு மாணவன் பக்கத்துப் பையனைத் தட்டி, "அன்ப! நான் அந்த முறையைக் கண்டு பிடிக்கிறேன்" என்று புன்னகையுடன் கூறினான்.

சார்லஸ் மார்டின் ஹால் என்பது அம்மாணவனின் பெயர். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்பதிற்கிலக்காக மூன்று வருஷத்தற்குள்ளாகவே அவன் எண்ணம் நிறைவேறிற்று. தன் வீட்டில் இருந்த பழைய மின்சார பாட்டரிகளையும், பல கருவிகளையும் உபயோகித்து ஊக்கத்துடன் உழைத்ததன் பயனாக, அது வரை, பல பெயர்பெற்ற விஞ்ஞானிகளும் 'முடியாது' என்று கைவிட்ட காரியம் நிறைவேறிற்று.

1886-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் 23-ந் தேதி மின்சாரத்தை உபயோகித்துப் புதிய முறையில் அலுமினியத்தை உற்பத்தி செய்தார் சார்லஸ் மார்டின் ஹால். அப்பொழுது அவருக்கு வயது இருபத்திமூன்றே. அவர் காட்டிய முறையைப் பின்பற்றி இப்பொழுது வருஷாவருஷம் 37 50,00 000 (முப்பத்தேழு கோடியே ஐம்பது லக்ஷம்) ராத்தல் அலுமினியம் உற்பத்தி செய்யப்படுகிறது.

முதன்முதலாக சார்லஸ் மார்டின் ஹால் மின்சாரத்தை உபயோகித்துப் பல சிறு அலுமினியத் துண்டுகளை உற்பத்தி செய்தார். அவை இன்றும் பத்திரமாக வைக்கப்பட்டிருக்கின்றன.

அலுமினியத்தின் ஆச்சரியமான சரித்திரம்

பிரபு முதல் பிச்சைக்காரன் வரை சர்வசாதாரணமாய் உபயோகிக்கும் இந்த அலுமினியத்தின் சரித்திரம் அத்யாச்சரியமானது. சுமார் 111 வருஷங்களுக்கு முன்பு அலுமினியத்தைப்பற்றி ஒருவருக்கும் ஒன்றும் தெரியாது. வெள்ளைக் களிமண் என்ற 'பக்சைட்' என்ற ஒருவகை மண்ணுடன் கலந்து காணப்பட்ட அலுமினியத்தை முதலில் கண்டுபிடித்த பெருமை ஹான்ஸ் கிரிஸ்டியன் ஆர்ஸ்டட் என்ற டேனிஷ் விஞ்ஞானியைச் சார்ந்ததாகும். 1825-ம் ஆண்டில் இரசாயன முறையில் குண்டூசியின் தலையளவுள்ள சிறு அலுமினிய உருண்டைகளை அவர் உற்பத்தி செய்தார். பிரடெரிக் வூலர் என்ற ஜெர்மானிய இரசாயன சாஸ்திரியும் சிறிதளவு அலுமினியத்தை உற்பத்தி செய்தார். அதன் பளபளப்பையும், கனமற்றதும் ஆனால் உறுதிமிக்கதுமான தன்மையையும் கண்ட மூன்றாவது நெப்போலியன் அதில் ஆசை கொண்டார். தனது சைனியத்திலுள்ள ஆபீசர்களுக்கு செய்து கொடுக்க விரும்பினார். அதற்காக அந்த அதிசய உலோகத்தை மிகுதியாக உற்பத்தி செய்யும்படி ஹென்ரி ஸெயின்ட் கிளார் டெவில் என்ற பிரஞ்சு இரசாயன சாஸ்திரியை உத்தரவிட்டார். ஆனால், சக்கரவர்த்தி நெப்போலியன் எதிர்பார்த்த அளவில் அது உற்பத்தி செய்ய முடியவில்லை. மேலும் அதன் விலை மிகவும் அதிகமாயிற்று. ஆகவே, நெப்போலியன் அவ் விலையுயர்ந்த அலுமினியத்தால் தனது சட்டைப் பித்தான்களையும், ஆகாரத்தைக் குத்தி எடுத்துச் சாப்பிட உதவும் 'போர்க்' என்னும் கவை இடுக்கியையும் செய்துகொண்டார். தனது நெருங்கிய நண்பர்களுக்கும், பெரிய அந்தஸ்திலுள்ள விருந்தாளிகளுக்கு மட்டுமே அந்த போர்க்கினால் ரொட்டி முதலானவைகளை எடுத்துச் சாப்பிட அநுமதித்தாராம். மேலும், பிரான்ஸ் தேசத்துச் சக்கரவர்த்தி மூன்றாவது நெப்போலியனுடைய ஒரு வயதுக் குழந்தை இளவரசனுக்கு, அப்

(26-ம் பக்கம் பார்க்க)

வாஷிங்டனிலுள்ள கடற்படை ஞாபகார்த்தக் கட்டிடத்தின் உச்சி, இது அலுமினியத்தால் செய்யப்பட்டது. அலை எழுவதும் அதன்

வெண்குஷ்டம், பெரு வியாதி

இம்மருந்தை உபயோகித்தால் இவ்விரு வியாதிகளும் ஒழியும் ஹக்கீம்கள், வைத்தியர்கள், கவிராஜர்களின் வைத்தியத்தில் பலனேற்படாமல் போயிருந்தால்கூட இதை உபயோகியுங்கள். பலனில்லையேல் ரூபா 500 இனாம். விலை ரூபா 2.

கண்ணோட்டம் - பிரமுகர்கள்

(இடது பக்கம்).
இந்தியா கவர்ன்மெண்டு ஸொலிஸிட்டராக மாதம் 3,000 ரூபாய் சம்பளத்தில் நியமிக்கப்பட்டிருக்கும் டாக்டர் மிட்டர். இந்தப் பதவியை வஹிக்கும் முதல் இந்தியர் இவர் தான்.

(வலது பக்கம்)
இந்தியா கவர்ன்மெண்டு உள்நாட்டு இலாகா காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கும் மிஸ்டா ஆர். எம். மாக்ஸ்வெல்.

க்வாலியர் மஹாராஜா. இவர் சென்ற 2-ந் தேதி சமஸ்தான அரசுரிமையை ஏற்றுக்கொண்டார்.



அகில இந்திய ரேடியோ ஸ்தாபன பிரதம எஞ்சினியர் மிஸ்டர் ஸி. டபிள்யூ. காய்டரும் ஒலி பரப்பு டெபுடி கண்ட்ரோலர் ஸ்ரீமான் ஏ. எஸ். புகாரியும் சென்னையிலும், திருச்சியிலும், ஒலி பரப்புக் கூடங்கள் ஸ்தாபிப்பதற்காக இந்தியா கவர்ன்மெண்டார் ஒருதிட்டம் போட்டிருக்கின்றனர். அது சம்பந்தமான கட்டிடங்களைக் கட்டுவதற்கு வசதியான இடத்தைப் பார்வையிட இவ்விருவரும் சென்னைக்கும் திருச்சிக்கும் விஜயம் செய்தனர்.

மைசூர் சர்க்கார் உப காரியதரிசு ஸ்ரீமான் டி. ஸி. சுப்பராயப்பா. இவர் சமீபத்தில் உத்தியோகத்திலிருந்து விலகிக் கொண்டார்.

காசி ஹிந்து சர்வகலா சாலை ஆசிரியர் டாக்டர் பி. எல். ஆத்ரேயா. "யோக வாஸிஷ்டத்தைப்பற்றி இவர் எழுதியுள்ள ஒரு புத்தகத்திற்காக அவகார் சமஸ்தானாதிபதியான ராஜா சராஜ்பல் சிங் ரூ. 10,000 பரிசுளை ...

அலிகாரைச் சேர்ந்த ஸ்ரீமான் ஸ்ரீ சந்த் ஸிங்கால். ரப்பர் இல்லாததும் காற்று புகக் கூடியதுமான மழைக்கு அணிந்து கொள்ளும் கோட்டுகளை இவர்

லாகூரில் ஹிந்து மகாசபை மகாநாடு நடைபெற்றபோது வங்காளத்திலிருந்து வந்த சில ஹிந்து யுவர்கள் தேகாப்பியாஸங்களைச் செய்து காட்டினர்.

இந்திய வர்த்தமானம்

காங்கிரஸ் ஜோதி

பம்பாய்தான் காங்கிரஸின் ஜன்ம ஸ்தானம் அங்கே அக்னி வளர்க்கப்பட்டு அதிலிருந்து பற்ற வைத்த தீவர்த்தி, காங்கிரஸ் மகா சபைக் கூட்ட முதல் நாளில், கொடி வணக்க சமயத்தில், காங்கிரஸ் நடைபெறவிருக்கும் பெயிஸ்பூருக்குக் கொண்டு வரப்படும். முந்நூறு தொண்டர்கள் மைலுக்கொருவராக நின்று கொள்ளுவார்கள். ஒவ்வொரு தொண்டரும் ஒவ்வொரு மைல் ஓடி ஜோதியை மற்றொரு தொண்டரிடம் ஒப்புவித்து, கைமாறி ஜோதி பெயிஸ்பூர் வந்து சேரும். டிசம்பர் 20-ந் தேதி பம்பாயிலிருந்து முதல் தொண்டர் புறப்படுவார்.

* * * *

6 லக்ஷம் காங்கிரஸ் மெம்பர்கள்

வடமேற்கு எல்லைப்புற மாகாணம் நீங்கலாக இந்தியாவின் இதர பாகங்களில் மொத்தம் 6 லக்ஷம் காங்கிரஸ் மெம்பர்களுக்குமேல் சேர்ந்திருக்கின்றனர். சென்ற வருஷம் 4 லக்ஷம் மெம்பர்களே சேர்ந்திருந்தனர்.

* * * *

"வகுப்புத் தீர்ப்புக்கு எதிராகவே ஓட் செய்ய வேண்டும்"

சாதாரணமாக ஓட்டு எடுக்கும்பக்ஷத்தில் காங்கிரஸ்காரர் வகுப்புத் தீர்ப்புக்கு எதிராகத்தான் ஓட்டுச் செய்ய வேண்டுமென்று காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லால் நேரு முடிவு செய்திருக்கிறார். இது காங்கிரஸ் தலைவருக்கும் பிஹார் தேசியக் கட்சியைச்

லாலுக்கும் நடந்துள்ள கடிதப் போக்குவரத்திலிருந்து தெரிகிறது.

* * * *

கடிகார ஓசை சங்கீதமா?

பிர்னு (வங்காளம், மைமன் சிங் ஜில்லா) என்னுமிடத்தில் புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் ஒரு மசூதியில் கடிகாரம் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. அது அடிக்கும் மணியின் ஓசை சங்கீதமென்றும் அதையப்புறப்படுத்திவிட வேண்டுமென்றும் முஸ்லீம்கள் கிளர்ச்சி செய்ததால் அது அப்புறப்படுத்தப்பட்டு விட்டது.

* * * *

சென்னை கார்ப்போரேஷன் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி

சென்னை புதிய முனிஸிபல் சட்டத்தின்படி சென்றவாரம் 40 டிவிஷன்களிலும் தேர்தல் நடைபெற்றது. இந்த 40 டிவிஷன்களிலும் மொத்தம் 32,364 ஓட்டர்கள் இருக்கின்றனர். இவர்களில் 26,489 பேர்கள் ஓட்டுரிமையை உபயோகித்தனர். மேற்படி 40 ஸ்தானங்களில் 27 ஸ்தானங்களைக் காங்கிரஸ்காரர் கைப்பற்றிவிட்டனர். அவர்கள் பெயர்கள் வருமாறு:-ஸ்ரீமான்கள் பி.எம். ஆதிகேசவலு நாயக்கர், டாக்டர் யூ கிருஷ்ணராவ், எம்.எஸ். சுப்ரமணிய அய்யர், ராஜமன்னார் செட்டி, கே. ஸ்ரீராமுலு நாயுடு, ஜி. ரங்கய்ய நாயுடு, சாமி வெங்கடாசலம் செட்டி, எம். பாலசுப்ரமணியம், ராதா கிருஷ்ணப் பிள்ளை, பி. எஸ். பாஷ்யம் செட்டி, ஜி செல்வபதி செட்டி, எஸ். பக்கிரிசாமி பிள்ளை, எம். தாமோதரம்

யார், டி.ஜி. லக்ஷ்மணசாமி முதலியார், ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மீபதி, என். ராஜகோபாலன், ஸ்ரீமதி அம்மு ஸ்வாமிநாதன், டாக்டர் ஸையத் நியமதுல்லா. அப்துல் ஹமீத்கான், என். எஸ். வரதாச்சாரி, எ. ஆர். வி ஆசார், டி. வ ஸ்ரீனிவாஸாசாரி, கே. சுப்ரமணிய அய்யர், கே. பாஷ்யமய்யங்கார், மிஸஸ் ஆர். வி. சாஸ்திரி, எம். பக்தவத்ஸலம்.

தொழிலாளர்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்ட இரண்டு ஸ்தானங்களில் ஒன்றுக்குக் காங்கிரஸ்வாதியான ஸ்ரீமான் ராஜகோபால் நாயுடு தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜஸ்டிஸ் கட்சிக்கு மொத்தம் ஏழு ஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன. ஆதி திராவிடர்களுக்காக மூன்று ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அதற்கும் தேர்தல் நடந்து முடிந்துவிட்டது.

சென்னை நகரசபையிலுள்ள மொத்தம் 65 ஸ்தானங்களில் பாக்கியுள்ள 20 ஸ்தானங்களுள் சில ஸ்தாபனங்களுக்காக 15-ம், ஆல்டர்மென் தேர்தலுக்காக 5-ம் ஒதுக்கப்பட்டன. ஸ்தாபனங்களுக்காக ஒதுக்கப்பட்டதில் ஐரோப்பிய வியாபார சபைக்கு 6, இந்திய வியாபார சபைக்கு 5, ஆங்கிலோ இந்தியர் சங்கத்திற்கு 1, போர்ட் டிரஸ்டிற்கு 1, ரெயில்வேக்களுக்கு 1, சர்வகலாசாலைக்கு 1 என்று ஸ்தானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆல்டர்மென் தேர்தல்

மற்ற பக்கங்களில்

வாசாலைப் பிரதிக்ஞை	2
தென்னிந்தியப் பிரமுகர்கள்	4
ஸங்கீதப்பகுதி	6
பரத நாட்டியம்	8
விநோதக்கொத்து	9
ராதா (புதிய தொடர்கதை)	11
தலாஸ்நானம்	13
அலுமினியம்	15
சண்முகட்டம்-பிரமுகர்கள்	16
பிரபஞ்ச வர்த்தமானம்	23
தையல்வேலை	27
தீபாவளி அகராதி	28
விளையும் பயிர் முளையிலே (சிறுவர் பகுதி)	31
அதிசயம் ஆனால் உண்மை	32
கிருஷ்ண தேவராயர்	35
தவநாகரீகம்	39

பெற்றது. இதிலும் காங்கிரஸ் வாதிகளே வெற்றிபெற்றனர். ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி ரெட்டி, ஸ்ரீமான்கள் எஸ். சத்தியமூர்த்தி, டி. பி. மீனாக்ஷிசுந்தரம், டி. பிரகாசம், ஜனாப் யாகுர் ஹாஸன் ஆகியோர் ஆல்டர்மென்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்ற செவ்வாய்க்கிழமை மேயர் தேர்தல் நடைபெற்றது. அதில் காங்கிரஸ் அங்கத்தினர் கே ஸ்ரீராமுலு நாயுடு மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சென்னை மேயர் ஸ்ரீமான் கே

பிராசு பிடித்த மனைவி கணவனைக் கொன்றாள்

ரங்கூனில் ஒரு பர்மிய ஸ்திரீ தன் கணவனைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தாள். இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது தான் கணவனைக்கொன்றது உண்மையென்றும், அச்சமயத்தில் தனக்குப் பிராசு பிடித்திருந்ததென்றும், சுய அறிவுடன் தான் எதுவும் செய்யவில்லையென்றும் அவள் கூறினாள். ஜட்ஜ் இவள் கூறியதை ஏற்றுக்கொண்டு விடுதலை செய்தார். இவளைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் வைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

* * * *

பத்திரிகாசிரியருக்குத் தண்டனை

சென்ற ஜூலை மாதம் 17-ந் தேதி லாகூர் பிரின்ஸ் பாங்கிற்கு லிக்விடேடரை ஹைக்கோர்ட் நியமித்ததுபற்றி "ரியாஸத்" என்ற பத்திரிகை ஒரு வியாஸம் எழுதியிருந்தது. இது கோர்ட்டை அவமதிப்பதாகவிருக்கிறதென்று சொல்லி லாகூர் ஹைக்கோர்ட்டில் "ரியாஸத்" பத்திரிகையின் ஆசிரியர் ஜனுப் சையத் அஜயத்ஷாவின்மீது வழக்குத் தொடரப்பட்டது. இதில் ஜட்ஜ்கள் முடிவு கூறியிருக்கின்றனர். ஆசிரியர் இரண்டு மாதச் சிறை தண்டனை அனுபவித்து 1000 ரூபாய் அபராதமும் கொடுக்கவேண்டுமென்றும் அபராதம் செலுத்தும் வரை சிறையிலிருக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

* * * *

படுக்கையறையில் கல்யாண தம்பதிகள் தகராறு

சிவகாசியை அடுத்த கோபாலன்பட்டி கிராமத்தில் சென்ற 27-ந் தேதி கல்யாண தம்பதிகளுக்கிடையே படுக்கையறையில் தகராறு ஏற்பட்டு, 'அம்மி மிதித்து அருந்ததி காட்டிய' பெருங் கல் மனைவி மண்டை மீது எறியப்பட்டு மூளை சிதறி அப்போதே அவள் மாண்டாள். புருஷன் கைது செய்யப்பட்டிருக்கிறான். கொலையுண்ட பெண்ணுக்கு இம்மணத்தில் சற்றும் விருப்பமில்லாமலிருந்ததென்றும் சுற்றத்தார் வற்புறுத்துதலின் பேரில் விவாகம் நடந்ததென்றும் சொல்லப்படுகிறது.

* * * *

ரிஸர்வ் பாங்கி கவர்னர் ராஜிநாமா

இந்திய ரிசர்வ்பாங்கி கவர்னரான ஸர் ஆஸ்பர்ன் ஸ்மித் தம் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டார். இது ராஜப் பிரதிநிதியால் அங்கீகரிக்கப்பட்டுவிட்டது. ஸர் ஜேம்ஸ் கிரிக்குக்கும் இவருக்கும் அபிப்பிராய பேதமிருந்து வந்த [illegible] வில் இங்கிலாந்துக்குச் செல்லும்போது ராஜிநாமாச் செய்வாரென்று எதிர்பார்க்கப்பட்டது.

* * * *

"குலம் கோத்திரம் விசாரி"

மத்திய மாகாண போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆபீஸ் [illegible] இலாகாவிலிருந்து போலீஸ் ஸ்டேஷன்களுக்கு ஓர், புதிய சுற்றுத்தரவு வந்திருக்கிறதென்று செய்தி கிடைத்திருக்கிறது அதன்படி அடுத்து வரும் மாகாண சட்டசபைத் தேர்தல்களில் நிற்கும் அபேட்சகர்கள் "பெயரென்ன? அந்தஸ்தென்ன? யோக்யதை என்ன? கட்சியென்ன? கட்சி மாறுவாரா? யார் ஆதரவை கப்பியிருக்கிறார்?" என்றெல்லாம் விசாரணை செய்து போலீஸ் ஸ்டேஷன் அதிகாரிகள் அறிவிக்கவேண்டுமாம்.

* * * *

சென்னை விமானச் சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் சுந்தரம் பம்பாயிலிருந்து கராச்சி, ஜோத்பூர் மார்க்கமாக டில்லிக்கு எங்கும் விமானத்தை நிறுத்தாமல் பிரயாணம் செய்வதற்காகப் புறப்பட்டுச் சென்றார்

"இந்தியர் என்ற உணர்ச்சி"

சமீபத்தில் கட்டாக்கில் கூடிய ஒரிஸா மாகாணக் கிறிஸ்தவர்களது மகாநாட்டில் தலைமை வகித்த காளிகோட் திவான் ராவ்சாகிப் சதானந்த மகந்தி, "ஒரிஸா தனி மாகாணமாகிவிட்டாலும் இந்தியாவின் நலத்துடனேயே நமது நலமும் கலந்திருக்கிறதென்பதை நாம் மறக்கக்கூடாதென்றும், நாம் எப்போதும் இந்தியர் என்ற உணர்ச்சியுடன் [illegible] செய்ய வேண்டுமென்றும் வெறும் மாகாண உணர்ச்சிக்கு இடம் கொடுக்கக் கூடாதென்றும்" கூறினர்.

* * * *

மலேயாவுக்கு இந்தியத் தூது

இந்திய கவர்ன்மெண்டின் தூதுக்கோஷ்டியொன்று இம்மாதம் 27-ந் தேதி மலேயாவுக்குப் புறப்பட்டுப் போகுமெனத் தெரிகிறது. இத்தூதுக் கோஷ்டியில் மகாகனம் வி. எஸ். ஸ்ரீனிவாஸ சாஸ்திரியாரும் கல்விஇலாகா அடிஷனல் டிப்டி காரியதரிசி மிஸ்டர் பாஸ்மனும் மெம்பர்களாக இருப்பார்கள். இத்தூதுக் கோஷ்டியினர் மலேயாவிலுள்ள தொழிலாளர் நிலைமையையும் அங்குக் குடியேறிய இந்தியர் நிலைமையையும் ஆராய்வார்கள்.

பண்டைகாலத் தமிழ்நாட்டுக் கோயில்கள்

நமது விஜயதசமி மலரில் மேற்கண்ட கட்டுரையுடன் பிரசுரமாகியிருந்த படங்கள் ஸ்ரீமான் ஜே. எம். சோமசுந்தரம் எழுதிய "தஞ்சை பெரிய கோயில்" என்ற புத்தகத்திலிருந்து எடுத்து உபயோகிக்கப்பட்டவை.

* * * *

'சுயராஜ்யம் ஏற்படுத்தப்பட்டுவிட்டது"

"புது அரசியல் சட்டத்தின் மூலம் இந்தியாவில் சுயராஜ்யம் ஏற்படுத்தப்பட்டுவிட்டது. சுயராஜ்யம் அல்லது சுதந்திரத்தின் முக்கியாம்சம் ஏற்படவேண்டுமென்று இனிக் கிளர்ச்சி செய்வது ஏமாற்று; பொது ஜனங்களைத் தவறான வழிகளில் செலுத்தும் காரியம்; ஆகவே, இனி காங்கிரஸ் காரியங்களையும் அடுத்த காங்கிரஸுக்காக நிதி திரட்டுவதையும் தடைசெய்து உடனே உத்தரவு பிறப்பிக்கவேண்டும். நிதியை நிர்வகிக்க ஒரு ரிஸிவரையும் நியமிக்கவேண்டும்" என்று டாக்டர் ஸ்ரீதர வெங்கடேச கேட்கார் என்பவர் பெய்ஸ்பூர் காங்கிரஸ் உபசரணைக் கமிட்டித் தலைவரான ஸ்ரீயான் சங்கரராவ் தேவ்மீது பூனா சப் கோர்ட்டில் வியாஜ்யம் தொடர்ந்திருக்கிறார். இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது பிரதிவாதி தம்மீது சாட்டப்பட்ட குற்றங்களை மறுத்தும் வழக்கைத் தள்ளிவிடும்படிக் கோரியும் ஒரு ஸ்டேட்மெண்டைத் தாக்கல் செய்தார்.

கே. ஏ. ஸமாஜம் ஆஸ்பத்திரி.

ஷொரனூர் (P. O.) S. I. RY

ஸ்தாபிதம்—1916.

சிறந்த ஆரோக்ய ஸ்தலம்.

பாரத நதிக்கரையில் வனப்பு மிகுந்த காடுகளுக்கு மத்தியில்

நம்பிக்கை வாய்ந்த ஆயுர்வேத ஸ்தாபனம்	எல்லாவித ஆயுர்வேத மருந்துகளையும் தயாரிப்பவர்கள்

இந்த சமாஜம் வைத்தியசாலை, கொச்சி சமஸ்தானத்தில் பட்டசெருதுருத்தியிலுள்ளது. ஆகையினால் எக்ஸைஸ் நியமத்துக்கு விரோதமான உப்பு புகையிலை வகையரா தீர்வையுள்ள சாமான்களை பிரிட்டிஷ் இலாகாவிலிருந்து வைத்திய சாலைக்குள் கொண்டுவருவது சட்டத்துக்கு விரோதமாகும்.

கொச்சி கவர்ன்மெண்டாரின் சகாயமும் மேற்பார்வையுமுண்டு, பொதுஜன உதவியால் நடத்தப்படுவது. கேரளத்திலுள்ள பிரபல வைத்தியர்கள் டைரக்டர்களின் போர்டிலிருக்கின்றனர்.

புகழ்பெற்ற பிரம்மஸ்ரீ வைத்யரத்ன இ. டி. நாராயணன் மூஸ் அவர்கள், கேரள அஷ்டவைத்யர், கொச்சி சமஸ்தான வைத்யர், பிரதம வைத்யர்.

இடவசதிகள் அளிக்கப்படும். தாரா, நஸ்யம், சிரோவஸ்தி, பிழிச்சல், நவரகிழி, வஸ்தி முதலிய மலையாள ஆயுர்வேத முறையில், சிறமையான மேற்பார்வையில் வைத்யம் செய்யப்படும். தங்கும் செலவு வியாதயஸ்தர்களது.

மற்ற விவரங்களுக்கு, பதிலுக்கு ஸ்டாம்புடன் மானேஜருக்கு எழுதவும்.

18720

"இரண்டு சகோதரர்கள்"

கோயமுத்தூர், பரமேஸ்வர் ஸௌண்ட் பிக்சர்ஸ் கம்பெனியாரின் "இரண்டு சகோதரர்கள்" என்ற தமிழ் பேசும் படத்திலிருந்து சில காட்சிகள். கே. பி. கேசவன் (இடது பக்கம்), டி. எஸ். பாலையா, ஸ்ரீமதிகள் எஸ். என். கண்ணமணி, எம். எம். ராதாபாய், எஸ். என். விஜயலக்ஷ்மி முதலியோர் நடிகர்கள்.

நாட்டியமும்

சீதா ஒரு முத்தம்
— ச்ருங்காரம்

இந்த வில் ஒரு பிரமாதமா, ஆண் பிள்ளைக்கு?
—வீரம்



பாவம் காகாசுரன் பி

ராவணா! இப்போது காணடா இவ்வில்லின் திறத்தை!
—ரௌத்ரம்

நானா இவ்வளவும் செய்தேன் !

மஹரிஷிகளே, இனி ராக்ஷஸ பாதை

நவரஸங்களும்

...ம் காகசுரன் பிழைத்துப் போகட்டும்
—காருண்யம்

வானர சைந்நியங்களின் சாதனை என்னே ?
—அத்புதம்

சூர்ப்பனகா ! பேதையே !
—ஹாஸ்யம்

...ி ராக்ஷஸ பாதை இல்லையே ?
—சாக்கம்

பரஸ்திரீகளைப் பார்க்கவும் மாட்டேன்
—பீபத்ஸம்

பாபம் செய்யவா? நான் மாட்டேன்.

பாலஸ்தீனத்தில் பிரிட்டிஷ் படை





(மேல் படம்) பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த வெடிகுண்டு வீசும் விமானங்களின் அணிவகுப்பு சமீபத்தில் நடைபெற்றது.

பாலஸ்தீனத்தில் ராணுவ வீரர்கள் தங்குமிடங்களெல்லாம் காலியில்லாமலிருப்பதால் சமீபத்தில் அங்கு சென்ற பிரிட்டிஷ் துருப்புகளுக்கு சமவெளியிலேயே கூடாரங்கள் அடித்து இடமளிக்கப்பட்டிருக்கிறது. மற்றும் பலருக்குப் பாதிரிமார் மடங்களில் தங்குமிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் மடங்களுக்குள் பிரவேசிப்பதை வலது பக்கப்படத்தில் காணலாம்.

ஸ்பானியக் கலகத்தில் சர்க்கார் துருப்புகள் மாட்ரிட் நகருக்கருகில் கலகக்காரர்களைப் பார்த்துச் சுடுகின்றனர்.

பிரபஞ்ச வர்த்தமானம்

—:[o]:—

பார்லிமெண்டில் மன்னர் பிரான் பிரசங்கம்.

சென்ற 30-ந் தேதி பார்லிமெண்டு கூட்டத்தைக் கலைத்தபோது மன்னர் பிரான் ஒரு பிரசங்கம் செய்தார். ஆனால், அவர் நேரில் பிரசங்கம் செய்யவில்லை. அவரது பிரசங்கத்தைக் காமன்ஸ் சபையில் அச்சபைத் தலைவரும் பிரபுக்கள் சபையில் லார்டு ஆன்ஸ்லோவும் வாசித்தார்கள். மன்னர்பிரான் பிரசங்கத்தின் சாராம்சம் வருமாறு:— ஆங்கிலோ-எகிப்து உடன்படிக்கை காரணமாக இவ்விரு நாடுகளின் நட்பை இன்னும் பலப்படுத்தக்கூடிய ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாகுமென நான் நம்புகிறேன்.

சென்ற மூன்று மாத காலமாக ஸ்பெயினில் ஏற்பட்டு வரும் நிகழ்ச்சிகளை நான் விசேஷக் கவலையுடன் கவனித்து வருகிறேன். ஸ்பானிய மக்களின் துன்பத்தைத் தணிக்க எனது சர்க்கார் ஜீவகாருண்ய உணர்ச்சியுடன் தங்களாலான அனைத்தையும் செய்து வந்திருக்கின்றனர். இவ்விஷயமாக நமது கடற்படை பேருதவி புரிந்திருக்கிறது. ஸ்பானியக் கலகம் வெளியிடங்களுக்கும் பரவாமல் தடுக்க வேண்டுமென்பதே எனது சர்க்காரின் நோக்கம். இந்நோக்கத்துடன் அவர்கள் நடுநிலை ஒப்பந்தம் விளைவிக்கப் பிரெஞ்சு சர்க்கார் எடுத்துக்கொண்ட முயற்சியை ஆதரித்து வந்திருக்கின்றனர். அதை அமுலுக்குக் கொண்டு வரும் விஷயத்திலும் எனது சர்க்கார் பிறநாடுகளுடன் தீவிரமாக ஒத்துழைத்து வருகிறார்கள்.

மாண்ட்ரூ மகாநாடு, சர்வதேச சங்கச் சீர்திருத்தம், லொகார்னோ வல்லரசுகள் கூட்டம், பிரெஞ்சு செலாவணியின் மதிப்புக் குறைவு முதலியவை பற்றியும் மன்னர் தமது பிரசங்கத்தில் குறிப்பிட்டார். கடல், தரை, ஆகாயப் படைகளைப் பலப்படுத்தத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றனவென்றும் வியாபாரம் பெருகி வேலையில்லாத் திண்டாட்டம் குறைந்து வருகிறதென்றும் அவர் தெரிவித்தார்.

* * * *

பிரெஞ்சு ஆகாயப்படைப் பெருக்கம்

பிரெஞ்சு மந்திரி சபைக் கூட்டத்தில் ஆகாயப்படையைப் பெருக்குவதற்கான திட்டமொன்றை ஆகாயப் படை மந்திரி சமர்ப்பித்திருக்கிறார். முதலில் 1000 விமானங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருந்தது; ஆனால் இப்பொழுது புதிய திட்டப்படி இன்னும் அதிகமான நவீன விமானங்கள் வெகு துரிதமாக உற்பத்தி செய்யப்படும். புதிய விமான நிலயங்களும் நிர்மாணிக்கப்படும். இத்திட்டத்தை நிறைவேற்றிவைக்க ஐந்து கோடி டவுன் செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

* * * *

ஜெர்மனியும் மூலப்பொருள்களும்

ஜெனரல் கோயரிங் ஜெர்மனியின் நான்கு வருஷ மூலப்பொருள் திட்டத்தைக் குறித்துச் சமீபத்தில் பர்லினில் பேசுகையில் பின்வருமாறு தெரிவித்தார்:—

"உலகிலுள்ள மூலப்பொருள் உற்பத்தி ஸ்தானங்களில் ஒரு பாகம் நமக்கிருக்க வேண்டும். அதை நாம் பெற்றே தீருவோம்.

நாம் விலைகொடுத்து மூலப்பொருள் வாங்கிக்கொள்ளலாமெனச் சிலர் யோசனை கூறுகின்றனர். கஷ்டஈடு என்ற பெயரில் அவர்கள் நமது தங்கத்தையெல்லாம் அபகரித்துக் கொள்ளாமலிருந்திருப்பாராயின் மூலப்பொருளை ஜெர்மனி விலைகொடுத்து வாங்கிக்கொள்ளக் கூடும்.

இங்கிலாந்தில் எவ்வளவு ஜனநெருக்கடி இருந்து வருகிறதோ அவ்வளவு ஜனநெருக்கடி ஜெர்மனியிலுமிருந்து வருகிறது. ஆனால், இங்கிலாந்து உலகமுழுவதையும் தனது குடியேற்ற நாடாகக்கொண்டிருக்கையில், ஜெர்மனிக்கு மட்டும் ஒன்றுமில்லை. அப்பிரதேசத்தில் ஒரு பாகம் ஜெர்மனிக்குச் சொந்தமாயிருந்தால், நம்மிடை உணவுப பொருளுக்கோ, மூலப் பொருள்களுக்கோ பஞ்சமேற்படாது.

வயிற்றையொடுக்கி இன்னும் அதிகமாக உழைக்குமாறு நான் ஜெர்மன் மக்களுக்கு விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன். ஹெர் ஹிட்லர் வெண்ணெயோ, மாமிசமோ உட்கொள்வதில்லை அவர் செய்யக்கூடியதை நீங்களும் செய்யலாம்"

* * * *

ஸ்பானியக் கலகம்

ஸ்பானியக் கலகத்தின் இவ்வாரச் செய்திகளிலிருந்து சர்க்காருக்கு விசேஷ வெற்றியேற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. சர்க்கார் படையினர் "அவர்களை விடப்போவதில்லை. —அவர்களை முறியடித்தே தீருவோம்" என வீராவேசத்துடன் கோஷித்துக்கொண்டு மாட்ரிட்டுக்குத் தெற்கேயும் தென்கிழக்கேயுமுள்ள கலகத் துருப்புகளைத் தாக்கினர். இதன் பயனாக கலகக்காரர்கள் வசமிருந்த மூன்று இடங்களை அவர்கள் கைப்பற்றிக் கொண்டு விட்டனர். இந்த மூன்று ஸ்தலங்களும் கலகக்காரர்களது வசத்திலிருந்ததானது எந்த நிமிஷத்திலும் அவர்கள் தலை நகரைக் கைப்பற்றி விடக் கூடுமென்ற அச்சத்துக்கிடமளித்து வந்தது. சர்க்காருக்கு அனுகூலமான முறையில் இன்னும் யுத்தம் நடைபெற்று வருகிறதாம்.

கலகக்காரர்கள் தலைநகர் மீது விமானங்களிலிருந்து வெடி குண்டுகளைப் போட்டு வருகின்றனர். ஒரு சமயத்தில் இதனால் பல குழந்தைகளும் சிறுவர்களும் இறந்து போயினராம். கலகக்காரர்கள் சர்க்கார் கோஷ்டியைச் சேர்ந்த 300 ரஷ்ய சோல்ஜர்கள் உள்பட பலரைச் சிறை பிடித்ததாகவும் இப்பொழுது ஒரு ரஷ்ய தளபதி சர்க்கார் படைக்குத் தலைவராகவிருந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

* * * *

நடுநிலைக் கொள்கை

நடுநிலைக் கமிட்டி இவ்வாரம் கூடவிருக்கிறது. இக்கூட்டத்தில் ரஷ்யாவின்மீது இதர தேசங்கள் கூறியுள்ள புகார்களைப்பற்றி ஆலோசிக்கப்படும். ஸ்பானிய நடுநிலைபற்றிச் சென்ற வாரம் காமன்ஸ் சபையில் விவாதம் நடந்தது. அப்பொழுது கலகக்காரர்கள் இத்தாலியின் உதவியின்றி இவ்வளவு தூரம் வெற்றிபெற்றிருக்க முடியாதென்றும் நடுநிலை ஒப்பந்தம் இல்லாவிடில் கலகக்காரர்களுக்கு விசேஷ அனுகூலமேற்படுமாதலின், அது அமுலிலிருந்து வரவேண்டுமென்று சர்க்கார் தரப்பில் கூறப்பட்டது.

* * * *

இராக்கில் ரத்தமற்ற புரட்சி

சென்ற வார இறுதியில் பாக்டாடில் (இராக்) ஒரு வெற்றிகரமான புரட்சி நடந்திருக்கிறது. இப்புரட்சி சிறிதும்

ரத்தம் சிந்தாமல் நடந்தேறி யிருக்கிறது. ராணுவப்படை சர்க்காருக்கு விரோதமாகக் கலகம் செய்ய முற்படுமெனப் பயமுறுத்தப்படவே பிரதம மந்திரியான ஜெனரல் யாஸின் உடனே தமது பதவியை ராஜி நாமாச் செய்துவிட்டார். அப் பதவிக்கு ஹிக்மத் ஸிலேமான் நியமிக்கப்பட்டார்.

இந்தப் புரட்சிக்கு ஜாதித் துவேஷமே காரணமெனச் சொல்லப்படுகிறது. பாலஸ்தீன சம்பவங்களால் யூதர்மீது துவேஷம் வளர்ந்து வந்ததன்

செய்தார். அவர் பிரசங்கத்தைக் கேட்க பல்லாயிரக் கணக்கானவர்கள் கூடியிருந்தனர். முஸோலினி பேசியதன் சாராம்சம் வருமாறு:—சட்டக் கொள்கைப்படி எல்லா நாடுகளுக்கும் சம அந்தஸ்து அளிக்காமல் சர்வதேசச் சங்கம் புதுப்பிக்கப்படவேண்டும்; அல்லது அழிவுறவேண்டும். அது சீர்திருத்தியமைக்கப்படுமென நம்ப இடமில்லை.

நாம் சம்பந்தப்பட்டவரை அச்சங்கம் இறந்தொழிவதால் நமக்கு நஷ்டமொன்றுமில்லை.

யம். இதற்கிடையில் இத்தாலி சிறிதும் தடங்கலின்றி மேன் மேலும் தனது யுத்ததளவாடங்களைப் பெருக்கிவரும்.

1935-ம் வருஷத்திலிருந்து பிரான்ஸின் போக்கு மாறுதலடைந்திருப்பதுபற்றியும் முஸோலினி வருத்தத்துடன் குறிப்பிட்டார். சிதறுண்ட நிலையிலிருக்கும் ஹங்கேரிக்கு நீதி வழங்கப்பட்டாலன்றி டான்யூப் பிரச்னை தீரக்

கோயமுத்தூர் பாலெஸ் தியேட்டர்

ஒரு திருத்தம்

25-10-36ந் தேதிய "மித்திரன்" "விஜயதசமி மலர்" 34—வது பக்கத்தில் பிரசுரமாகியுள்ள மேற்படி தியேட்டர் சம்பந்தமான விளம்பரத்தில், 7—வது வரியில் "கோவை ஜில்லா கலெக்டரால் திறக்கப்பட்டது" என்று வெளியாகியுள்ள விஷயம் தவறென நமக்கு அறிவிக்கப்படுகிறது.

பிரதாப சிம்மன்

நம் இந்திய நாட்டின் வீரப் பிரதாபனாய் விளங்கிய பிரதாப சிம்மனது சரித்திரத்தினைக் குழந்தைகளும் படித்தறியுமாறு எளிய நடையில் எழுதி அழகிய பல படங்களுடன் உயர்ந்த பேப்பரில் வெளியிடப்பட்டுள்ளது. விலை அணா ஐந்தே.

சுதேசமித்திரன் புத்தகசாலை,
சென்னை.



டாக்டர் ஜி. எஸ். அருண்டேலும், அவருடைய மனைவியும் வெளி தேசங்களில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு சமீபத்தில் சென்னைவந்து சேர்ந்தார்கள். அவர்கள் எழும்பூர் ஸ்டேஷனில் வரவேற்கப்பட்டபோது எடுத்த படம்.

திரிகால ரேகை சாஸ்திரம்

சக்திதாசன் எழுதியது.

விலை அணா 10.

'மித்திரன்' ரெயில்வே புத்தகசாலைகளிலெல்லாம் கிடைக்கும்.

"மறக்க மாட்டீரோ! வரும்போழுது "ஜே" மார்க் பெருங்காயம் வாங்கி வாருங்கள்"

கோபால்ஜீ அண்ட் கோ.,
பம்பாய், மதறாஸ், மதுரை & கும்பகோணம்

விளைவாகவே இப்புரட்சி ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இராக்கில் ஒரு சர்வாதிகாரியைப்போலிருந்தவரும், முன்பு மந்திரி சபையில் தற்காப்பு மந்திரியாயுமிருந்த ஜெனரல் ஜாபர் பாஷா கட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். இப்பொழுது அரசாங்கத்தைக் கைப்பற்றியிருப்போரை அவர் கடுமையாக எதிர்த்து வந்தவராவர். புரட்சி வெற்றிகரமாக நடந்தேறியதும் அவர் தமது உயிருக்கஞ்சி ஒளிந்துகொண்டதாகச் சொல்லப்படுகிறது.

இராக் பார்லிமெண்டு கலைக்கப்பட்டு விட்டது. புதிய தேர்தல் சமீபத்தில் நடைபெறும்.

* * * *

சங்கத்தைப் பற்றி
முஸோலினியின் கண்டனம்

மிலானில் சமீபத்தில் ஸினர் முஸோலினி ஒரு பிரசங்கம்

அச்சங்கம் நம்மை நசுக்கியொடுக்க வெறிகொண்ட பேய்போல் வேலைசெய்து வந்ததை நாம் ஒருபொழுதும் மறக்க முடியாது. கூட்டுப் பாதுகாப்பு முறையொன்றே சமாதானத்துக்கு வழியென எண்ணுவது வெறும் பிரமையாகும். அக்கருத்தை இத்தாலி நிராகரிக்கிறது. மத்தியதரைக் கடலில் பிரிட்டனுக்கிருந்து வரும் போக்குவரத்துச் சாதனங்களுக்கு நாம் பங்கம் விளைவிக்க விரும்பவில்லை. ஆனால் அக்கடல் நமது உயிருக்குயிராக இருந்து வருகிறது. பிறர் நமதுரிமையை மதித்து நடக்கவேண்டும். ஆங்கிலோ—இத்தாலிய ஒப்பந்தம் இன்றியமையாததாகும். ஆனால் முதலில் அபிஸீனியாவை நாம் ஜயித்திருப்பதைப் பிரிட்டன் அங்கீகரிக்க வேண்டியதவசி

தாமாகத் திருவது அசாத்தியமென்றும் அவர் குறிப்பிட்டார்.

இரங்கோன் கலர் சிந்தடிக்கற்கள் மணிமாலைகள்!

இந்தியாவில் எல்லா பாகங்களிலும் ஏராளமாய் விரும்பக்கூடிய தற்கால நாகரீகத்துக்கேற்றவாறு கெமிகல் கோல்டினால் புதுமாதிரியாய் தயார் செய்தவை. இதை ஸ்திரீகள் குழந்தைகள் நேர்த்தியாய் அணிந்துகொள்ளலாம்.

25" நீளமுள்ள கலர் கல்மாலை 1க்கு ரூ. 4-0-0
டை. பெண்டன்டு போட்டது 1க்கு ,, 5-0-0
ஜாலர் ஒட்டியாணம் பெரியது 1க்கு ,, 6-8-0
நெ. 1. சாதா கெஜ்ஜை ஒட்டியாணம் 1க்கு 5-8.
நெ. 2. 1க்கு 3-8-0 நெ. 3. 1-க்கு 2-8-0
கைவளையல்கள் பெரிய சைஸ் ஜதை 1-க்கு 2-8-0. கெமிகல் கோல்ட் ரங்கோன் டைமண்டு 14 கற்கள் உள்ள சம்மல் ஜதை 1க்கு 6-0-0. எல்லாவற்றிற்கும் 5 வருஷம் உத்தரவாதம்.

கே. நாதமுனி & சன்ஸ்,
(ஸ்தாபிதம் 1910.)
168, சைனா பஜார் ரோட், மதராஸ்.

இவள் மிகவும் புத்தசால,

நாட்டு நடப்பு சித்திரக் கண்ணாடி

1805-ம் வருஷத்தில் நெல்ஸன், டிரபால்கர் யுத்தத்தில் பிரெஞ்சுக்காரரைத் தோற்கடித்தது இங்கிலாந்துக்குப் பெரு வெற்றியைக் கொடுத்தது. அந்தத் தினம் லண்டன் டிரபால்கர் ஸ்கொயரில் சமீபத்தில் கொண்டாடப்பட்டது.



பெய்ஸ்பூர் காங்கிரஸையொட்டி பூனாவிலிருந்து கஸ்வாடிக்குப் புறப்பட்டுச் சென்ற ஸ்திரீ தொண்டர்கள்.

ஸ்பானிய நடுநிலைமைக் கமிட்டிக் கூட்டம் சமீபத்தில் இங்கிலாந்தில் நடந்தபோது அதில் பிரஸன்னமாகவிருந்த ருஷ்ய பிரதிநிதிகளான எம். மெயிஸ்கியும், எம் காகனும்.



ஆரணி சங்கீத சபையின் வருஷாந்திரக் கொண்டாட்டம் சமீபத்தில் ஜில்லாக் கலெக்டர் ஸ்ரீமான் எஸ். எ. வெங்கட்ராமன் தலைமையில்

அலுமினியம்

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

பொழுது மிகவும் விலையுயர்ந்ததும் அபூர்வமானதுமான அலுமினியத்தால் செய்த கிலுகிலுப்பையை அவரது முக்கிய மந்திரி பரிசளித்தாராம். 1852-ஆம் ஆண்டில் ஒரு ராத்தல் (நாற்பது ரூபாய் எடை) அலுமினியத்தின் விலை 545 பவுனாக இருந்தது. அதாவது சுமார் 8000 ரூபாய் மதிப்புள்ளதாக இருந்தது. ஆனால், இப்பொழுது ஒரு ராத்தல் அலுமினியத்தின் விலை சுமார் ஒன்றரை ரூபாயாகும். இதற்குக் காரணம் அலுமினியத்தை மலிவாக ஏராளமாக உற்பத்திசெய்யும் முறையைக் கண்டுபிடித்த சார்லஸ் மார்டின் ஹாலேயாகும்.

அலுமினியம் கண்டுபிடிக்கப்பட்ட விதம்

சார்லஸ் மார்டின் ஹால் தனக்கு முன்பிருந்த பல விஞ்ஞானிகள் அனுஷ்டித்த முறைகளை நன்கு உணர்ந்திருந்தார். ஆகவே, அவர் புதிய முறையில் மின்சாரத்தை உபயோகித்து அலுமினியத்தை அதன் கலப்புப் பொருளான 'அலுமினியம் ஆக்சைட்' அல்லது 'அலுமினா' என்றதிலிருந்து பிரிக்க விரும்பினார். சுமார் 2050-டிகிரி ஸெண்டிகிரேட் உஷ்ணம் இருந்தால் அந்த அலுமினா உருகும். தன் வீட்டிலிருக்கும் சாதனங்களைக்கொண்டு அத்தகைய உஷ்ணத்தை உற்பத்தி செய்ய முடியாதெனக் கண்ட அவர், அதுகரையக்கூடிய ஒரு இரசாயன உப்பைக் கண்டு பிடிக்க முயன்றார். முதலில் அவரது முயற்சி பலனளிக்கவில்லை. பிறகு, அவர் கிரீன்லாந்து தேசத்திலிருந்து கிடைக்கும் 'கிரியோலைட்' என்னும் ஒரு பொருளை உருக்கி, அதில் பொடி செய்த அலுமினாவைச் சேர்த்தார். சுமார் இரண்டு மணிநேரம் அதன் வழியாக மின்சாரத்தைச் செலுத்தினார். பரிசோதனையின் முடிவில், என்ன ஆச்சரியம்! அலுமினா கலந்த கிரியோலைட் இருந்த பாத்திரத்தினடியில், சிறு சிறு அலுமினிய உருண்டைகள் கிடந்தன. அவற்றைக் கையில் எடுத்துக் கொண்டு, குளிரையும் பனி மழையையும் லக்ஷியம் செய்யாது ஓடிப்போய் தனது ஆசிரியர் புரொபசர் ஜூவெட்டியிடம் காண்பித்தார். இது 1886–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23-ந் தேதி அன்று நடந்தது.

இதில் மற்றோர் ஆச்சரியம் உள்ளது. சார்லஸ் மார்டின் ஹால் இருந்த அமெரிக்காவிற்கு மூவாயிரம் மைல் தூரத்தில் உள்ள பிரான்ஸ் தேசத்தில் ஜெண்டிலி என்ற இடத்தில் இருந்த ஒரு வாலிபன் ஹால் கண்டு பிடித்த அதே முறையை கிட்டத்தட்ட அதே சமயத்தில் கண்டு பிடித்தான். அவன் பெயர் பால் ஹீரோல்ட். இருவரும் ஒரே வயதினர். இருவரும் 1863-ம் வருஷத்தில் பிறந்தார்கள். 1866-இல் அலுமினியம் உற்பத்தி செய்ய நூதன முறையைக் கண்டு பிடித்தனர். இன்னும் அவ்விருவரும் 1914 ஆம் ஆண்டில் இறந்தனர். முதலில் கண்டுபிடித்த ஹாலுக்கு புகழ் போய்ச் சேர்ந்தது.

உபயோகம்

ஐம்பது வருஷ காலத்தில் இந்த அலுமினியம் அடைந்திருக்கும் விசேஷச் செல்வாக்கை விவரித்துக் கூறுவது கஷ்டம். பல் தேய்ப்பதற்கு உபயோகப்படும் பசை வைக்கப்படும் பை அலுமினியத்தால் செய்யப்படுகிறது. மேலும் சில ஸிகரட் பெட்டிகளில் காணப்படும் வெள்ளிக் காகிதம் போன்ற அலுமினியத் தகடு முதல் ஆகாய விமானம் வரையில் எல்லா வகையிலும் அலுமினியம் உபயோகப்படுகிறது. பந்தயப் படகு, நாற்காலி, மேஜை, பிப்பாய், ஆணி, தொட்டில், சங்கிலி, சமையலுக்கு உபயோகப்படும் பாத்திரங்கள், மணிக்கு நூறு மைல் வீதம் பறந்து செல்லும் வண்டித் தொடர்கள், முதலான பலவும் அலுமினியத்தால் செய்யப்படுகின்றன.

430,000 மைல் நீளமுள்ள தந்திக் கம்பிகள் அலுமினியத்தால் செய்யப்பெற்று உபயோகத்தில் இருக்கின்றன. அலுமினியத்தைப் பொடி செய்து தகுந்த எண்ணெயில் கலந்து அலுமினியம் பெயிண்டாக உபயோகிக்கின்றனர். பருத்தி நூல்போல் மெல்லியதான பளபளப்பான கம்பிகளால் நெய்யப்பட்ட சட்டை முதலான [illegible] மோதிரம், பணம் முதலியவை வைத்து ஸ்திரீகள் கையில் வைத்துக்கொள்ளும் நாகரீக மணிபர்ஸ் முதலானவைகளும் அலுமினியத்தால் செய்யப்படுகின்றன. அலுமினியத்தின் இலேசான தன்மையும், மங்காத பளபளப்பும், உறுதியும், விலை மலிவுமே இவை எல்லாவற்றிற்கும் காரணம். வெயிலிலும், மழையிலும், காற்றிலும் காய்ந்து நனைந்து உலர்ந்து பல வருஷங்கள் இருந்தபோதிலும் அலுமினியம் நாசமடையவில்லை. 555 அடி உயரமுள்ள வாஷிங்டன் ஞாபகச் சின்னத்தின் நுனியில் ஐம்பது வருஷத்திற்கு முன்பு வைக்கப்பட்ட அலுமினியத்தால் செய்த சிகரம் இன்றும் அப்படியே புதி[illegible]

நாம் தற்காலம் உபயோகிக்கும் உலோகங்களில் அநேகம் பல்லாயிரம் வருஷங்களாக மானிடருக்குத் தெரிந்து உபயோகத்தில் இருக்கின்றன. இன்றைக்குச் சுமார் ஐயாயிரம் வருஷங்களுக்கு முன்பே இரும்பும் செம்பும் மனிதன் உபயோகத்தில் இருந்தன. ஈயம் முதலானவை பழைய ரோமானியர் காலத்திலேயே இருந்தன. ஆனால், அலுமினியமோ தற்காலத்தியது. 1825-ஆம் ஆண்டிலே அலுமினிய உலோகம் பிறந்தது; வியாபார முறையில் 1886-ஆம் ஆண்டிற்குப் பிறகே பிரசித்தி பெற்றது. 1936-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலேயே அலுமினியத்தின் ஐம்பதாவது வருஷத் தங்க ஜூபிலிக்கொண்டாட்டம் சிறப்[illegible]

கால் புண்கள்
ரணங்கள்
இவற்றிற்கான நிவாரணி
ஜாம்-பெக் தழும்பின்றி ஆற்றுகிறது.

இவ்வற்புத மூலிகை மெழுகு வலியை நிறுத்தி, ரணத்தை ஆற்றி, எரிச்சலையடக்கி, நமைச்சல், சொறி, சிரங்கு, கத்தி வெட்டு, நீட்டபுண், மூலச்சூடு இவற்றை தீர்க்கிறது. எல்லா மருந்து வியாபாரிகளிடமும் ஜாம்-பெக் பெட்டி 1-க்கு ரூ. 1 அல்லது ரூ. 2—4 வீதம் கிடைக்கும். ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா கம்பெனி, பார்க் டவுன், மதராஸ்.

மிருகக் கொழுப்பற்றது.

ஜாம்பெக்
Zam-Buk

NO MORE GREY HAIR

வெள்ளையாயிருக்கும் கூந்தலை இயற்கை அழகுடனிருக்கச் செய்யுங்கள்—கேஷ்கலா கூந்தலுக்குப் புதிய அழகைக் கொடுக்கும்—கேஷ்கலாவையே உபயோகித்து உண்மையை உணர்வீர்.

KESHKALA
RESTORES NATURAL TINT

Obtainable from:—
அப்பா & கம்பெனி, சைனாபஜார் ரோட், மதராஸ். வி. ஜே. சேத், பந்தர் தெரு, மதராஸ். டி. வேகுஸ்தான் & கம்பெனி, டெங்களூர் :சி & டி கண்டோன்மெண்டு. ஸ்ரீ கணேஷ் மார்ட், ராஜா தெரு, கோயமுத்தூர். எக்ஸ்-பி-பேல்வா, பிரின்ஸ் தெரு, கொழும்பு.
Further Inquiries to:—
KESHKALA CHEMICAL CO., P.O. Box No.(M)5506. Bombay 14.

30௵ பிரசித்தி பெற்றது

வாயுமுக்தா

வலி, பைத்தியம் இவற்றிற்குச் சிறந்த நிவாரணி

ஆயிரக்கணக்கான ஸ்திரீகள்-பலவீனர்களும், கர்ப்பிணிகளும்—பிதற்றல், அழுகுரல் களைப்பல், அடித்துக் கொள்ளுதல், நரம்பு பலவீனம், பித்தமயக்கம், வலி, இவற்றால் கஷ்டப்படுகிறார்கள். இவ்வளவையும் இம் மருந்து 24 மணி நேரத்தில் நிறுத்திவிடுகிறது. பிரக்ஞையின்மை, இழுப்பு, 10 நிமிஷத்தில் மறைகின்றன.

10 நாள் மருந்து ரூ. 2.
30 நாளுக்கு ,, ரூ. 5.

தபால் செலவு தனி. ஆங்கிலத்திலேயே கடிதமெழுதுக.

C. L. NAMAWALLA
Palace Road, Baroda

நெளிவு இன்ஸர்ஷன் நிட்டிங் லேஸ்

ஸ்ரீமதி ஆ. ராஜசூடாமணி அம்மாள் எழுதியது.

[காபிரைட்]

மாதிரி 1.

தொடக்கத் தையல் மூன்றால் வகுக்கக் கூடிய எண்ணயிருக்க வேண்டும் அத்துடன் கரை தைக்க 5 தையல் கூடத் தைத்துக் கொள்ள வேண்டும். தேவையான நீளம் தைக்க மூ மூன்று தையல் அதிகப் படுத்திக்கொள்ளவேண்டும்.



ஒரு தையல் நழுவ விடவும். நிட் 1 *பின் பக்கத்திலிருந்து நிட் 1, ஊசி மேல் நூல் 1 தையல் நழுவ வாங்கவும், நிட் 1, நழுவ விட்ட தையலை மேல் பக்கமாக இழுத்துக் கொள்ளவும், *இந்த மாதிரி அடையாளம் போட்டிருக்கும் தையலை மாறி மாறித் தைக்கவும், பின் பக்கமாக நிட் 1, நிட் 2.

துவக்கத்திலிருந்து மாறி மாறித் தைக்கவும்.

மாறி மாறி வரும் சிலந்திக் கூடு போன்ற இன்ஸர்ஷன் லேஸ்-மாதிரி 2.

தொடக்கத் தையல் 6-ல் வகுக்கக் கூடிய எண்ணயிருக்க வேண்டும். கரைக்கு 7-தையல் கூட்டிக் கொள்ள வேண்டும்-தேவையான நீளத்திற்குத் தைத்துக்கொள்ளவும்.

1-ம் 2-ம் 3-ம் வரிசை:—1-தையல் நழுவ விடவும். நிட் 1, * ஊசிமேல் நூல், 3 தையலைச் சேர்த்து 1 பால் உள்ளடக்கம், ஊசி மேல் நூல், நிட்



3; இந்த * அடையாளம்போட்டிருக்கும் தையலை மாறிமாறித் தைத்துக்கொள்ளவும். ஊசி மேல் நூல், 3 தையலைச் சேர்த்து 1 பால் உள்ளடக்கம், ஊசிமேல் நூல் நிட் 3

4-ம், 5-ம், 6-ம் வரிசை:—1—3 வரிசைப் போலவே தைக்கவும்.

7-ம், 8-ம், 9-ம், 10-ம் 11-ம், 12-வது வரிசை:—1 தையல் நழுவவிடவும், நிட் 1, * நிட் 3. ஊசிமேல் நூல் 3 தையலைச் சேர்த்து 1 பால் உள்ளடக்கம், ஊசிமேல் நூல் * இந்த அடையாளத்திலிருந்து தையலை மாறி மாறித் தைக்கவும். நிட் 5.

முதல் வரிசையிலிருந்து மாறி மாறித் தைக்கவும்.

பெரிய கண்ணிகளாலான இன்ஸர்ஷன் மாதிரி 3.

'தொடக்கத்தையல்' 4-ல் வகுக்கக் கூடியதாயிருக்க வேண்டும் கரைக்கு 4 தையல் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

முதல் வரிசை:—1 தையல் நழுவ விடவும். நிட் 1, * 2 தையலைச் சேர்த்து நிட் தைக்கவும், 2 தடவை ஊசிமேல் நூல் 1 தையல் நழுவ வாங்கவும், 'நிட்' நழுவி விட்ட



தையலை மேலே எடுக்கவும், * இந்த அடையாளம் போட்ட தையலை மாறி மாறித்தைக்கவும், நிட் 2

2-ம் வரிசை:—ஒரு தையல் நழுவவிடவும் நிட் 1, * நிட் 2, பால் 1, நிட் 1 * மாறி மாறித்தைக்கவும். நிட் 2.

3-ம் வரிசை:—1 தையல் நழுவவிடவும், நிட் 1, * ஊசி மேல் நூல், 1 தையல் நழுவ வாங்கவும், நிட் 1, நழுவவிட்ட தையலை மேலே வாங்கிக் கொள்ளவும். 2 தையலைச் சேர்த்து நிட் தைத்துக் கொள்ளவும். ஊசிமேல் நூல் * இந்த அடையாளத்துக்குள்ளிருக்கும் தையலை மாறி மாறித் தைக்கவும். நிட் 2.

4-ம் வரிசை:—1 தையல் நழுவ விடவும், நிட் 1, * பால் 1, நிட் 3, * மாறி மாறித் தைக்கவும் நிட் 2.

முதல் வரிசையிலிருந்து மாறி மாறித் தைக்கவும்.

THE RELIABLE HOUSE

MURCH & SEMOUR

MARSHAL ROAD, EGMORE, MADRAS.

14, ஸசா அவுஸ், மாடுங்கா, பம்பாய்.

ஸ்ரீகா கஸ்தூரி கோரோஜனை மாத்திரை

"பாலக்ஸ்" பேதி மாத்திரை

"யூனிகான்" டானிக்

ஸோல்ஜர் உருவம் இல்லாத டின் பிளிட் அல்ல.

தென்னிந்தியாவிற்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—

டி. டி கிருஷ்ணமாச்சாரி, 11 14, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.

ஏமாறுதீர்கள்!

எங்கள் வைத்தியசாலையின் மருந்துகள் மிகவும் சிலாக்கியமானது எனப்பலராலும் புகழப்பட்டு வருதல் கண்டு, சிலர் வேறு மருந்துகளை எங்கள் மருந்துகள் அதாவது சி. எம். சாமி மருந்துகள் என்று சொல்லி ஏமாற்றி விற்பனை செய்து வருகிறதாகத் தெரிகிறது. எங்கள் வைத்தியசாலையிலிருந்து வெளி இடங்களுக்கு நாங்கள் யாரையும் அனுப்பவில்லை. எங்கள் ஏஜண்டு என்றும், எங்கள் மருந்துகள் என்று யாராவது விற்பனை செய்தால் அதைப் பொதுமக்கள் வாங்கி மோசம் போகாமல் இருக்கும்படி எச்சரிக்கிறோம்.

மருந்து வேண்டியவர்கள் நேரே எமக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மலையப்பசாமி வைத்தியசாலை,

பழனி, S. I.

தீபாவளி அகராதி

—

"பூரி"

அந்தி மந்தாரை:—இதற்கும் தீபாவளிக்கும் ரோமமறு தலைக்கும் முழங்காலுக்கும் உள்ள சம்பந்தங்கூடக் கிடையாது. ஆனால் முதலில் மங்கல மொழி வகுத்துக் கூற வேண்டுமென்ற சம்பிரதாயத்தையொட்டி ஒரு பூவின் பெயருடன் தொடங்கப்பட்டது.

அப்பாடி:—வீட்டுப் பெரியம்மாள் தீபாவளியன்று காரியங்கள் எல்லாம் முடிந்த பிறகு சொல்லும் வார்த்தை. அப்பா என்ற ஆண்பாலைக் குறிக்கும் வார்த்தையில் 'டி' என்ற பெண்பாலைக் குறிக்கும் விகுதி வரலாமா என்பதைப்பற்றிப் பண்டிதர்கள் ஆராய்ச்சி செய்துவருகிறார்கள்.

அரைஞாண்:—தலை தீபாவளியின்போது சில மாப்பிள்ளைக் குழந்தைகளுக்கு மாமனார் செய்துபோடும் அல்லது செய்துபோடுவதாகச் சொல்லும் ஓர் அழகிய நாகரீக ஆபரணம்!

ஓட்டம்:—வெடியின் திரியில் நெருப்பு இல்லையென்று எண்ணி, அதன் சமீபம் வந்து பார்க்கும் பையன்கள் அது எரிய ஆரம்பிப்பதைக் கண்டதும் பிடிப்பது ஓட்டம்.

கங்காஸ்நானம்:— "கங்காஸ்நானம் ஆச்சா?" என்று தீபாவளி அன்று பரஸ்பரம் விசாரித்துக்கொள்வது சம்பிரதாயம்.

"நான் என்ன புதுப்புடவை கட்டிக் கொண்டிருக்கிறேனென்று நீ பாரு! நீ என்ன கட்டிக்கொண்டிருக்கிறாய் என்று நான்! பார்க்கிறேன்" என்று சொல்லாமற் சொல்வதுதான் இந்த சம்பிரதாயத்தின் உள்ளர்த்தம்.

கங்கை:—கிராமாந்தரங்களில் வீட்டுக் கிணறுகளில் உள்ள ஜலத்துக்கும் (உப்புஜலம் உட்பட) பட்டணங்களில்குழாய்த் தீர்த்தத்துக்கும் தீபாவளியன்று விடியற்காலம் ஏற்படும் பெயர்.

கவலை:-தீபாவளி சமயத்தில் ரயில்வே கம்பெனிக்காரர்களுக்கு ஏற்படும் மனோபாதை. நாம் போகவேண்டிய இடங்களுக்குப் போய் தீபாவளி கொண்டாடாமற் போய் விட்டால் என்ன செய்கிறதென்று அவர்கள் கவலைப் பட்டுத் தங்கள் கஷ்டத்தையும் பாராமல் 'குறைந்த விகிதத்துக்கு மலிவான ரிட்டர்ன் டிக்கெட்டுகள்' கொடுக்கிறார்கள்.

காசு:—இது கரியாகாதிருக்கவேண்டுமானால் ஏராளமான வாணத்தை வாங்கிச் சுட

பம்பாயில் சமஸ்தான மந்திரிகள் மகாநாடு சமீபத்தில் நடைபெற்றது.

வேண்டும் என்பது பெரியார் திருவாக்கு.

டப்பாஸ்:—'பட்டாஸ்' என்பதின் கீழ் பார்க்கவும்.

டிக்கெட்:—தீபாவளிக்கு வரும் மாப்பிள்ளைகள் ஊர் திரும்பும்போது வாங்காதிருக்க முயற்சிக்கும் சாமான். இதை யார் வாங்குவதென்பதைப்பற்றி மாப்பிள்ளைப் பையன்களுக்கும் சம்பந்தி வீட்டாருக்கும் போட்டி ஏற்படுவதுண்டு. இதற்காக மைத்துனனையோ மாமனாரையோ ஸ்டேஷனுக்கு முதலில் அனுப்பிவிட்டு மாப்பிள்ளை பின் தங்கிவிடுவார்.

தீபாவளி:—இதைத் தீவளி, தீபாவளி, தீபாவலி, தீவாளி, தீபாலி என்றெல்லாம் சொல்வார்கள். இதற்குத் தீபங்களின் கூட்டம் என்று பெயர். ஆனால் தீபாவளியை அவமானப் படுத்துவதற்காகத் தென்னிந்தியர் அன்று வீட்டில் விளக்குகள் அதிகமாக ஏற்றுவது வழக்கமில்லை.

தலை தீபாவளி:—இது தீபாவளிக்கு முத்தண்ணா. கலியாணச் செலவு பண்ணியும் தப்பித்துக் கொண்ட மாமனார் தலையை அடகுவைத்தாவது பணம் வாங்கிச் செலவு செய்ய வேண்டிய தீபாவளியாதலால் தலைதீபாவளி என்றுபெயர் வந்தது.

நரகாசுரன்:—தீபாவளி ஏற்பட்டதற்குக் காரணமான குற்றவாளி. மடிசல் துணிகள் அதிகமாகத் தங்கிப்போயிருக்கும் ஜவுளிக்கடைக்காரர்கள் நரகாசுரனைக் குலதெய்வமாகக் கொண்டாடி வருகிறார்கள்.

நாத்தனார்:—மாப்பிள்ளை பையன் வெட்கத்தில் நடந்துகொள்ளும் விதத்தைப்பற்றியும், சம்பந்தி வீட்டார் நடந்துகொள்ளும்விதத்தைப்பற்றியும், இரகசியமாய்ப் பேசிக்கொள்ளும் விஷயங்கள் ஆகியவற்றைப் பற்றியும் விவரமாகத் தெரிந்து வரும்படி தலை தீபாவளிக்கு மாமனார் வீட்டுக்குப் போகும் பையனுடன் அனுப்பப்படும் ஸ்பெஷல் ரிப்போர்ட்டர்.

பட்டாஸ்:—'டப்பாஸ்' என்பதன் கீழ் பார்க்கவும்.

மாமியார்:—தலை தீபாவளியின்போது மாப்பிள்ளை தன்னிடம் பயபக்தியுடன் நடந்து கொள்ளுகிறானா இல்லையா என்று பரீக்ஷிக்க விரும்பும் ஒரு பிராணி. பையன் சொன்னபடி கேட்காமல் கொஞ்சம் சுதந்திரத்துடன் நடந்துகொள்பவன்போல் தோன்றினால் அவனைத் தண்டிக்க அம்மாளுக்குப் பூரண அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது. இதற்காகவே மாமியார் தலை தீபாவளியின்போது மருமகன் தலையில் முதல் முதல் ஒரு கை எண்ணெய் வைக்கவேண்டுமென்ற சம்பிரதாயம் ஏற்பட்டது.

உச்சந்தலையில் கொதிக்கும் எண்ணெய் தேய்க்கப்பட விரும்பாத மாப்பிள்ளைகள் ஜாக்கிரதையாய் நடந்துகொள்வார்களாக!

இந்த சந்தர்ப்பங்களில் மாமியார் அம்மாள் தன் கையில் எத்தனை சூடான எண்ணெயையும் விட்டுக் கொள்ளத் தயங்குவதில்லை.

முருக்கு:—நமது பல்லின் பலத்தைப் பரீக்ஷித்துப்பார்க்க ஸ்திரீகள் செய்யும் ஒரு பக்ஷணம் இது மாப்பிள்ளைகளிடம் மலிவாகக் கிடைக்கும்.

1937-ஹு காலண்டர்கள்.
1000-க்கு ரூ 30.

மூவர்ணப் படங்களடங்கிய காலண்டர்கள்; தேதிகளுடன் டின்னில் அமைக்கப்பட்டவை. 1000க்குரூ.30. பாக்கிங், தபால் செலவு, அனுப்பும் சார்ஜு முதலியன பிரத்தியேகம். நல்ல கமிஷன் பேரில் ஒவ்வொரு நகரத்திலும் ஏஜண்டுகள் தேவை.

Central India Trading Co.,
1472, Old China Bazar Street,
Calcutta. (S. M.)

எவ்வளவோ உபயோகித்திருக்கிறீர்கள்.

சுத்த சுதேசி. — வெள்ளைக் கோட்டு குட்டுக்கு வரும் துணி 1 கஜம்×45" ரூ. 3.
நாள் வரும் மைசூர் பட்டு. — வெள்ளை அங்கவஸ்திரம் 3 கஜம்×42" ரூ. 6.
கைத்தறி வேலை. — செப்பு, மஞ்சள் மடி வேஷ்டி 4 கஜம்×50" ரூ. 11.

பூரா தொகையும் முன்னதாக அனுப்பினால் தபால் சார்ஜ் இனம்)
வியாபாரிகள் தேவை:
D. R. NARAYANASWAMY & SONS, Darmavaram (Anantapur Dt.)

ராதா

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

ராதா:—அப்படியானல் இவர் தினந்தோறும் இங்கே வருவாரா?

காந்தி:—தினந்தோறும் கட்டாயம் வருவாரென்பதில்லே. ஹெட்மாஸ்டரைக் காணுமல் இவர் இருக்கமாட்டார். ஹெட்மாஸ்டரும் அப்படித்தான். எப்பொழுதும் இவர்களிருவரும் கூடிக்கொண்டே திரிவார்கள்,

என்று ராதாவும் காந்தியும் பேசிக் கொண்டிருக்கும்பொழுதே வீதியில் திவான் கச்சேரியிலிருந்து தெற்கு முகமாய் ஒரு குதிரை வண்டி வந்து பாடசாலே வாசலில் நின்றது. உடனே பெண்கள் எழுந்து வண்டியைப்பார்த்தார்கள். வண்டிக்குள்ளிருந்த சுமார் முப்பது முப்பத்தைந்து வயதுள்ள ஒரு உத்தியோகஸ்தர் கீழே இறங்கிப் பள்ளிக்கூடத்து நடையிலேறவும், மரியதாஸர் மரியாதையாய் எழுந்து நின்று, நந்தகோப முதலியாரைக் கண்டு சலாமசெய்து, உள்ளே வரும்படி வேண்டினர். முதலியார், "ராதா" வென்றழைத்துக்கொண்டு உள்ளே வந்து, தம் சமீபத்தில் நின்ற தம் மகள் ராதாவின் கையைப் படித்துக்கொண்டு நாற்காலியிலுட்கார்ந்தார் ஹெட்மாஸ்டரும் முதலியாரும் பாடசாலே விஷயமாய்ச் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தபொழுது,

முதலியார்:—இந்தப் பள்ளிக்கூடத்தில் தமிழ் படிப்பிப்பதுண்டா?

மரியதாஸர்:—தமிழ் வாசிக்க விரும்பும் பெண்கள் இவ்வூரில் மிகவும் அபூர்வம். தறசமயம், இங்கே தங்கள் குழந்தையும் ஒரு பிராமணக் குழந்தையும் தான் தமிழ்ப் பெண்கள் மற்றவர்களெல்லாரும் தெலுங்கப் பெண்கள். இரண்டொரு பெண்களுக்காக ஒரு தமிழ் உபாத்தியாயர் நியமிப்பது அசாத்தியம். தவிரவும், சில வேளே தமிழ்ப் பெண்களே இல்லாத காலமுமுண்டு.

முதலி:—நல்லது; ஒரு தமிழ் உபாத்தியாயர் நியமிக்கும்படி உங்கள் மிஷன் பாதிரிமார்களுக்கு எழுதலாமா? ஏற்படும் செலவில் நான் பாதி தருகிறேன்.

மரிய:—அவ்வளவு தூரம் ஏற்பாடு செய்வது அசாத்தியம். தாங்கள் சொந்தமாய் ஒருவரை நியமித்துக்கொள்ளலாமே?

முதலி:—தங்களுக்குத் தமிழ் நன்ருய்த் தெரியுமல்லவா? தாங்கள் படிப்பிக்கச் சௌகரியப்படுமோ?

மரிய:—எனக்குத் தமிழ் அவ்வளவு விசேஷமாய் தெரியாது. அன்றியும் நான் இரவில் சில வீட்டுக்குப் போய்ப் பாடம்சொல்லி வைக்கிறபடியால், எனக்குப் போதிய நேரமுமில்லே.

முதலி:—வேறே ஒன்றுமில்லே. நாங்கள் தமிழர்கள். எனக்கு இந்தப் பெண் குழந்தை ஒன்றுதான். ஏதோ என் உத்தியோக காலம்வரைதான் இங்கேயிருப்பேன். பின்பு பாற்கடலுக்குப் போனல், இவளே எங்கள் தமிழ் நாட்டில் விவாகம் செய்து கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆகையால், இவளுக்குப் போதிய தமிழ்க் கல்வி கற்பிக்க வேண்டுமென்பது என் அபேக்ஷை. இப்பொழுது கற்றுவரும் தெலுங்குக் கல்வியினுல் பின்னிட்ட பயன் ஒன்றுமில்லே. பள்ளிக்கூடப் பழக்கமாவது இருக்க வேண்டுமென்றுதான் இங்கே அனுப்பி வருகிறேன். நெல்லூரிலிருந்த பொழுது இவளுடைய தாயார் கொஞ்சம் தமிழ் படிப்பித்தாள். எனக்கோ நேரம் கிடையாது அவளுக்குத் தெரிந்த மட்டும் சொல்லிக் கொடுத்துவிட்டாள். ஆகையால், இவ்விடத்தில் உயர்ந்த தமிழ் படிப்பிக்கக் கூடிய ஒரு உபாத்தியாயர் கிடைத்தால், மிகவும் நன்ருயிருக்கும். சம்பளம் எவ்வளவு வேண்டுமானுலும் கொடுக்கலாம். ராதா நல்ல புத்திசாலி.

மரிய:—ஆம். நல்ல புத்திசாலிதான். ஆனல், தாங்கள் விரும்புகிறபடி உயர்ந்த தமிழ் போதிக்கக் கூடியவர்கள் இந்த மகேந்திரம் பட்டணத்திலேயே கிடையாது சமஸ்தானத்திலும்கூடத் தெலுங்கு வித்வான்களேத் தவிர தமிழில் தேர்ச்சியுடையவர்கள் அபூர்வம். மகாராஜா காலேஜ் தமிழ்ப்பண்டிதர் விருத்தாசலக் கவிராயரவர்கள் ஒருவர்தானிருக்கிருர்கள். அவர்கள் நிரம்ப முதிர்ந்த வயது. வீட்டிற்கு வந்து படிப்பிக்க அவர்களால் முடியுமென்று தோன்றவில்லே. என்னுடைய நண்பர் ஒருவர் இருக்கிருர். ஆனல் அவர் இங்கிலீஷ் வாசிக்கிற மாணுக்கர். அவருக்கு சௌகரியமிருந்து சம்மதிப்பாரானல் உங்கள் அதிர்ஷ்டம்தான். கேட்டுத் தெரிவிக்கிறேன்.

முதலி:—அந்த மாணுக்கர் யார்? என்ன வாசிக்கின்ருர்?

மரிய:—அவர் ஒற்றைப் புளிச் சித்தாந்தம் செட்டியார் மகன் அமரேசன் செட்டியார். மெட்ரிகுலேஷனில் வாசிக்கி

நீரிழிவு, மதுமேகம்

முதலிய சகல நீர் ரோகங்களுக்கு

பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்

மயூரகாய கற்பம்

ஒரு தெய்வீக சஞ்சீவி !!

இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளேக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு

இன்றே எழுதுங்கள்.

ஸ்கந்தாசிரமம்

தபால் பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்

குறிப்பிட்டவர்களுக்கான

பெரிய

கட்டி

புத்துயிர்

சுத்திகரிப்பு!

நேர்த்தியான இந்திய வெஜிடபில் ஆயில்களைக் கொண்டு தயாரிக்கப்படுவது.

மிருகக் கொழுப்பற்றது.

ஹமாம்

டாம்கோ விற்பனை இலாகா.
19-A, வாணியர் தெரு,
மதராஸ்.

TOMCO

டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.

டாடாபுரம் & பம்பாய்.

ஸ்திரீகளின் வியாதிகளைப் போக்க "லோத்ரா"வை விடச் சிறந்த உண்மை நிவாரணி வேறில்லை. இது மாத விடாயை தேகப்படி கிரமமாக வரச் செய்கிறது, அளவுடன் மாத விடாயை வெளிப்படுத்துகிறது; அதிகமாகப் போவதைத் தடுக்கிறது; மாதவிடாய்க் காலத்தில் ஏற்படும் நோவையும், வயிற்று நோவு, முதுகு நோய்களையும் தீர்க்கிறது; இவை எல்லாவற்றுடன் சாதாரணமாக தேக சுகத்துக்கும் பலவிருத்திக்கும் இது ஒரு உயர்ந்த பலனளிக்க வல்ல 'டானிக்' மருந்தாகவுமிருக்கிறது.

லோத்ரா

மாதவிடாய்க் கோளாறுகளுக்குரிய சிறந்த டானிக்

ஒவ்வொரு வீட்டிலும் இது இருக்க வேண்டியது

கேஸரி குடீரம்

எழும்பூர் :: :: மதராஸ்.

முதன் முதலாக உயர் உத்தியோகங்களை வஹிக்கும் ஸ்திரீகள்

எத்தகைய உத்தியோகத்திற்கும் இப்பொழுது ஸ்திரீகள் வந்துவிடுகிறபடியால், ஓர் உத்தியோகத்தை இந்த ஒரு ஸ்திரீதான் வகிக்கிறார் என்று குறிப்பிட்டுக் கூறுவது இயலாது. ஆயினும் இன்னும் சில உயர் உத்தியோகங்களை முதன் முதலாக வஹிக்கும் ஸ்திரீகள் இருந்து வருகின்றனர்.

சென்ற ஜூன் மாதத்தில் மிஸஸ் சுபத்ரா. பி. தார்க்குண்டே என்பவர் பூனா முனிஸிபாலிட்டியின் ப்ளீடராக நியமிக்கப்பட்டார். இந்தியாவில் இம்மாதிரியான உத்தியோகத்தை எந்த ஸ்திரீயும் இதுவரை வஹித்ததில்லை. பரோடா சமஸ்தானத்தில் மிஸ். பாட்லிவாலா என்பவர் சர்க்கார் வக்கிலாக நியமிக்கப்பட்டார். இந்த உத்தியோகத்தை வஹிக்கும் முதல் ஸ்திரீ இவர்தான்.

உலகிலேயே ஸ்திரீகள் முற்போக்கடைந்து வருவது இப்பொழுது நன்கு தெரிகிறது. அமெரிக்க மந்திரி சபையில் ஒரு ஸ்திரீ பதவி வஹித்து வருகிறார். சென்ற வருஷத்தில் மிஸ் ப்ளாரன்ஸ் இ. ஆலன் என்பவர் அமெரிக்காவில் நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

இங்கிலாந்தில் கத்திச் சண்டையில் தேர்ச்சி பெற்ற ஒருவர் இருக்கிறார். இவர் பெயர் மிஸஸ். லியான் பால். சமீபத்தில் ஜெர்மனியில் நடந்த ஒலிம்பிக் பந்தயங்களுக்குச் சென்ற கத்தி விளையாட்டுக் கோஷ்டி அங்கத்தினர்களுக்கு இவர்தான் பயிற்சியளித்தார். கத்தி விளையாட்டில் சமர்த்தரான வேறு ஸ்திரீ உலகிலேயே இல்லையென்று இப்பொழுது கூறப்படுகிறது,

ரெயில்வேக்களில் திருட்டுகள் நடப்பது அனைவருக்கும் தெரியும். இத்திருட்டுகள் பற்பல விதமாக விருக்கின்றன. இந்தியாவில் இவற்றைக்கண்டு

மிஸஸ் தார்குண்டே.

பிடிக்க ரயில்வே அதிகாரிகள் அதிக முயற்சி எடுத்துக் கொள்ளாமற் போனாலும் இங்கிலாந்தில் அதிகக் கவனம் செலுத்தப்படுகிறது. கிரேட் வெஸ்டர்ன் ரெயில்வே கம்பெனியென்றதொரு ரெயில்வே கம்பெனியில் ரெயில் திருடர்களைக் கண்டு பிடிக்கும் ஸ்திரீ ஒருத்தியிருக்கிறார். இவர் பல வருஷங்களாக இந்த உத்தியோகத்தைத் திறம்பட வஹித்து வருகிறார். முக்கியமாக அவர் 'லக்கேஜ் திருடர்'களைக் கண்டு பிடிப்பதில் வெகு சமர்த்தராகவிருக்கிறார்.

ஸ்திரீகள், மனிதர்களுக்கே சிரமசாத்தியமானவேலைகளிலுமிறங்கியிருக்கின்றனர். இங்கிலாந்தில் ஒரு பாதிரியின் குமாரி குதிரைகளைப் பழக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார். குதிரை சவாரி செய்வதற்குத் தகுந்த உடுப்புகள் வேண்டுமென்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் தாம் ஒரு பாதிரியின் குமாரியாகையால் அவ்வித உடுப்புகள் அணிந்து கொள்வது தமக்கு ஏற்றதல்லவென்று அந்த உடுப்புகளைப் போட்டுக் கொள்ளாது சாதாரண உடுப்புகளுடனேயே அவர் ஏராளமான குதிரைகளைப் பழக்கியிருக்கிறார். சென்ற மஹா யுத்தத்தின் போது இராணுவ இலாகாவிற்கு இவருடைய சேவை இன்றியமையாததாக விருந்ததென்று சர்க்காரே ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

சமீப காலம் வரையில் எடின்பரோவில் மிஸ் அலீன் கஸ்ட் என்ற மிருக வைத்திய நிபுணர், இங்கிலாந்திலேயே அத்தொழிலில் இறங்கிய முதல் ஸ்திரீயாகவிருந்தார். மஹாயுத்தத்திற்குப் பிறகு ஸ்திரீகள் உத்தியோகத் தடை நீக்க மசோதா ஒன்று அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. இதன்படி மிஸ் அலீன் கஸ்ட் மிருகவைத்தியராகப் பதிவு செய்துகொள்ள முடியாது போகவே அவர் சர்க்காரிடமிருந்து தம் தடையை நீக்க உத்தரவுபெற்றுப் பிரஸித்திபெற்ற மிருகவைத்திய நிபுணராக விளங்கினார். நாய், பூனை முதலிய ஜந்துக்களுக்கேற்படும் வியாதிகளை நிவர்த்திக்க ஸ்திரீ டாக்டர்கள் மிகவும் ஏற்றவர்கள் என்பது இவருடைய அபிப்பிராயம்.

இப்பொழுது ஸ்பெயினில் நடந்துவரும் கலகத்தில் ஸ்திரீகள் போர் முன்னணியிலிருந்து சேவை செய்துவருவது பலருக்கும் தெரிந்த விஷயமே. ஸ்பெயின் சிறைகள் இன்ஸ்பெக்டர் ஜெனரல் உத்தியோகத்தை மிஸ் ஸெனோரிடா விக்டோரியா கென்ட் என்பவர் வஹித்து வருகிறார். உலகில் இத்தகைய உத்தியோகம் வஹிக்கும் முதல் ஸ்திரீ இவர்தான்.

தற்காலம் உலகில் ஸ்திரீகள் அடைந்து வரும் முற்போக்கிற்கு வேறு என்ன அத்தாட்சிகள் வேண்டும்?

ராதா

(முன் பக்கத் தொடர்ச்சி.)

ளூர். பதினேழு பதினெட்டு வயதிருக்கும். மிகவும் நல்ல பிள்ளைதான். ஒரு மணி நேரத்துக்கு முன் இங்கே வந்திருந்தார். தமிழில் மிகவும் பிரியமுடையவர். சுயமாகக் கவிகள்கூடக் கட்டுவார். அவருடைய தமிழ்ப் பிரசங்கம் கேட்க வெகு நன்றாயிருக்கும்.

முதலி:—பிரசங்கமும் செய்வாரா இவ்வளவு வயதில்? அப்படியானால் அவரையே தீர்மானம் செய்துவிடுங்கள். அவரை இனி எப்பொழுது பார்ப்பீர்கள்? கண்டவுடன் ஞாபகமாய் இதைப்பற்றிப் பேசி அவரையே தீர்மானித்துவிடுங்கள். என்னிடமே கூட்டிக்கொண்டு வாருங்கள். தங்களைக் கண்டு பேசியதற்காக மிகவும் சந்தோ

விடை கொடுங்கள். (என்று எழுந்து நின்றுகொண்டு) இப்பொழுது மணி என்ன?

மரிய:—மணி ஒன்பதரையாகின்றது.

முதலி:—பள்ளிக்கூடம் எப்பொழுது விடுவீர்கள்?

மரிய:—காலையில் 7 முதல் 11 வரை பள்ளிக்கூடம்.

முதலி:—அப்படியானால், ராதா வருவதற்கு நேரமாகுமோ?

மரிய:—வேண்டுமானால் வண்டியில் இப்போதே அழைத்துக்கொண்டு போங்கள்.

முதலி:—இப்போதா? தாயே ராதா, என்னோடு வருகிறாயா?

ராதா:—நீங்கள் போங்கள். நான் மணியடித்த பிறகு வருகிறேன்.

முதலி:—(சேவகனைப் பார்த்து) அடே, ராஜு, நீ இங்கே காத்திருந்து ராதாவை வண்டியில் அழைத்துக்கொண்டு வா. நான் பேஷ்கார் ராமாநுஜ பந்துலுவைப் பார்த்துவிட்டு வீட்டுக்கு வருகிறேன்.

என்று சொல்லிவிட்டு வெளியேபோய்விட்டார். சேவகன் ராஜு மட்டும் நின்றான். அவனைப் பார்த்து,

மரிய:—உனக்கு முதலியாரவர்களுடைய சொந்தச் சம்பளமா? பாரெஸ்டு ஆபீஸ் சம்பளமா?

ராஜு:—ஆபீஸில் எனக்கு ஐந்து ரூபாய் வாச்சர் வேலைதான். எஜமான் கையிலிருந்தும் மாதம் ஐந்து ரூபாய் கொடுக்கிறார்கள். எஜமான்தான் எனக்கு விவாகமும் செய்து வைத்தார்கள். நல்ல புண்ணியவான்.

(33-ம் பக்கம் பார்க்க)

சிறுவர் பகுதி

விளையும் பயிர் முளையிலே!

———::———

(ஸ்ரீமான் பெ. நா. அப்புஸ்வாமி)

இங்கிலாந்து தேசத்திலே ஒரு சமயத்திலே பெரும் புயல் ஒன்று அடித்தது. அதன் வேகத்திலே மரங்கள் சாய்ந்து விழுந்தன. செடிகள் வேரோடு பிடுங்கி எறியப்பட்டன. ஆடுமாடு கோழிகளுக்கும் மனிதர்களுக்கும் கூட அப்பொழுது மிகுந்த சேதம் உண்டாயிற்று. அதனால் நாடெங்கும் அல்லோலகல்லோலப்பட்டது.

இத்தனை குழப்பங்களும் உண்டாகிக் கொண்டிருந்த வேளையில் லிங்கன்ஷைர் மாகாணத்திலுள்ள ஓர் ஊரிலே சிறுவன் ஒருவன் தன்னுடைய வீட்டுக்கு வெளியே வந்து நின்றான். மிகவும் கடுமையாய் அடித்துக்கொண்டிருந்த காற்றை அவன் துளிகூட லக்ஷியம் செய்யவில்லை. அந்தக் காற்றிலே அவன் இங்கும் அங்கும் தாண்டிக் குதித்துக்கொண்டிருந்தான்.

அவன் செய்த காரியம் பார்ப்பதற்கு வேடிக்கையாய் இருந்தது. அவன் ஓர் இடத்திலே அடையாளம் இட்டுக்கொண்டான். அந்த இடத்திலிருந்து தாண்டிக் குதித்தான். தான் குதித்த இடத்தில் அடையாளம் பண்ணிக்கொண்டான். பிறகு அந்த இடத்திலிருந்து பழைய இடத்தைப் பார்த்துத் தாவிக் குதித்தான். அவன் வந்து குதித்த இடத்தையும் அடையாளம் பண்ணிக்கொண்டான். இப்படி ஒருபுறமும் எதிர்ப்புறமுமாகப் பல முறை தாண்டினான்.

அவன் தாண்டிக் குதித்ததைக் கவனித்ததில், சில முறைகளில் அவன் காற்றுப் போக்கில்—வீசி அடிக்கிற காற்றைத் துணையாக வைத்துக்கொண்டு குதித்தான் என்பதும், சில முறைகளில் காற்றை எதிர்த்துக் காற்றுக்கு எதிர்புறமாகக் குதித்தான் என்பதும் தெரிய வந்தது.

"ஏன் இப்படிச் செய்கிறாய்?" என்று அவனைக் கேட்டதற்கு, "காற்றானது பலமாய் அடிக்கிறது. ஆளைத் தள்ளும்போல் அடிக்கிறது. காற்றுப் போக்கில் குதித்தால், அதிக தூரம் தாண்ட முடியும். காற்றை எதிர்த்துக் குதித்தால் காற்றுத் தள்ளுவதினால் அவ்வளவு தூரம் தாண்ட முடியாது. இந்த இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் எவ்வளவு என்று அளந்து பார்த்தால் காற்று எவ்வளவு பலமாக அடிக்கிறது என்பது தெரியும் அல்லவா? அதைச் சோதித்துப் பார்ப்பதற்காகத் தான் குதிக்கிறேன்" என்றான் பையன்.

அந்தப் பையன் யார் தெரியுமா?

அவன் தான் பிற்காலத்தில் ஸர் ஐஸக் நியூடன் என்று உலகப் பிரசித்தி பெற்ற மகான். கணிதத்திலும் தத்துவத்திலும் நிகரற்ற மேதாவி. சிறு வயதிலேயே அவனுடைய மனத்தில் வேரூன்றிக் கிடந்த ஆராய்ச்சித் திறக்கானது அவனுக்கு வயது வந்ததும் முதிர்ந்து உலகத்துக்கு நன்மையை அளித்தது.

ஜி. கன்னய்யா கம்பெனி
இரும்பு பெட்டி வியாபாரம்.

நெ. 137, பிராட் வே, மதராஸ்.

இந்தியா கவர்ன்மெண்டில் மெடிகல் ஸன்னதுடன் வைத்தியப் பட்டம் பெற்றவரும், கவர்ன்மெண்டு இந்திய வைத்திய கவர்னிங் பாடி & ஸெண்டிரல் போர்டு மெம்பரும், கவர்ன்மெண்டு வைத்திய கலாசாலை & I. M. S. ஹாஸ்பிடல் பரீக்ஷாதிகாரியுமான

வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய

(Sastriar in Govt. Medical dress)

மஹா
பில்வாதி லேகியம்

பித்தவாயு, இல் பிடிப்பு, பித்த மயக்கம், பலஹீனம், அன்னத்துவேஷம், அஜீர்ணம், மலச்சிக்கல் இவைகளைக் கண்டிக்கும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 3. வி. பி. வேறு.

ஆனந்த பற்பொடி

குணம், ருசி, வாசனை இவைகளில் இது ஒன்றுதான் மார்க்கெட்டில் சிறந்தது. டப்பி 1-க்கு 0—2—9. ஒரு டஜன் கொண்ட பெட்டி 1-க்கு ரூபா 1—14—0. வி.பி.வேறு. எங்கும் கிடைக்கும்.

ஆனந்த பற்பசை

ஆனந்த பற்பொடியை பசை ரூபமாக செய்யப்பட்டிருக்கிறது. ட்யூப் 1க்கு 0-8-0 வி. பி. வேறு. எங்கும் கிடைக்கும்.

கனம் சீப் ஜஸ்டிஸ் ஸர் M. வேங்கடசுப்பராவ், Kt., சென்னை ஹைகோர்ட்டு அவர்கள் எழுதுகிறார்:—

"நான் வைத்தய ஸித்தாச்ரமத்தைப் பார்வையிட்டேன். அதில் செய்து வரும் வேலைகளுக்கு எல்லா அபிவிருத்திகளையும் நான் கோருகிறேன். இவருடைய பிரயத்தினங்கள் இந்த பூர்வீகமான ஆயுர்வேதத்தை சாஸ்திரியமாக பயின்று அனுபவத்தற்குக் கொண்டுவரும் மார்க்கத்தில் ஆதரவுக்கும் அபிவிருத்திக்கும் தகுந்தவைகளே."

கனம் ராஜா of சிவகங்கா அவர்கள் எழுதுகிறார்:—

"வைத்தயரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரிகளை மிக்க சந்தோஷத்துடன் நான் பொது ஜனங்களுக்கு சிபார்சு செய்கிறேன். இவருடைய மருந்துகளை உபயோகிக்கும்படி ஸந்தர்ப்பம் நேர்ந்து அவைகளை உபயோகித்து அம்மருந்துகளால் நான் ஜெயமடைந்து இருக்கிறேன். வைத்தியமுறையில் ஒவ்வொரு ஸந்தர்ப்பங்களிலும் அவர் எனக்கு பரிபூர்ணமான திருப்தியைக் கொடுத்திருக்கிறார்."

சகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனம்.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி;

வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார்ரோட், மயிலாப்பூர், மதராஸ்

"குஜராத்சமாச்சார்" (தினப் பதிப்பு)
"பிரஜாபந்து" (வாரப் பதிப்பு)

[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]

குஜராத்தில் பிரபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்தினின்று பிரசுரிக்கப்படுபவை.

குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானால் இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்.

ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்.

Manager Gujarat Samachar & Praja Bhandhu
AHMEDABAD.

அதிசயம் ஆனல் உண்மை

1 சிகாகோ நகரில் ஒருவனுக்குச் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. அவன் 372 ராத்தல் இருந்தான். சிறையின் வழியாக அவனைக் கொண்டுபோக முடியாது போகவே வெளியே ஒரு இடம் வாடகைக்கு அமர்த்தப்பட்டு அவன் அங்கு வைக்கப்பட்டான்.

2 மெல்போர்ன் நகரில் ஒரு சிறுவர்களுக்கான மாதா கோயிலிருக்கிறது. உபாத்தியாயர்களைத் தவிர பதினறு வயதிற்கு மேற்பட்ட ஒருவரும் அந்த மாதா கோயிலுக்குள் போகவிடப்படுவதில்லை.

3 பாரிஸ் நகரிலுள்ள பூட்ஸ் செய்யும் ஒருவன் 45 பவுனுக்கு ஒரு ஜதை செய்கிறன். ஆனல் அவற்றைப்போட்டுக்கொள்ளும் ஒருவரின் கால்கள் தகுந்ததா என்று அவன் முன்னமேயே தெரிந்துகொண்டு பிறகுதான் விற்கிறன்.

4 கேப்டவுனுக்கு 2000 மைல் தூரத்திலிருந்து டிரிஸ்டன் டா குன்ஹா என்ற தீவில் பிளேக் பரவியிருப்பதால், எலிகளைக் கொல்வதற்காகப் பன்னிரண்டு பூனைகளடங்கிய ஒரு கோஷ்டி வேலை செய்து வருகிறது.

ராதா

(30-ம் பக்கத் தொடர்ச்சி)

மரிய:—முதலியாரவர்களுக்குச் சொத்து எவ்வளவிருக்கும்?

ராஜு:—இவ்விடத்திலொன்றுமில்லை எல்லாம் பாற்கடலிலேதானிருக்கிறது. அவ்விடத்தில் நன்செய், புன்செய் தோட்டமெல்லாம் சேர்த்து எழுபது எண்பதினுயிரத்துக்கு மயக்கமில்லை. எல்லாம் சுயசம்பாத்தியம்தான். ஆதியில் இவர்கள் நானறிய ஒரு கார்டு வேலையிலிருந்து யோக்யதையின்பேரில் இந்த உத்தியோகத்திற்கு வந்திருக்கிறார்கள். இப்பொழுது சம்பளம் ரூ. 250; படியுள்பட ரூ. 350 கிடைக்கிறது. எல்லாம் இந்தக் குழந்தைக்குத்தான். ஆண் குழந்தையில்லையென்ற வருத்தம் எஜமானுக்கு ரொம்ப உண்டு.

மரிய:—பாற்கடலிலுள்ள சொத்துக்களை மேற்பார்க்கிறது யார்?

ராஜு:—அங்கே எஜமான் தாயார் பூசையாச்சியென்று ஒரு பெரியம்மா இருக்கிறார்கள். அவ்வூர்ப் பண்ணையார் நச்சு முதலியார் எஜமானுடைய மைத்துனர். அவர்தான் சொத்துக்களை மேற்பார்க்கிறார்

என்று சம்பாஷித்துக்கொண்டிருக்கும்பொழுதே, பள்ளிக்கூடம் மணியடித்தது. ராதா குதிரை வண்டியிலேறி வீட்டிற்குச் சென்றாள். அவள் இவ்வாறு செல்லுமுன்னமே அதாவது அவள் முதன்முதல் அமரேசனைக் கண்ட காலமுதல் அவளுடைய மனம் அவள் வசத்திலில்லை.

ஒரு மனிதன் தன் வாழ்க்கையின் சாதாரணமான காலங்களில் நடக்கும் சாதாரண சம்பவங்களைக் கண்டால் அவன் மனமும் சாதாரணமான நிலைமையிலிருக்கின்றது. ஆனால், ஏகதேசமாய் அசாதாரணமான சம்பவங்கள் நேருமாயின், அவனுடைய மனமும் அசாதாரணமான ஒருவிதக் கலக்கமடைந்து நிற்கும். இப்படிப்பட்ட நிலைமையிற்றான் சந்தோஷம், அசந்தோஷம், சுகம், துக்கம், கோபம், பயம் என்ற பல நாமங்களையுடைய சித்த விருத்திகள் தோன்றும். இந்தச் சித்த விருத்திகளொன்றுமின்றி ஸ்வபாவ நடையில் மனம் செல்லும் காலம்தான் சாதாரண காலம். இனி நமது கதாநாயகியாகிய ராதா பிறந்து பதினொரு வருஷகாலமாய் அவளுடைய மெல்லிய மனத்தை மேற்கூறிய சித்த விருத்திகளொன்றேனும் பிடித்திருப்பதில்லை. சிசுவாயிருக்கும்பொழுதுகூட, மற்ற சாதாரணப் பெண்களைப்போல்,

இயற்கையின் நேர்த்தி மிகுந்த டானிக்:

காட்லிவர் ஆயில்

இதைவிட

ஸ்காட்ஸ் எமல்ஷன்

3 மடங்கு அதிக பலன் தருவது

நல்ல திட ஆரோக்கியமும், வலுவுமுட்ட காட்லிவர் ஆயிலே சிறந்ததென்பது வைத்தியப் பிரமுகர்களின் கருத்து: இது இயற்கையான டானிக்; பூராவும் போஷாக்குச் சத்து மிகுந்தது; முக்கியமான விட்டமின்களான A & D நிறைந்தது.

ஆனால் அப்பட்டம் காட்லிவர் ஆயில் ஜீரணமாவது கஷ்டம். முக்கியமாக தேகம் மெலிந்திருக்கையில் இது எளிதில் ஜீரணமாவதில்லை, எனவே பலரால் இதை உட்கொள்ள முடிவதில்லை. இக்கஷ்டத்தை ஸ்காட்ஸ் எமல்ஷன் தீர்த்து வைக்கிறது; ஏனெனில் இதன் விசேஷத் தயாரிப்பு முறைகாரணமாக இது வாய்க்கு ருசியாகவும், எளிதில் ஜீரணமாகிவிடுமாறுமிருக்கிறது. அத்துடன் ஹைபோ பாஸ்பைட்ஸ் ஆப் லைம் & சோடாவும் சேர்த்திருப்பதால் காட்லிவர் ஆயிலைவிட ஸ்காட்ஸ் எமல்ஷன் மும்மடங்கு விசேஷ பலன் தருகிறது.

தோத்து நோயை எதிர்க்க உதவுவது:

ஸ்காட்ஸ் எமல்ஷனின் கடமை வலுவும், ஜீவசக்தியும் அளிப்பது மட்டுமல்ல; தொத்து நோயை எதிர்க்கக்கூடிய சக்தியையும் இது வளர்க்கிறது. எனவே, உங்கள் மெலிவைப் போக்குவதற்கான சிறந்த டானிக் இதுவே. 60 வருஷப் பிரக்யாதி பெற்றது.

SCOTT'S Emulsion

சுத்த காட்லிவர் ஆயில் சேர்ந்தது.

மொத்த டிஸ்டிரிபியூட்டர்கள்:—இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்டிரீஸ் (இந்தியா) லிமிடெட். கல்கத்தா
பம்பாய் - மதராஸ் - லாகூர் - ரங்கூன் - கொழும்பு - கான்பூர் - பாடலீபுரம்
ஆமதாபாத் - கொச்சி - கள்ளிக்கோட்டை - விசாகப்பட்டணம் - கராச்சி - அமிருதசரஸ்.

(S 33)

கிடையாது. சிசுப்பருவத்தில் அவளை வளர்த்தற் பொருட்டாய், அவள் தாய் அந்த கல்யாணி அம்மாள் மற்றத் தாய்மாரைப்போல் அதிகக் கஷ்டத்தை யடைந்திருப்பதில்லை. மற்றப் பெண்களைப்போல், ராதா தன் சிசுப் பருவத்தில் ஒரு பொருளில் விருப்பும் மற்றொன்றில் வெறுப்பும் காட்டவில்லை. தன் தாய் தன் சுகத்தின் பொருட்டுக் கொடுக்கும் கசப்பான மருந்துகளையும் கூட, ராதா அதிக வருத்தமடையாதவள்போல் கண்ணை மூடிக்கொண்டு சாப்பிட்டு விடுவாள். இத்தனை பொறுமையும் அமைதியும் ராதாவினிடமிருப்பதைக்கண்டு, அவளை அவளுடைய பெற்றோரும் மற்றோரும் அடிக்கடிப் புகழ்ந்து பேசுவார்கள். ஆனால், ராதா நன்மை தீமை இன்பதுன்பமென்ற பேதங்களைப் பகுக்கறியக்

யிருந்தாளென்றெண்ணவுமிடமில்லை. அவள் தன் தாய் தந்தையரோடும் மற்றவர்களோடும் மிகுந்த வியவகார ஞானத்துடன் சாதுரியமாய்ப் பேசுவாள். சாதாரணமான சிறுமிகள் புதிய தின்பண்டங்களையும் புதிய விளையாட்டுச் சாமான்களையும் கண்டு பிரியப்படுவதுபோல், ராதா புதிய புத்தகங்களைப் படிப்பதிலும் புதிய விஷயங்களை உணர்வதிலும் அளவற்ற விருப்பமுடையவளாயிருந்தாள். அவளுடைய கல்வியபிவிர்த்தியின்பொருட்டு பிதா மாதாக்கள் எள்ளத்தனை சிரமமும் கவலையுங்கூட அடையவில்லை. இவ்வாறாக நமது ராதா மிகுந்த விவேகியாயிருந்ததுமன்றி அசாதாரணமான பொறுமையும் அமைதியுமுடையவளாயிருந்தாள்.

இதுவரையும் அவளுடைய மெல்லிய மனத்தில் எவ்வி

நில்லை. சலனமின்றி அமைதியாய் நின்ற அவள் மனத்தில் முதன்முதல் சிறிது கலக்கமுண்டாக்கியவன் அமரேசன்தான். ராதா பாடசாலையில் அமரேசனைக் கண்டகாலத்திலேயே அவனுடைய திவ்விய உருவமும் அரிய குணங்களும் ராதாவின் மனத்தில் பலமாய் வேரூன்றிவிட்டன. இதுவரையும் தான் மிகவும் லகுவாய்ச் சுமந்துவந்த தன் மனத்தில் ஏதோ ஒரு பெரிய பாரத்தை ஏற்றி வைத்திருப்பதுபோல், ராதா ஒருவிதக் கனத்தையுணர்ந்தாள். அமரேசனைக்கண்ட காலத்திலும், அவன் தன்னிடம் பேசிய அன்பான வார்த்தைகளைக் கேட்ட காலத்திலும் ராதாவின் மனம் ஏதோ ஒருவிதப் பூரிப்பையடைந்தது. மற்ற எல்லா நினைவுகளையும்விட அமரேசனைப்

மைசூர் தஸராவின்போது மஹாராஜா ஊர்வலம் சென்ற காட்சி.

பாடசாலையை விட்டுப் புறப்பட்டு வண்டியிலேறி வீடுவந்து சேர்ந்தவரை, தான் ஏறிவந்த வண்டி எவ்வாறு எந்த வழியாய்ச் சென்றது, குதிரை எப்படி ஓடிற்று, எதிரே என்ன வஸ்துக்களிருந்தனவென்று ராதா சிறிதும் கவனிக்கவில்லை. வண்டியை விட்டிறங்கி வீட்டிற்குட் சென்றபின்னும், தன் புத்தகங்களை எங்கே வைக்க வேண்டுமென்ற ஞாபகமும் அவளுக்கில்லை. இனி, இத்தனைக்கும் காரணம் இன்னதென்றுவது ராதாவுக்குத் தோன்றிற்று? அதுவும் தோன்றவில்லை. அமரேசன் அழகிற் சிறந்த ஆண்பிள்ளையென்றெண்ணி ராதா மயங்கினாளா? இல்லை அல்லால், அவன் உலகத்திலுள்ளவர்களிலெல்லாம் விசேஷமான கல்வியுடையவனென்று ராதா மதித்தாளா? அப்படியுமில்லை. பின் என்ன காரணத்தால் அமரேசனைக் கண்ட காலமுதல் ராதாவின் மனம் அவன்மேல் லயித்துவிட்டது? காரணம் ராதாவுக்கே தெரியவில்லையே? காந்தக்கல்லும் இரும்பும் ஒன்றை யொன்று கவர்ந்திழுக்கும்பொழுது, அந்தக் கவர்ச்சிக்குக் காரணமின்னதென்று காந்தக் கல்லுக்கேனும் இரும்

போலவே, அமரேசனுடைய மனோகரமான தோற்றமும், அவனுடைய அன்பான வசனமுமே ராதாவின் மனத்தை அவளுக்குத் தெரியாமல் வசப்படுத்திவிட்டன. ராதா தான் முதலி குலமென்பதையும், செட்டி குலத்தைச் சேர்ந்த அமரேசனைத் தான் விவாகம் செய்ய முடியாதென்பதையும் விவரமாய் அறிந்தவள்தான். அமரேசனை மணம் செய்ய வேண்டுமென்றுவது அவள் விரும்பினாளா அல்லது விவாகமென்பதற்குக் காரணமாயுள்ள காதலென்னும் உணர்ச்சிதான் அவள் அறிவாளா? காதலென்னும் பொல்லாத உணர்ச்சி தோன்றும் பருவமே ராதாவுக்கு இன்னும் வரவில்லையே? ஆகவே, ராதா அமரேசன் மீது கொண்ட பேரன்பிற்குக் காதல் என்னும் பெயரே பொருந்தாது. அவள் அமரேசன்மீதுகொண்ட அன்பிற்கும், சாதாரணமான ஒரு யௌவன மாது ஒரு பால்ய புருஷன்மீது கொள்ளும் காதல் பற்றிய அன்பிற்கும் பெரிய பேதமுண்டு. மாதா, பிதா, சோதரர், புத்திரர், குரு, தோழர், காதலர் இவர்கள்மீது நாம் சாதாரணமாய்க் கொள்ளும் அன்பையெல்லாம் ஒன்றாய்க் கலந்து பிழிந்தால் அதன் ஸார

படிப்பட்ட அன்பாயிருந்த ராதா அமரேசன்மீது அன்று கொண்ட அன்பு சுருங்கக் கூறுமிடத்து, ராதாவின் மெல்லிய மனதில் அமரேசன் அவளுடைய மாதாபிதாவைப்போலவும், அண்ணனைப் போலவும், தோழனைப்போலவும் தோன்றினான்.

பாடசாலையினின்று வந்த ராதா தன் தாயினிடம் ஓடிவந்து தன் பிதா பள்ளிக்கூடத்தில் மரியதாஸரிடம் பேசிக்கொண்டிருந்ததைப் பற்றியும், அமரேசன் செட்டியாரென்னும் ஒருவர் தனக்குத் தமிழ் உபாத்தியாயராய் வரப்போவதைப்பற்றியும் ஏதோ ஒரு பிரமாதமான சமாசாரம்சொல்வதுபோல் ஆனந்தமாயும் ஆவலாயும் சொன்னாள். அமரேசன் ராதாவின் மனத்திற்கு தான் ஏதோ கண்டெடுத்த புதையல்போல் ஒரு பெரிய பொருளாய்த் தோன்றினானன்றி, அவனைப் பற்றிக் கேள்வியுற்ற அநந்த கல்யாணிக்கு அப்படித் தோன்றுமா? ஆகையால், ராதாவைப் பார்த்து அவள், "அம்மா, அப்படியா, ரொம்ப சந்தோஷம். உன் அப்பாவைச் சாப்பிடக் கூப்பிடு" என்று சொல்லிவிட்டுத் தன் வேலைகளைப் பார்த்தாள்.

தலைவலி, இராத்தூக்கமின்மைக்கு ப்ரிங்கால் உபயோகியுங்கள். ப்ரிங்கால் துல்லிய மணமானது; மயிர் உதிர்தல், பால்ய நரை இவற்றிற்கும் சிறந்தது

BHRINGOL

ப்ரிங்கால் என்பது ஆயுர்வேத முறைப்படியான மகா ப்ரிங்கராஜ தைலம்;
தயாரிப்பவர்கள் :
கல்கத்தா கெமிகல் கம்பெனி,
லிமிடெட்,
H O I

கிருஷ்ண தேவராயர் - விஜய நகர மன்னன்

ஓர் சரித்திர சம்பந்தமான நாடகம்

(காபிரைட்)

(சிங்காநல்லூர் ரா. சாரங்கன்)

நாடகப் பாத்திரங்கள்

கிருஷ்ணதேவராயன்	—விஜயநகரவேந்தன்.
சாலுவதிமமர் (அப்பாஜி)	—கிருஷ்ணதேவரின் பிரதமமந்திரி.
பொம்மசாணி இராமலிங்க நாயகர்	—அமரநாயகர் தலைவன்.
அய்யமரசு, கொண்டமரசு, பச்சரசு	ராயரின் தளகர்த்தர்களில் சிலர்.
பொம்மரசு, கன்னய்யா, சொக்கலிங்கய்யா	வீரர்களில் சிலர்.
அடில்ஷா	—விஜயபுர (பிஜாபூர்) நவாப்.
குதுப்ஷா	—கோலகொண்டா சுல்தான்.
பதரீஷா	—பீடார் மகமதிய மன்னன்.
அப்பாஸ்கான், சைதுல்லா சாகப், கோரா மகமத்	சில மகமதிய தளகர்த்தர்கள்.
பிராதபருத்ர கஜபதி	—கலிங்கா (ஒரிஸ்ஸா)திபதி.
ஜக்கய்ய	ஜகன்மோகினி ஆண்வேடத்திலிருந்த பொழுது வைத்துக்கொண்ட மாறு பெயர்.
திருமலைதேவி, சின்னதேவி	ராயரின் தேவிகள்.
ஜகன் மோகினி	—கலிங்காதிபதியின் புதல்வி.

மற்றும் அமர நாயகர், ஊமத்தூர் கங்கராஜனின் பிரதிநிதி, 16 மகா பத்திர தலைவர்கள் வீரர்கள் ஒற்றர் முதலியோர்.

மற்றும் அரண்மனை ப்ரதிகாரி.

கதை நிகழுமிடம்.

சிவசமுத்திரம், கிருஷ்ணாநதி தீரம் (வடபாகம்) கலிங்கதேசம், மற்றும் வழியிலுள்ள சில கோட்டைகள்.

காட்சி 1.

சிவசமுத்திர கோட்டை வாயில்

கோட்டையின்மீது, ஊமத்தூர் கங்கராஜன் பிரதிநிதியும் மற்றும் சில தளகர்த்தர்களும் நின்றுகொண்டிருக்கின்றனர். கிருஷ்ணதேவர் தன் தளகர்த்தர்கள் அய்யமரசு, கொண்டமரசு, பச்சரசு மற்றும் வீரர்கள் புடைசூழ வருகிறார்.

கி. தே:—ராஜப்பிரதிநிதியே! யாது கூறுகிறீர்? கோட்டையை ஒப்படைக்கப் போகிறீரா இல்லையா? கடைசி முறையாகக் கூறுகிறேன். நான் ஒரு வீரன் என்ற ஹோதாவில் தெரிவிக்கிறேன்: முற்றுகையைத் தொடங்கிவிட்டால், அப்புறம் நகரம் பாழடைந்து தரைமட்டம் ஆகும்வரை விடமாட்டேன். தயாளத்தைத் துலைப்பேன். பரிதாபம் பறந்துபோம். நியாயம் நிலைதவறும். வேண்டாம் வேண்டாம். இந்த அளவிற்கு என்னைத் தூண்டாதீர், அய்யோ! வீரர்கள் மடிவர், மாந்தர் சகியார், மாதர் நாதனிழந்து விதவையாவர், சிசுக்கள் பரிதபிக்கும் கோரம்! கோரம்!! ஆகையால் சிவசமுத்திர வாசிகளே! உங்கள் பெண்டு பிள்ளைகளின் மீதாவது கருணைவைத்துக் கோட்டையை விட்டுவிடுங்கள். என்னுடைய வீரர்கள் வேலையை ஆரம்பித்துவிட்டால், யார் சொன்னாலும் விடார்கள்; தாயென்றும் கவனியார், தந்தை என்றும் நோக்கார், பாலன் என்றும் பாரார். வீரர் குதிரைகளினிடையில் சிக்கி உயிர்விடும் சிசுக்களின் பாவம் உங்களைச் சாரும் குழந்தைகளைப் பறிகொடுத்து, பரிதபிக்கும் தாய்மார்களுடைய கண்ணீர் உங்களை நரகத்தில் சேர்க்கும். சீக்கிரம் இரண்டில் ஒன்றை வெளியிடுங்கள். கோட்டையை விட்டுவிடுதல் அல்லது கோரக் காட்சிகளைக் கிளப்பிவிடுதல்.

பி நி:—அரசே! விஜயநகர வீரனே! நாங்கள் எதிர்பார்த்த உதவி வரவில்லை. உம்முடைய சைன்யத்தை எதிர்க்கத் திறமையுள்ள அவ்வளவு வீரர்கள் தன்னிடமில்லை என எங்களரசர் கங்கராஜர் செய்தி அனுப்பியுள்ளார். ஆதலின் மாபெருமகிப! உன் ஜயக் கொடியை நாட்டுவாய். நிராயுதபாணிகளாகிய எங்களைக் காப்பாற்றும்.

(கீழிறங்கி வந்து கோட்டை வாயிலைத் திறந்துவிடுகின்றனர்.)

கி. தே.—சாலுவதிம்மரே! சிவ சமுத்திரம் நம்முடையது. நுழையுங்கள். கோட்டையைச் சுற்றிலும் காவலிடுங்கள். முகமதியர் முறுக்கை முறியடிக்க முஸ்தீப்புகளைத் தயார் செய்யுங்கள். நமது வீரர்கள் மிகவும் களைத்திருக்கின்றனர். ஆதலின் இன்றிரவு இங்கு தங்கி, நாளை மறு கோட்டைக்குப் புறப்படுவோம்.

வீரர்:—கிருஷ்ண தேவருக்கு ஜே! சிவ சமுத்திர சூரன்! விரோதிகள் பணிந்து போற்றும் போர்வீரன்! தீனர்களைத் திரஸ்கரியாத தீரன். கிருஷ்ண தேவருக்கு ஜே!

(வாத்திய கோஷத்துடன் கோட்டையைக் கைப்பற்றுகின்றனர்.)



விஜய நகரத்தில் கட்டப்பட்ட "கல்யாண மண்டபம்"; அதன் சித்திரச் சிறப்பு இன்றும் கலா ரஸிகர்களால் வியக்கத் தக்கதாக விருக்கிறது.

காட்சி 2.

கிருஷ்ணாநதி தீரத்தின் வடபாகம்.

முகமதியர் பாசறை.

அடில்ஷா, குதுப்ஷா, பதரிஷா அவர் அவர்கள் பரிவாரங்களுடன் ஆலோசிக்கின்றனர்.

குதுப்ஷா:—நண்பர்களே! நம் விரோதி விஜய நகரத்து மீசை முளையாச் சிறுவன் படையெடுத்து வருகிறான். அவன் வீழ்ச்சியைக் கோரும் நாம் அவனை எவ்வழியில் துலைக்கலாமென ஆலோசிப்பதற்கே இப்பொழுது கூடியிருக்கிறோம். விஜயபுர அடில்ஷா சீவ இந்தச் சந்திப்புக்குத் தலைமை வகிப்பதுடன், ஒருங்கு சேர்க்கப்பட்ட நம் படையெழுச்சிக்குத் தலைமை வகிப்பார்.

பதரி:—ஆம், அதை நான் ஆமோதிப்பதுடன் நமது சகல படையெழுச்சிகளிலும் முதன்மைபெற்று, இச்சுதேச மன்னர்களை விரட்டி அடிப்பதுடன் நம் முகமதிய ராஜ்ஜியத்தைச் செவ்வனே ஸ்தாபிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

அடில்:—சகோதர வல்லரசுகளே! இவ்வுன்னத பதவியை எனக்களித்ததன்பொருட்டு நான் உங்களுக்கு என் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். பின்னும் காலத்தைக் கழிக்காது நடவடிக்கைகளைக் கவனிப்போம்.

நடுவில் நிறுவப்பட்டிருந்த உன்னத சிம்மாதனத்தில் அடில்ஷா உட்காருகிறார். பக்கத்திலிட்டிருந்த சற்றுத் தாழ்வான ஆசனங்களில் மற்றிரு நவாப்புகளும் அமருகின்றனர். அவர்களுடைய அமைச்சர், பரிவாரங்கள், அவர் அவர்கள் நிலைமைகளுக்கேற்றவாறு வீற்றிருக்கின்றனர்.

மு. வீ:—கூட்டு சைன்னியத்தின் தலைவர் அடில்ஷா எங்கும் ஜயமே அடைய வேண்டுமென எல்லோரும் ஏகமனதாக அல்லாவைப் பிரார்த்திப்போம் (யாவரும் தொழிக்கின்றனர்.)

ஒரு. வீ:—சத்தம், சத்தம். அடில்ஷா, ஓர் வீரன் அளித்த இந்திய தேசப்படத்தைக் கவனிக்கிறார்.

அடில்:—ஆம்; இவ்வழியாகத்தான் கிருஷ்ணதேவராயன் வருகிறான். சிவசமுத்திரக் கோட்டை, விஜயபுர எல்லையையும் நெருங்கினன்.

ஓர் ஒற்றன் வருதல்.

ஒற்றன்:—(வணங்கி) மன்னர்களே! கிருஷ்ணதேவராயன் வெகு வேகமாக திக்விஜயம் செய்து வருகிறுன். ராச்சூரு (ரைச்சூர்) முடிகல்ளு அடாங்கி, அத்வானி கோட்டைகள் அவன் வசமாயின.

அடில்:—(பரபரப்புடன்) அப்படியா, குதுப்ஷா, பத்ரீஷா! பார்த்தீர்களா அவன் வீரத்தை.

குதுப்:—ஏனோ இவ்வளவு ஆர்பாட்டம்? அந்த விஜயநகரத்தான் ஓர் பால்மணம் மாரு இளஞ்சிறுவனல்லனோ? அவனைக்கண்டு ஏனோ இப்படிப் பயப்படவேண்டும்? அவனுடைய சேனை நம் சைன்யத்தின் முன் நிற்க முடியுமா? கவலையை விடுங்கள். வெற்றி நமக்குத்தான்.

பத்ரீ:—நண்பரே! அப்படி அவசரப்பட்டுக் கூறிவிடாதீர். இச்சுதேச மன்னரைப்பற்றி நீர் சரிவர அறிந்துகொள்ளவில்லை என நன்கு புலப்படுகிறது. சற்றுமுன் வந்த ஒற்றனையே கேட்டுப் பாருங்கள். இந்தக் கிருஷ்ணதேவனுடைய வீரத்தையும், சாமர்த்தியத்தையும், சேனையை அணிவகுக்கும் வித்தையையும், கௌரவ சூழ்ச்சிகளையும் நன்கு எடுத்துக் கூறுவான். அவன் அமைச்சன், சாளுவ திம்மராம், சாமானிய ஆசாமியா? ஆதலின், நாம் வெகு ஜாக்ரதையாக வேலை செய்யவேண்டும்.

அடில்:—ஆம். பத்ரீஷா கூறுவதும் உண்மையே. கிருஷ்ணதேவனை நம்புவதற்கில்லை. விளையும்பயிர் முளையிலே. ஆதலின், இவனை வளரவிட்டால் பின் அவகேடாக முடியும். அவனைத் துலைக்க யோசனை கூறுங்கள்.

அப். கா.:—ஷா இன்ஷா! அவன் நம் எல்லையை அடைவதற்குமுன்நாம் நம் படையைச் செலுத்தி, ஒவ்வொரு கிராமங்களாக அழித்துக்கொண்டே செல்வோம். பேசிக்கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை.

சை. சா:—ஷா இன்ஷா! நான் விரோதிகளுக்குப் பயந்து கூறுகிறேன் என்றுஎண்ணிவிடலாகாது. தற்சமயநிலையை நோக்கின், சமாதானமே செய்துகொள்வது நன்றெனத் தோன்றுகிறது.

கோ. மக. (கோபத்துடன் குதித்தெழுந்து):—சாகப்! உமக்கேன் இந்தக் கோழைபுத்தி? அவமானம்! சுதேசமன்னனிடம் நாமா சமாதானம் கொள்வது? ஷா இன்ஷா! யோசனையை விடுங்கள். நான், குதுப்ஷா, அப்பாஸ் கான் முதலியோர் அபிப்ராயங்களையே பின் பற்றுகிறேன்.

(ஓர் சேவகன் வருதல்.)

சேவ:—ஷா இன்ஷா, கிருஷ்ண தேவனிடமிருந்து ஓர் தூதன் பேட்டிக்காகக் காத்திருக்கிறுர். உத்தரவு.

அடில்:—அப்படியா! உள்ளே விடுவாய். (வணங்கிச் செல்கிறுன்.)

பார்த்தீர்களா, வெகு வேகத்துடன் வருகிறுன்.

குதுப்:—நம் பலத்தை அறியாத மமதைகொண்ட இச்சிறுவனை அடக்குவோம். நாம் எத்தகைய வீரர் என்பதைக் காட்டுவோம். ஆதலின் மனக்கலக்கத்தை அகற்றுவோம்.

(ராயரின் தூதன் வருகிறுன்.)

அடில்:—சந்தோஷம். அமருவீர்.

தூதன்:—(வணங்கி) ஷா இன்ஷா! உத்தரவிட்டால் எங்கள் இறைவன் உள்ளத்தைத் தெரிவிக்கிறேன்.

அடில்:—தெரிவிப்பீர்; நண்பர்களே கவனியுங்கள்.

தூதன்:—உங்கள் மூவர் சைன்யம் பெருத்ததாக இருப்பினும், பெரிய யானையைக் கொல்லக் கூடிய சக்தி ஓர் சிறு எறும்புக்கு உள்ளதுபோல் எம் சிறுசைன்னியம் உங்களைத் தோற்கடிக்கும் திறமை வாய்ந்துள்ளது. வீணே சண்டையிட்டு உயிர்ச் சேதம் வேண்டாம். அதைக் காண மனஞ் சகியாது. ஆதலின் சமாதானத்திற்கு வழி தேடுங்கள். உங்களை வென்று, ராஜ்யங்களைக் கைப்பற்றுவது என் நோக்கமல்ல. உங்கள் துணையை யான் வேண்டுகிறேன். சிற்றரசர்களாகிய உங்களிடமிருந்து கப்பத்தையே நான்கருதுகிறேன். உடன்படிக்கையில் விருப்பமிருக்குமாயின் சீக்கிரம் மூங்துங்கள்.

குதுப்:—(கோபத்துடன்) கோரா! இந்தப் பயலை உடனே கைது செய்து காவலில் வைப்பாய். மரியாதையின்றித் தாறுமாருக உளறுகிறுன்.

—நீலகிரி—

காப்பிக்கொட்டை

கீழ்க்கண்ட ரகங்களை சகல சார்ஜும் உள்பட சென்னை ராஜதானியில் அல்லது பம்பாய்க்குத் தெற்கேயுள்ள எந்த ஸ்டேஷனுக்கு வேண்டுமானுலும் அனுப்பப்படும்:—

— வி. பி. ரெயில்வே பார்சல் மூலமாய் —

10 lb எக்ஸ்ட்ரா போல்டு தட்டைக்கோட்டை ரூபா 5—2—0

கூட்ஸ் வண்டி மூலமாக (Goods Train)

1×30 lb மூட்டை நீலகிரி "O" சைஸ் ,, 14—4—0

1×30 lb மூட்டை ,, எக்ஸ்ட்ரா போல்டு ,, 12-11—0

இன்னும் இதர காப்பிப்பொடி ட தினுசுகளின் விலை விவரங்களுக்கு :: :: கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :: ::

யுனைடெட் காப்பி சப்ளை கம்பெனி, லிமிடெட்.,

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்

T. ஸ்டேன்ஸ் & Co, Ltd., கோயம்புத்தூர்.

புராதன சாஸ்திர ஆராய்ச்சியின் பேரில் அனுபவம் பெற்ற இருவர் கலந்து தெளிவுபடக் கூறுவதாம்.

பண்டிட் M R K மூர்த்தி, ஜோதிஷ கலா வல்லபர்

பண்டிட் E S K. சுவாமி. ஜோதிஷ தத்வக்கியானி

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 1. காரணமுடன் கேள்வி 1-க்கு ரூ. 1. ஒரு வருஷ மாதவாரி பலன ரூ. 2 ஆயுள்வரை பொதுப்பலன் ரூ. 10 ஜாதகமாவது, பிறந்த நேரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

"ஜோதிட கழகம்" 14 பிராட்வே. மதராஸ்.

DIAMONDS ESTD 1910 JEWELLERY

டாக்டர் பி. கே. கே. நாயுடு, மண்டபம் முகாம்

நான் ஆர்டர் செய்த நகைகள் அடங்கிய பார்சல் கிடைத்தது. 'பிரிவு உபசாரத்தை' நடத்தியவர்கள் நகைகளைக்கண்டு பரமதிருப்தி அடைந்தனர். என் மனைவியும், நானும் தங்கள் அழகிய வேலைப் பாட்டைப் பாராட்டுகிறோம்.

BAPALAL & Co

216. China Bazaar. MADRAS.

மல்லிகாவின் பாக்யமே பாக்யம்!

போன வருடம் ஐயோ! அப்பா! என்று கஷ்டப்பட்டவள் இவ்வருடம் ஒரு குழந்தையை அன்புடன் அணைகிறுள்

"வேலன்ஸ் ஸ்திரீ ஸோதரி"

ஸ்திரீகளுக்கு மாதக்குளி காலத்தில் உண்டாகும் சூதக வாய்வு, சூதக பந்தம், சூதகக்கட்டினல் உண்டாகும் வயிற்று வலி, பேதி, பசியின்மை, வாந்தி, மயக்கம், தலைவலி, ஜ்வரம், உடல் ஸ்தூலித்தல் முதலிய எல்லா கர்ப்பாசய வியாதிகளையும் கண்டித்து மலட்டுப் பூச்சிகளைக்கொன்று, கருப்பைக்கு பலந்தந்து ரக்ஷித்து சந்தான பாக்யத்தையளிக்கும் உன்னத ஔஷதம். பத்தியமில்லை, சேட் விலை ரூபா 5.

வேலன்ஸ்மெடிகல் ஹால் 61, காரணீஸ்வரர் கோயில் தெரு மைலாப்பூர், சென்னை

சை. சா:—ஹா இன்ஷா! அவசரம் வேண்டாம். இவ் வார்த்தைகள் ராயருடைய தல்லவோ? ஆதலின் உங்கள் கோபம் அவரையல்லவோ தாக்கவேண்டும். இராஜ தூதரைக் கடிந்துகொள்வதா நீதி?

அடில்:—சமாதானத்திற் கொப்பாவிடில் —

இ. தூ:—சந்தேகமென்ன? யுத்தமே. சர்வசன்னத்தராக எமதரசர் புறப்பட்டு விட்டார். வேண்டிய ஆயத்தங்கள் செய்துகொள்ளுங்கள்.

அடில்:—நாங்களும் தயாராக இருப்பதாகவே அவரிடம் தெரிவியுங்கள். செல்லலாம்.

(செல்கிறார்.)

குதுப்ஷா! பத்ரீஷா! இனி யோசனை வேண்டாம். படை எழுச்சியைத் தொடங்கவேண்டியதே. அப்பாஸ்கான்! சைதுல்லா சாகப்! கோரா மகமத்! நீங்கள் நம் சைன்யத்தின் ஓர் பகுதியைச் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து ஹிந்துக்கள் கிராமங்களை அழித்தும், கோவில்களைத் தரைமட்டமாக்கியும், மற்றும் ஸ்திரீ குழந்தைகளை அபகரித்தும் பயத்தை உண்டாக்கி, இஸ்லாமைத் தழுவி, போரிடச்சித்தமாக்குங்கள். நாங்கள் எங்கள் பெரும் சைன்யத்துடன் பகைவரைச் சந்திக்க ஏற்பாடு செய்கிறோம்.

(யாவரும் வணங்கி செல்கிறார்கள். 'அல்லாஹு அக்பர்' எங்கும் கூக்குரல்.)

காட்சி 3.

ஹிந்துக்களைச்சேர்ந்த ஓர் கிராமம்.

(கிராமத் தலைவன் தன் கீழ் இருக்கும் சில வீரர்களுடன் சேர்ந்து ஆலோசித்துக் கொண்டிருத்தல். ஓர் ஒற்றன் ஓடி வருதல்)

ஒற்:-தப்பித்துக் கொள்ளுங்கள், தப்பித்துக் கொள்ளுங்கள், தேவரின் படை எடுப்பைத் தடுக்க மூன்று சுல்தான்களும் தங்கள் படைகளுடன் புறப்பட்டு விட்டனர். உங்கள் சொத்துக்களைச் சேகரியுங்கள் அலக்ஷியம் வேண்டாம்.

(குடியானவர்களாகிய அவ்வீரர் தங்கள் தங்கள் கோடாலி, கடப்பாறை முதலிய ஆயுதங்களை ஆகாயத்தில் தூக்கி ஆர்ப்பரிக்கின்றனர். கலவரம்.)

தலை: அவ்வளவு லேசில் இம் மகமதியர்களை விட்டுவிடுவதா? இவர்களைத் தடுத்துப் போர் செய்வதே, கிருஷ்ண தேவருக்கு நாம் செய்யக்கூடிய உதவி.

ஸ்திரீ குழந்தைகள் உள்பட ஓர் பெரிய கூட்டம் ஓடி வருகிறது. அப்பாஸ்கான் தலைமையிலுள்ள மகமதியப்படை பின் தூரத்திக்கொண்டு வருகிறது.

அ கா:—விடாதீர்கள் 'பிடியுங்கள்' கொல்லுங்கள். அதோ ஓடுகிறார்கள்

ம. வீ:—அல்லாஹு அக்பர்! அல்லாஹு அக்பர்!!

ஸ்திரீகள்:—சண்டாளர்கள்! இரக்கமற்றவர்கள்.

குழந்:—அம்மா அம்மா (அழுகின்றன)

(கிராமத் தலைவர் ஹிந்துக் கூட்டத்திற்கும், மகமதிய சைனியத்திற்கும் நடுவில் பாய்ந்து தாக்குகிறார்.)

தலைவன்:—வீரமிக்க தோழர்களே! ஓடி வாருங்கள். உங்கள் சுதந்திரத்திற்காக உங்கள் ஸ்திரீ குழந்தைகளைக் காக்க ஓடி வாருங்கள்; (மகமதியரைப் பார்த்து) ஏ! சைதான்களே! எங்களுடன் காட்டுங்கள் உங்கள் புஜபலத்தை. நேருக்கு நேர் யுத்தம்.

அப்பாஸ்:—ஓ கிழவா! நீயே ரணபலி (சுட்டியால் கிழவனைக் கொல்கிறான்.)

ஹிந்து:—ஆ...ஆ...ஆ... (பதறுகின்றனர்.) இரண்டு தரப்பினரும் கைகலக்கின்றனர். மகமதியர் குழந்தைகளையும் ஸ்திரீகளையும் அபகரித்துச் செல்கிறார்கள். புருஷர்களை வதைத்து துவம்சம் செய்கின்றனர். பிணக்குவியல்கள். ஓர் சிலர் பக்கத்திலிருக்கும் வீடுகளைத் தீக்கிரையாக்குகின்றனர்.

மாங்:—அய்யோ! நெருப்பு! நெருப்பு! மிகுந்தோர் ஓடப் பிரயத்தனஞ் செய்ய, எதிர்புறமாக கோராவின் சைனியம் தோன்றி வளைத்துக்கொள்கிறது. ஜனங்கள் திகைத்துத் தஞ்சமடைகின்றனர்.

அப்பாஸ்:—இவர்களை விலங்கிடுங்கள். நாளை இவர்கள் நம் இஸ்லாமைத் தழுவி, நம்முடன் சேர்ந்து தேவனை எதிர்க்க வேண்டும். சரி; வேறு பக்கம் சென்று சூரையிடுவோம், வாருங்கள். என்ன கோரா, இன்று நம் வெற்றிக்கு என்ன?

கோர—அபாஸ்கான்! இந்தக் கிராம ஆலயம் தவிடுபொடி. விக்ரகத்தைக்களவாடி பாழுங்கிணற்றில் எறிந்துவிட்டேன். கோவில் திரவியம் தக்க காவலுடன் சுல்தான்களை அடைந்தது. அக்கோவில் பூசாரிப் பயல் இதோ. (ஓர் பிராம்மணோத்தமரை அடித்து இழுத்து வருகிறார்கள்.)

அப்பாஸ்:—ஒரு தமாஷ் செய்யலாம். இவனுக்கு நம்மைப்போலவே முன் குடுமி வைத்து அவிழ்த்துவிட்டு விடுவோம். நம் ஜயத்தை அந்த தேவனுக்குத் தெரிவிக்கட்டும். இளஞ்சிறுவன் அவனைக் கண்டு நாம் அஞ்சவில்லை என்பதற்கறிகுறியாகவும் அவனுக்குற்றது பந்துவிளையாட்டே என எடுத்துக் கூறவும் சில ரப்பர் பந்துகளையும், ஓர் துடுப்பையும் அனுப்புங்கள்.

(கோரா சந்தோஷ ஆரவாரத்துடன் அப்பாஸ்கானைத் தட்டிக் கொடுக்கிறான்.)

(தொடரும்)

... ஆரோக்கியக் குறைவு -

அதற்கான காரணம்

எவ்வளவு பெரிய கட்டிடத்தையும் செல்லரித்துவிடவில்லையா? அது போல் ஒருவனது வஜ்ரசரீரம் துரும்பாக இளைத்து விடுவதற்கு அதிக நாழிகை ஆகாது. இதற்குக் காரணமில்லாமலில்லை; அது என்னவென்றால் தேகத்தில் "உலோக சத்துக்கள்" குறைந்திருப்பதுதான்.

தேகம் மெலிந்தும், ஆரோக்கியம் குறைந்துமிருப்பவர்களது தேகத்தில் இவ் "வுலோக சத்துக்கள்" கிடையாது. மீண்டும் இவற்றைத் தேகத்தினுள் புகுத்தினலல்லாது அவர்கள் திட ஆரோக்கியத்தைப் பெற முடியாது. இதற்காகத்தான் வைத்தியர்கள் கல்ஸாஞ கண்டு பிடித்திருக்கிறார்கள். அன்றாடம் ஒரு சில கல்ஸாஞ மாத்திரைகளைச் சாப்பிட்டால் மீண்டும் ஆரோக்கியமுண்டாகிவிடும்.

ஒரு சமயத்தில் ஆரோக்கியம் கெட்டுக்கிடந்த ஒருவர் சொல்வதைக் கேளுங்கள்.

"முன்னெல்லாம் நான் ஓயாத தலைவலியால் அவஸ்தைப்படுவேன்; இரத்தமிழந்து, களைப்பு மிகுந்து தவிப்பேன். ஆனால் கல்ஸாஞ சாப்பிட்டதும் எல்லாம் மாயமாக மறைந்துவிட்டன. இப்பொழுது புதிய ஆரோக்கியமும், ஜீவசக்தியும் பெற்றுச் சுகமாக விருக்கிறேன்."

இன்றே கல்ஸாஞ உட்கொள்ளத் தொடங்குங்கள். நீங்களும் புதிய ஆரோக்கியமும், ஜீவசக்தியும் பெறுவீர்கள்.

Kalzana

மேலான ஆரோக்கியத்திற்கான உலோக உணவு.

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

கைபடாமல் தயாரிக்கப்படுவது.

வலுவூட்டும் சிறந்த டானிக்

வெப்ஸ்டர்ஸ் பாஸ்பாடம்

கிருஷ்ராஜ் & கம்பெனி, மெத்தையில் ஆபீஸ்,

மருந்து வியாபாரிகள், சைனபஜார் ரோட், மதராஸ்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்



ஐ. சி. எஸ். பரீட்சையில் தேறிப் பயிற்சி பெற்று இந்தியாவுக்கு திரும்பி வந்திருக்கும் (இடது பக்கமிருந்து) எம். டி. ராஜம் (சென்னை) பி. கே. ஆசார்யா, எஸ். ஜெகந்நாதன் (சென்னை) எம். எச் கபரி, டி. சுவாமிநாதன் (சென்னை)

கலாசாலைப் பிரதிக்ஞை

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

ராமசாமி:—பேஷ்! கதை நன்றாயிருக்கின்றது. பிரதிக்ஞை வியாக்கியானம் பெண்டாட்டியிடமிருந்துதான் கேட்க வேண்டும். இருக்கட்டும். உனது மனைவி உனது மனதிற்கு இணங்க நடக்கும் குணவதியா? மனைவி மக்களை காடிக் குட்டிகளென்றும் புலி ஜன்மங்களென்றும் நமது சங்கத்தில் நாம் வர்ணிப்பதில்லையா?

சுப்புசாமி ஐயர்:—எனது மனைவி அடக்கமும் பொறுமையுமுடையவள். ஓர் உதாரணம் சொல்கின்றேன். அதனின்றும் நீ யூகித்துக்கொள்ளலாம். இலைபோட்டு அன்னம் வட்டிக்கச் சொன்னால்தான் வட்டிப்பாள். முதலில் சாதம் கறி பரிமாறுவாள். சாப்பிடுகிற நான் மறுபடியும் ஏதாவது வேண்டுமென்று கேட்டால்தான் பரிமாறுவாள். நான் கேட்காவிட்டால் முதல் சாதத்தோடே எழுந்தும்பாக விட்டுவிடுவாள்.

ராமசாமி:—கேட்காததைச் செய்து தொந்திரவு படுத்தும் குணம் உன் மனைவியிடம் இல்லை என்று ஏற்படுகிறது.

சுப்புசாமி ஐயர்:— நான் சொல்வதை அவள் செய்கிறாதலால் அவள் சொல்வதையும் நான் செய்தாகவேண்டும் என்பது அவள் கோட்பாடு. இன்றைக்கு ஓர் சேலை எடுத்துக் கொடுக்கும்படி கேட்டால் உடனே அப்படிச் செய்ய வேண்டும். அடுத்த 10 நாளில் இன்னோர் சேலை கேட்டாலும் விலக்க மாதத்தில் இன்னோர் சேலை வேண்டுமானாலும் வாங்கிக் கொடுத்தாகவேண்டும். இவை உதாரணம். இன்னும் பல நினுசுகள் உண்டு.

ராமசாமி:—ஆதலால் உன் இஷ்டப்படி உன் மனைவியும் அவள் இஷ்டப்படி நீயும் நடந்து கொள்வதாக உன் அபிப்பிராயம். இத்தகைய ஜன்மங்களுடன் உறவாடுதல் உன் போன்றவர்களுக்குத்தான் சாத்தியம்.

சுப்புசாமி ஐயர்:—அப்படிச் சொல்லாதே. நீ என்னை விட்டுப் பிரிந்த பின்னர் நிகழ்ந்தவற்றை விவரமாய் உரை.

ராமசாமி தான் கள்ளிக்கோட்டையில் மருந்துக் கடையில் குமாஸ்தாவாக அமர்ந்ததாகவும், தனது எஜமானனை சங்கரன் நாயர் தன்னிடம் மிகப் பிரியமாக இருந்ததாகவும், அவர் பிரமசாரியாகவே காலஞ் சென்றபடியால் அவர் சொத்துக்களை தனக்கு உயில் எழுதி வைத்ததாகவும் அதனால் இந்தக் கடைக்கு ஏக போக சொந்தக்காரனாக இரண்டு வருஷங்களாக இருந்து வருவதாகவும், தான் இன்னும் பிரமசாரியாகவே இருந்து வருவதாகவும், தனது எஜமானன் தன்னைக் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட வேண்டுமென்று யோசனை சொல்லியிருந்த போதிலும் முன் பிரதிக்ஞையை மனதிற்கொண்டு சும்மா இருப்பதாகவும் தெரிவித்தார்.

சுப்புசாமி ஐயர்:—ராமசாமி நான் சொல்வதைக் கேள். நீ பெரிய சொத்துக்கு அதிபதியான பிறகு குடும்ப வாழ்க்கையில் ஈடுபடவேண்டுமென்பதே என் அவா. உனது பெற்றோர் மூப்படைந்த நிலையில் மிகக் கஷ்டப்படுகின்றனர். உனது இருப்பிடத்தைத் தெரிவிக்கும்படி பலமுறை என்னைக் கேட்டனர். விவரம் தெரியாததால் என்னால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. நமது கிராமத்தில் சேஷஐயங்கார் குமாரத்தி செண்பகத்தை சிறு வயதில் நீ பார்த்திருப்பாய். அவள் அழகும் குணமும் பொருந்தியவளாய் பதினைந்து வயது நிரம்பியவளாய் இருக்கின்றாள். ஏழை வீட்டுப் பெண் ஆயினும் நாகரீகத்தில் மிகுந்தவள். அவள் உனக்கு ஏற்ற மனைவி. அவளை நீ மணந்துகொள். உத்தியோகஸ்தர் குமாரி என்ற கர்வம் என் மனைவிக்குண்டு. அதனால் மணவாழ்க்கையின் மணத்தை நன்கு சுவைக்க என்னால் இயலவில்லை. ஏழைக் குடும்பப்பெண் ஆனதால்செண்பகம் உனக்கு இன்பம் உண்டாக்கும் வகையில் நடந்து கொள்வாள். கலாசாலை பிரதிக்ஞையைக் கவனியாதே. ஜன சமூகத் தொண்டு என்பது ஓர் பிரமை. பெற்றோர் நலத்தைக் கவனியாதவன் சமூகத்தொண்டாற்றத் தகுதியுடையவனாவானா? என் யோசனைகளைச் சிந்தித்துப்பார். மறுபடியும் திரும்பி வரும்போது உன்னைப் பார்க்கிறேன்.

இவற்றைச் சொல்லிவிட்டு சுப்புசாமி ஐயர் அவசியமான மருந்துகளை வாங்கிக்கொண்டு இடக்கர்நாட்டுக்குச் சென்றார்.

* * * *

அடுத்த சித்திரை மாதம் 15-ந் தேதி வெள்ளிக்கிழமை காலையில் கள்ளிக்கோட்டை விஜய விலாசத்தில் சுப்புசாமி ஐயர் தம்பதிகள், அவர் பெற்றோர்கள், ராமசாமியின் பெற்றோர்கள் முதலானவர் கூடியிருக்க, சௌபாக்கியவதி செண்பகத்திற்கும் சிரஞ்சீவி ராமசாமி ஐயங்காருக்கும் விவாகம் சிறப்பாக நடந்தேறியது. மணத்தின் இன்பத்தில் தம்பதிகள் திளைத்திருக்கின்றனர்.

டாக்டர் ஜம்மி வெங்கடாரமணய்யாவின்

லிவர்க்யூர்

குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு நிகரற்றது என்று டாக்டர்களாலும், பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.

அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சி பத்திரங்களும் பெற்றது.

ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மஸி, 125-12, பின்னட் வீதி—ரங்கூன்.

பேசியதற்காக மங்களம் ... போகவும் ... நான் ...

தீபாவளிப் புடவை

(காசினி எழுதியது.)

* * * நாங்கள் எல்லாரும் இந்த வருஷம் தீபாவளிக்குக் கதர்பட்டு புடவைகளை வாங்குவது என்று தீர்மானித்து அவ்விதமே வாங்கிவிட்டோம். நான் வாங்கி இருக்கும் புடவை ஏழு கஜம் புடவை. விலை பதினேழே சொச்ச ரூபாய்கள் ஆச்சுது. ஆழ்ந்த ஆரஞ்சு நிறம். அழகிய அச்சிட்ட கரையும், தலைப்பும் உடையது. என் அத்தை மட்டும், 'தூரத்துப் பார்வைக்கு உன் புடவை சால்வை மாதிரியில் இருக்கு', என்று சொல்லுகிறாள். எனக்கு என் புடவை பிடித்துத்தான் இருக்கிறது.

லேடி சின்னையா மனதுக்கு இசைந்த புடவை அகப்படவில்லை என்று கடை கடையாக அலைந்தாள். கடைசியில் தாமரைப்பூ வர்ணத்தில் ஒரு புடவை. வாங்கிக்கொண்டாள். கரை, சரிகை வேலை செய்யப்பட்டு மிகவும் அழகாக இருந்தது. புடவை ஒன்பது கஜம் புடவைதான். விலை எழுபது ரூபாய்கள் ஆச்சுது. கடைக்காரன் என்னமோ, வேண்டுமானல் புடவையைக் கிழித்துக் கொடுப்பதாகச் சொன்னான். லேடி சின்னையா, "இனிமேல் நான் ஆறு கஜம் புடவைகள் கட்டப் போவதே இல்லை. வாங்குவதெல்லாம், எட்டு, அல்லது ஒன்பது கஜத்தில் தான் வாங்கப் போகிறேன். எனக்கு வர வர இந்த, 'ஸ்கர்ட்டும்' கிர்ட்டும்,' பிடிக்கவே இல்லை" என்று சொல்லிப் புடவையை அப்படியே வாங்கிக் கொண்டாள்.

சொன்னதுதான் பாக்கி; வீட்டுக்குப் போய், கொஞ்ச நாழிகைக்கு எல்லாம், 'சுந்தரிக்கும், லீலாவுக்கும் சரியான பாவாடைத் துண்டே கிடைக்கவில்லை. எனக்கும் ஒன்பது கஜம் எதற்கு என்று தோன்றுகிறது. இதில் இரண்டு கஜம் கிழித்து, ஆளுக்கு ஒரு பாவாடையாகத் தைத்து விடலாம் என்றுநினைக்கிறேன். 'பாடி' வைத்துத் தைக்க உபரம் சரியாக இருக்கும்' என்று சொல்லிக்கொண்டே, புடவையைக் கிழித்துத் தன் பேத்திக்கு ஒரு பாவாடையும், நாத்தனர் பேத்திக்கு ஒரு பாவாடையும் தைத்து விட்டாள். பிறகு 'ஏழு கஜம் இரண்டும் கெட்டானுக இருக்கு; தலைப்பைத் தொங்கவிட அதிக நீளமாக இருக்கு; உள் பாவாடை இல்லாமல் கட்ட நீளமும் போரவில்லை; என்று சொல்லிப் புடவையில் இன்னும் முக்கால் கஜம்போல் கிழித்து, புடவையுடன் ஒத்து இருக்கும்படிச் சட்டை தைத்துக்கொண்டாள். லேடி சின்னையாவின் மகன், 'அம்மா, ஒரு புடவை வாங்கிவந்து பாவாடை சட்டை எல்லாம் அதிலேயே சிக்கனமாகச் செய்துகொண்டு விட்டீர்களே. அதில் இன்னும் கொஞ்சம், கால் கஜம்போல் எனக்குக் கிழித்துக் கொடுத்தால் நானும் ஒரு 'டை' தைத்துக் கொள்ள மாட்டேனு?' என்று கேட்டான். 'போ' உனக்கு வேலை என்ன? எந்தப் புடவையைக் கண்டாலும் 'டை'தைத்துக் கொள்ளவேண்டும் என்று தோன்றுமோ?' என்று லேடி சின்னையா சிரித்துக்கொண்டே கேட்டாள். புடவை, பாவாடை, சட்டை எல்லாம் அழகாகத்தான் இருக்கிறது.

ஆனாபிள் சிவன் வீட்டில் தீபாவளிக்கு யாரும் துணி வாங்குவதில் அதிகம் செலவே செய்யவில்லை. ஏதோ-சாஸ்திரத்திற்குச் சொல்ப விலையில் ஆளுக்கு ஒரு புடவை வாங்கிக் கொண்டு விட்டு, நகைகள் செய்துகொண்டு விட்டார்கள். ஆனாபிள் சிவன் மனைவி ஒரு சிறிய நீலக்கல்லும், வைரமும் வைத்த மோதிரம் ஒன்று செய்துகொண்டாள். மற்றவர்

• லண்டனில் சமீபத்தில் உலக மத மகாநாடு நடைபெற்றது. அதைபொட்டி நடந்த ஒரு தேநீர்ச்சேரியில் பிரசன்னமாகவிருந்த இந்திய ஸ்திரீகள்.

ஜகப்பிரசித்தி பெற்ற
ஆர். முகம் அண்டு கம்பெனியாரின்
நெ. 1. மணிமார்க். பட்டணம்
மூக்குத் தூளை
உபயோகியுங்கள்.

1 நெ. வீசை 1-க்கு விலை ரூ. 4 0
2 நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8

ஏஜண்டுகள் தேவை:—
விலாசம்: ஆர். முகம் அண்டு கம்பெனி,
நெ. 5, ஓலடு ஜெயில் தெருவு, மதராஸ்

என்ஜினியரது நன்மொழி.

டி. கே. ஐயாசாமி, என்ஜினியர். ஸ்ரீ வைகுண்டம், 9-3-35

என் கிருஹத்தில் கேசவர்த்தினியை வருவுத்துக்கு மேலாக விடாமல் உபயோகித்து வருகிறோம். தயாரிப்பவர்கள் அதற்கு என்னென்ன குணதிசயங்கள் உண்டென்று பிரசுரப்படுத்தியுள்ளார்களோ, அவையெல்லாம் அதற்கு உண்டு என்பது எமது அனுபவம். அதன் உபயோகத்தால் மயிர் உதிர்வது நிற்பதுடன், வழுக்கை இனகரைகளும் நீர்ந்து, கூந்தலும் அதிசீக்கிரத்தில் கருகரு என்று வளர்கிறது. கேசத்துக்கு இதைவிடச் சிறந்தது ஒன்றில்லை என்பதைப் பிரகடனப் படுத்துவதில் எனக்குப் பரம ஸந்தோஷம்.

(கையொப்பம்) டி. கே. ஐயாசாமி.

கேசவர்த்தினி விலை அணு 12; ஷாம்பு விலை அணு 12.
மேற்செலவு வேறு.
தென் இந்திய ரஸாயன சாலை,
லஸ்ரோடு, மயிலாப்பூர், சென்னை.

இனமல் வளையல்கள், பொயக்கல் வைத்த சங்கிலிகள் முதலியவைகளை வாங்கிக் கொண்டார்கள். நீங்கள் என்ன என்ன வாங்கிக்கொண்டீர்கள், என்பதற்கு விவரமாக எழுது.

அட்டிகை

அன்று நான் ஒரு அட்டிகை பார்த்தேன்; நன்றாக இருந்தது. இது கமலத்திலும், சிகப்பிலுமாகச் செய்யப்பட்டிருந்தது. வைரங்கள் சிறிய வைரங்கள்தான். இவைகளைச் சாதாரண அட்டிகை மாதிரியில் கட்டுவதில் சற்று வளைவு, வளைவாகக் கட்டி இருந்தது. ஒத்தை வரிசையாக வைத்து, மிகவும் மெல்லியதாகவே கட்டி இருந்தது. இதிலிருந்து சில பாதசரங்களில் தொங்குவது போல், தங்கத்தினல் செய்யப்பட்ட மெல்லிய சங்கிலிகளை வளைத்துத் தொங்கவிட்டிருந்தது. ஒவ்வொரு வளையத்திற்கும் நடுவில் ஒரு பெரிய சிகப்புத் தொங்கவிடப்பட்டிருந்தது. இந்தச் சிகப்புக்கள், பெரியதாக பட்டை தீர்க்கப்படாத முழுச் சிகப்பாக இருந்தது. தங்கக் கட்டுமானமே தெரியாமல் நெருப்புப் பொரிகள் தொங்குவதுபோல் நன்ருகச் செய்யப்பட்டிருந்தது. கமல அட்டிகையும் தங்கச் சங்கிலித் தொங்கட்டங்களும், மெல்லியதாக இருக்க இதற்கு நடுவில் சிகப்புக்கள் பெரியதாக இருந்தது. ஒரு புதினுசு அழகாக இருந்தது. இந்த அட்டிகை தொங்கட்டங்கள் உள்பட சுமாருக்கு நாலு விரல் அகலத்துக்கு இருந்தது. இதை அணிந்திருந்த பெண் நல்ல சிகப்பு; சுமார் உயரம். கழுத்து இந்த நகைக்கு ஏற்றுப்போல், உருண்டு நீண்டு இருந்தது. இதை அவள் கழுத்தில் சற்று பிகுவாகவே போட்டிருந்தாள். அவள் கழுத்தில் இந்த நகை சோபையுற்று விளங்கிற்று என்று சொன்னாலும் பொருத்தமாக இருக்கும். இதைத் தவிர அவள் கழுத்தில் வேறு நகைகள் போட்டுக்கொள்ளவில்லை; போட்டுக்கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. இந்த நகைக்கு ஏற்ப அவள் அலங்காரமும் இருந்தது. ஆழ்ந்த சிகப்பு நிறப் புடவையில், சிறிய நக்ஷத்திரங்கள்போல் வெள்ளி சரிகையில் ஆங்காங்கே வேலை செய்திருந்த பட்டுப் புடவை கட்டி இருந்தாள். கரைக்கு, இரண்டு, அல்லது மூன்று விரல் அகலத்திற்கு, ஆடம்பரம் இல்லாமல் வெள்ளிச் சரிகை வேலை செய்திருந்தது. தலைப்புக்கும் அப்படியே. கைக்குச் சிகப்புப் பட்டுப் 'பைபிங்' வைத்துத் தைக்கப்பட்ட வெள்ளைப் பட்டுச் சட்டை போட்டிருந்தாள். கையில் ஒரு வைர வளையலும், நல்ல சிகப்பு நிறமான கண்ணாடி வளையல் ஒன்றும் போட்டிருந்தாள். காதில் சிறிய கமலத்தோடு; இதில் நடுவில் ஒரு சிறிய சிகப்பு வைத்துக் கட்டி இருந்தது. இவள் மூக்குக் குத்தி மூக்குத்தி போட்டுக் கொள்ளவில்லை. தலையில், அடர்ந்து, கறுத்துச் சுருண்டு இருந்த கூந்தலை முன் நெற்றியில் சற்றுப் புறளும்படியாகத் தளர்த்தியாகவே வாரிக் கட்டி இருந்தாள். இதைப் பின் பக்கம் இலேசாக முறுக்கிக் கொண்டை போட்டிருந்தாள். . கொண்டையில், இலை மாதிரியில் செய்யப்பட்ட, கமலங்கள் இழைக்கப்பட்ட கொண்டை ஊசி ஒன்றை சாய்வாக ஒரு புறம் சொருகி இருந்தாள். இதன் அருகில் ஆழ்ந்த சிகப்பு நிறமான ரோஜாப் பூ ஒன்றை, ஒத்தை இலையுடன் பறித்துச் சொருகிக் கொண்டிருந்தாள். நான் முதலில் பூப்பட்டில் செய்ததோ என்றுகூட எண்ணினேன். சிரமப்பட்டுத்தான் சிங்காரம் செய்து கொண்மருந்தாள். ஆனல் அது சிரமத்திற்கு ஏற்ற பலனை அளிக்கும் அலங்காரம் என்றே கூற வேண்டும். அந்தப் பெண்ணின் உருவம் இன்னும் என் கண் முன் நிற்கிறது. மற்றைய விஷயங்கள் அடுத்த கடிதத்தில்

கொசு வலைகள்.



பிரத்யேக வலுவான வெள்ளை வலைகளாலானவை. நல்ல தையல். நீடித்துழைப்பவை. வெளுத்த பச்சை, நீலம், சிகப்பு, மஞ்சள் முதலிய பல கலர்களிலும் கிடைக்கும். வெள்ளையா கலரா என்பதைக் குறித்தெழுக.

நீளம் அடி	அகலம் அடி	உயரம் அடி	சாதா ரூ.	உயர்ந்தது ரூ.	மேலானது ரூ.
6	$3\frac{1}{2}$	$3\frac{1}{2}$	1-4	1-8	2-4
6	4	4	1-8	1-12	2-6
$6\frac{1}{2}$	$4\frac{1}{2}$	$4\frac{1}{2}$	1-12	2-4	2-12
7	5	5	2-4	2-12	3-4
$7\frac{1}{2}$	6	6	2-12	3-4	4-4

தபால் செலவு தனி. பாக்கிங் இலவசம். இலவசம் ஏககாலத்தில் மூன்று வலைகள் வாங்குவோருக்கு 6X4X4 வலை ஒன்று இலவசம்.

Bally Mosquito Net Factory,
P. O. Bally Dist. HOWRAH.

சிறந்த கூந்தல் ஆகாரம்

உடலுக்கு எப்படி நல்ல உணவு அவசியமோ அதே மாதிரி கூந்தலுக்கும் சிறந்த ஆகாரம் அவசியமானது. எனவே உலகப்புகழ்பெற்ற காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்) உபயோகியுங்கள். கூந்தலின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு அத்யாவசியமான சத்துக்கள் பல சேர்ந்தது. மூளைக்குக் குளிர்ச்சி; துல்லிய மணம் நிறைந்தது.

விலை புட்டி 1-க்கு ரூ. 1.
,, 3 புட்டிகள் ரூ. 2-10.

வி. பி. சார்ஜ் தனி.

தபால் செலவுக்காக அரையணு ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு சாம்பிள் இலவசம்.

ப்ராசீன மலர்களின் சுவாசனையும், புத்தப் புதிய இனிமையும் வாழ்விற்கு மகிழ்ச்சியூட்டுபவை; இவ்வளவையும் கீழ்க்கண்டதன் வாசனையில் நன்கு அனுபவிக்கலாம்.

ஆட்டோ டில்பஹார்

(ரிஜிஸ்டர்ட்)

ஒரு சில துளிகள் பல நாட்களுக்கு அழியாத வாசனையூட்டும்; ஏனெனில் ஆட்டோ டில்பஹாரில் விரைவில் ஆவியாக மாறிவிடும் ஆல்கஹால் கிடையாது.

விலை ¼ அவுன்ஸ் ரூ. 1-4. 1 டிராம் 12 அணு.

தபால் செலவு தனி.

சோல் ஏஜெண்டுகள்:—

The Anglo Indian Drug & Chemical Co
BOMBAY 2.

நஞ்சன்கூடு பல்பொடி ப்ராக்டெரியின்

ஜி. ஏஸ். டி. **கூலாயில்** வைட்ஸ் ஸால்

சிறந்த ஸ்நானத் தைலம்

அணு 3 யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதருஸ். ரூ. 1.

(முக்கிய ஊர்களில் டிப்போ ஏற்படுத்துகிறேம்)

போலிகளைக் கண்டு உஷார்!!!

அமிர்தாஞ்சனம்

சகல வலிகளையும் போக்கும் இந்திய திவ்யாமிர்தம்

அமிர்தாஞ்சனம் லிமிடெட்.

பம்பாய், மதராஸ், கல்கத்தா

மின்சாரரசம்

சகல வியாதிகட்கும் தேவாமிருதம் போன்றது.
புட்டி 1-க்கு ரூபா
மின்சார ரசம் கம்பெனி, (லிட்)
சேலம்,

இந்தியத் தேத்தண்ணீரால்



தேக திடத் ‌த விருத்தி செய்

சரீரம் ஆலயத்திற்கொப்பாக அடிக்கடி சொல்லப்படுகிறது. அதை நம்பி நாம் நம் சரீரத்தை சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் திடமாயும் வைத்துக் கொள்ள முயலுகிறோம். களைத்த சரீரமோ அல்லது சுறுசுறுப்பில்லாத மனமோ இயற்கையான நிலைமையிலிருப்பதில்லை. அவைகளை சரியான நிலைமையில் வைத்துக்கொள்ள ஆரோக்கியமான பழக்கங்களைப் பின்பற்ற வேண்டும்.

நம்முடைய வீரியம் குறையாமல் ஒரே நிலைமையில் வைத்துக்கொண்டு வருவதற்கும் தேக திடத்தை விருத்தி செய்வதற்கும் தேத்தண்ணீரை வழக்கமாக அருந்துவதை விட சிலாக்கியமான வழி வேறொன்றுமில்லை.

இந்திய தேயிலை மிகவும் பரிசுத்தமானது. மனித சரீரத்திற்கு யாதொரு கெடுதலும் செய்யாதது.

தேத்தண்ணீர் செய்யும் முறை—சுத்தமான தண்ணீரை கொதிக்க வை. உலர்ந்த பாத்திரம் ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீ ஸ்பூன் வீதமும் அதிகமாக ஒரு ஸ்பூனும் நல்ல இந்திய தேயிலையைப் போட்டு உடனே கொதிக்கும் ஜலத்தை விடு. ஐந்து நிமிஷம் கழித்து வடிக்கட்டி பாலையும் சர்க்கரையும் சேர்த்துக் கொள்ளவும்.

இந்தியாவின் சந்தோஷமும் பெருமையும் –

இந்திய தேயிலையே

IK 89

Regd. No. 2514.

"சுதேசமித்திரன்"

தங்க ஜூபிலி

பவுண்டன் பேனா

நீடித்து உழைக்கக் கூடிய விதமாய்
14 காரட் பொன் நிப் இருடிய
முள்ளது. கண்ணைப் பறிக்
கும் மஞ்சள் நிறம்.
பொன் கிளிப்புடன்
சேர்ந்தது.

விலை ரூபா 3-12-0

எல்லா "மித்திரன்" ரெயில்வே
புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

"சுதேசமித்திரன்" புத்தகசாலை,

சென்னை.

Printed and Published by [illegible] Viswanatha Iyer [illegible] at the Swadesamitran Power Press, Mount Road, Madras—Editor C. R Srinivasan B. A.